உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 05 வியாழக்கிழமை (22.09.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 300



07

300 பேருக்கு மூக்குக் கண்ணாடிகள்



21

அணுமின் நிலையத்தை மூடக்கோரி தீர்மானம்



25

ஆட்டத்தில் மாற்றம் தேவை

# இலங்கை அரசிடம் மாற்றம் தெரிகிறது

## இருந்தாலும் தீர்வைத்தர அதற்கு மனமில்லை என்கிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

- அம்பாறையிலிருந்து சலீம் -

அம்பாறை, செப்ரெம்பர் 22

சர்வதேச அழுத்தம் மற்றும் தமிழ் மக்கள் ஓரணியில் திரண்டிருப்பதன் காரணமாக, தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் அரசின் போக்கில் இப்போது மாற்றம் தெரிவதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது. "பேசிப் பேசிக் காலத்தை இழுத்தடிக்க முடியாது; ஆக்கபூர்வமாக ஏதாவது செய்தே ஆகவேண்டும் என்ற நிலைக்கு அரசு வந்துள்ளது. அதற்காக இனிமேல் காலத்தை அரசு இழுத்தடிக்காது என்று சொல்லமாட்டேன். ஒரு தீர்வைக் கொடுப்பதற்கு அரசுக்கு இன்னும் மனமில்லாமல்தான் இருக்கிறது" என்று தெரிவித்தார் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை மாநகர சபைக்கான தேர்தல் நாளை நடைபெறுகிறது. அதற்கான தீவிர பிரசாரத்தில் கூட்டமைப்பு ஈடுபட்டுள்ளது. கல்முனை 2ஆம் பிரிவில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றியபோதே நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் பக் 27

## போர்க்குற்ற விசாரணை: ஐ.நாவில் இன்று பிரேரணை

யாழ்ப்பாணம், செப். 22

சுவிற்சர்லாந்து தலைநகர் ஜெனிவாவில் தற்போது நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 18ஆவது கூட்டத்தொடரில், இலங்கைக்கு எதிரான பிரேரணை ஒன்று இன்று சமர்ப்பிக்கப்பட உள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றம் தொடர்பில் பக் 27

## தலைவர்களுடன் ஜனாதிபதி சந்திப்பு

நியூயோர்க், செப். 22

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 66ஆவது கூட்டத் தொடரில் கலந்துகொள்வதற்காக வந்துள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இங்கு பல்வேறு நாடுகளின் பக் 27



'கிளிங்ரன் குளோபல் இனிஷியேட்டிவ்' மாநாட்டில் மஹிந்த

# ஜே.வி.பிக்குள் பிளவு புதிய கட்சி விரைவில்

கொழும்பு, செப். 22

உட்கட்சிப் பூசல்களால் மக்கள் விடுதலை முன்னணி இரண்டாகப் பிளவுபடும் நிலைமையை எதிர்நோக்கியுள்ளது. ஜே.வி.பியின் முன்னணி உறுப்பினர்கள் சிலர் பிரிந்து சென்று புதிய அரசியல் கட்சியொன்றை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருக்கின்றனர்.

தேசிய அரசியல் தொடர்பான கட்சியின் கொள்கைகளில் காலத்துக்கு ஏற்ற மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு கட்சியின் தற்போதைய தலைமை மறுப்பதே பிளவுக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

தேசிய அரசியலில் ஜே.வி.பி. கடந்த காலங்களில் எடுத்த முடிவுகள் தவறான பிரதிபலன்களைத் தந்திருப்பதாகவும், அதனால் ஏற்பட்டிருக்கும் பெரும் பின்னடைவைச் சீர்செய்ய அடிமட்டத்திலிருந்து பக் 27

### தமிழர் பிரச்சினை காரணமல்ல

தமிழர் பிரச்சினை தொடர்பான கொள்கைகள் பற்றி எமது கட்சிக்குள் எந்தவித பிரச்சினையும் இல்லை. கட்சி உட்கட்டமைப்புக்குள் ஏற்பட்ட ஒரு பிரச்சினையே இப்படியான நிலைமைக்கு கொண்டுவந்துள்ளது. இதன் உண்மை நிலைமையை விரைவில் நாட்டுக்கு அறிவிப்போம். பக் 27

## புலிகளிடமிருந்து அரசு எடுத்த ரூ. 5,000 கோடி தங்கம் எங்கே?

"விடுதலைப் புலிகளிடம் இருந்து இரு கொள்கலன்களில் 5ஆயிரத்து 800 கோடி ரூபா பெறுமதியான தங்கம் கைப்பற்றப்பட்டதாக இராணுவத்தின் முன்னாள் தளபதிகளுள் ஒருவரான சவேந்திர சில்வா கூறியுள்ளார். அந்தத் தங்கம் எங்கே? மத்திய வங்கியின் புலனாய்வுப் பிரிவுக்கு எவ்வளவு கூடுதலான அதிகாரம் இருந்தும் இவை தொடர்பாக ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை?" - என்று நாடாளுமன்றத்தில் நேற்றுக் கேள்விக் கணைகளால் துளைத்தார் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க. *(முழுமையான விவரம் 2ஆம் பக்கத்தில்)*

## ஈழத் தமிழரைத் திருப்பி அனுப்ப டில்லி நீதிமன்றம் தடை உத்தரவு

இந்தியாவில் கடந்த 20 வருடங்களாக வசித்து வந்த ஈழ அகதி ஒருவரை இலங்கைக்கு நாடுகடத்துவதற்கு டெல்லி நீதிமன்றம் தடை விதித்துள்ளது. தன்னைத் திருப்பி அனுப்பினால் உயிராபத்து இருக்கிறது பக் 27

## சிங்களக் குடியேற்றம் வன்னியில் சரிதானா?

முல்லைத்தீவு, கொக்கிளாய்ப் பகுதியில் சிங்களக் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டமை குறித்துக் கடுமையான விமர்சனங்கள் எழுப்பப்பட்டுவருகின்றன. இது தொடர்பில் அரசியல் கட்சித் தலைவர்கள் என்ன தெரிவிக்கிறார்கள்? இங்கே அவர்கள் தெரிவித்த கருத்துகள்:



### ஏற்றுக்கொள்ள முடியாது

"அரசு இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை வழங்கிவிட்டு எவர் வேண்டுமானாலும் எங்கும் வாழலாம் என்ற பல்லவியைப் பாடினால் அது பொருத்தமாக இருக்கும். மாறாக, சர்வாதிகாரத்தைப் பயன்படுத்தி பலவந்தமாகக் குடியேற்றுவதை எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. தமிழர் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களை முன்னெடுப்பதாகவிருந்தால், முதலில் தமிழ் மக்களின் கருத்துகளை அரசு கேட்டறிய வேண்டும். அதன் பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் கருத்துகளைப் பரிமாறிக்கொள்ள வேண்டும். மாறாக சமரசம் பேசிக்கொண்டே சர்வாதிகாரத்தைப் பயன்படுத்தி தமிழர் பிரதேசங்களை ஆக்கிரமிக்க முனைந்தால், பேச்சுகள் மீண்டும் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது" - என்றார் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் ஜயலத் ஜயவர்தன.

### திட்டமிட்ட இனஒழிப்பு



"முல்லைத்தீவு மாவட்டத்தில் சிங்கள குடியேற்றம் மட்டுமல்ல, சிங்கள பிரதேச செயலகப் பிரிவுகளும் அமைக்கப்பட்டுள்ளன. அரசு எம்முடன் பேச்சுகளை முன்னெடுக்கும் அதேவேளை, சில நகர்வுகளையும் முன்னெடுத்துச் செல்வதானது அரசின் நேர்மையற்றத் தன்மையை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது. சிங்களக் குடியேற்றம், நில அபகரிப்பு ஆகியவற்றை தடுத்து நிறுத்தும் நடவடிக்கைகளை எவ்வாறு முன்னெடுப்பது என்பது தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆராயும். தமிழர் தாயகப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களை அனுமதிக்க முடியாது. அரசு திட்டமிட்டு இன ஒழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்கின்றது" - என்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்.



### சிங்கள மயப்படுத்தல்

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு வாய்மூலம் பேச்சு நடத்தும் இந்த அரசு தனது கொடிய கைகள் மூலம் திட்டமிட்ட இன ஒழிப்பு நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளது. வடக்கில் குடிசனப் பரம்பலை செயற்கையாக மாற்றியமைப்பதற்கு இந்த அரசு முயற்சிக்கின்றது. இதன் ஓர் அங்கமே முல்லைத்தீவு, கொக்கிளாய்ப் பகுதியில் இடம்பெற்றுள்ள சிங்களக் குடியேற்றமாகும். நாட்டை சிங்கள மயப்படுத்தும் முனைப்புடன் செயற்படும் அரசு, தனது திட்டம் நிறைவடையும்வரை பேச்சு என்ற போர்வையில் சர்வதேசத்தையும், தமிழ்த் தலைமைகளையும் ஏமாற்றிவருகின்றது என்பது தெட்டத்தெளிவு" - என்றார் ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன்.

### நேர்மையற்ற செயல்



"போர் காரணமாகச் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்த மக்களுக்கு மென்மேலும் துன்பங்களைக் கொடுக்க அரசு முயற்சிக்கின்றது. இடம்பெயர்ந்த மக்கள் இன்னும் முழுமையாக மீளக் குடியமர்த்தப்படவில்லை. வீடுகளின்றி அந்த மக்கள் அவல வாழ்க்கையை வாழ்கின்றனர். இவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்காமல் தமிழர் பிரதேசங்களை ஆக்கிரமிப்பதற்கு அரசு முயற்சிக்கின்றது. இது ஒரு நேர்மையற்ற செயலாகும். தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கப்படும் என்ற நோக்குடன் பேச்சுகளை முன்னெடுத்துள்ள அரசு, திட்டமிட்டு சிங்களக் குடும்பங்களை குடியமர்த்தி எதனை சாதிக்க முயற்சிக்கின்றது?" - என்றார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ரயில வேகத்தை ஒரு நிமிடம் அதிகரிக்க 3,500 லட்சம் ரூபா செலவிடப்பட்டது

## நாடாளுமன்றில் கணக்குக் காட்டினார் அமைச்சர்

அதிவேக ரயில் பாதை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஒரு நிமிட நேரத்தை மிச்சப்படுத்துவதற்காக மூவாயிரத்து ஐநூறு லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது. என்ற விடயத்தை தயாசிறி ஜயசேகர நேற்று நாடாளுமன்றில் அம்பலப்படுத்தினார்.

நேற்று நாடாளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் தயாசிறி ஜயசேகர போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கமவிடம் கேள்வி ஒன்றை எழுப்பினார்.

✱ 2011ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்ட காலி - மாத்தறை அதிவேக ரயில் பாதையின் தூரம் எவ்வளவு?

✱ இந்தப்பணிகளை நிறைவேற்றிய நிறுவனத்தின் பெயர் என்ன?

✱ இந்தத்திட்டத்துக்கு செலவிடப்பட்ட தொகை எவ்வளவு? என்று தயாசிறி ஜயசேகர அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.

பதில் அளித்த பிரதிப் போக்குவரத்து அமைச்சர் ரோகண திஸாநாயக்க தெரிவித்ததாவது:

மாத்தறைக்கும் காலிக்கும் இடைப்பட்ட 44 கிலோமீற்றர் தூரப்பாதை அதிவேக பாதையாக நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது. இர்கோம் இன்ரநஷனல் என்ற பெயருடைய இந்திய நிறுவனம் வேலையைப் பொறுப்பேற்றுச் செயல்படுத்தியது. இதற்காக 35 மில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்பட்டது என்றார் அமைச்சர்.

இதோடு விட்டு விடத்தயாராக இல்லை தயாசிறி. கௌரவ அமைச்சர் அவர்களே 44 கிலோமீற்றர் தூரத்துக்கு 35 மில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்பட்டுள்ளது. இதனால் நமக்கு ஏற்பட்ட நன்மை என்ன என்று கேட்டார். தயாசிறி.

பிரதி அமைச்சரும் உண்மையை கக்கிவிட்டார். ''மாத்தறைக்கும் காலிக்கும் இடையில் முன்பு 50 நிமிட நேரம் பிடித்தது. இதனை அதிவேகப் பாதையாக மாற்றி அமைத்ததின் பின்னர் 40 நிமிடங்களில் சென்றடைய முடிகின்றது'' என்றார் பிரதி அமைச்சர்.

இது போதாதா தயாசிறிக்கு கணக்கு போட்டுப் பார்த்தார் ''10 நிமிட நேரங்களை மிச்சப்படுத்த 35 மில்லியன் அமெரிக்க டொலர் என்றால் ஒரு நிமிடத்தை மிச்சப்பிடிக்க மூவாயிரத்து ஐநூறு லட்சம் ரூபாவை செலவிட்டதன் மூலம் அரசு சாதனை படைத்துவிட்டது அல்லவா?'' - என்றார் தயாசிறி ஜயசேகர.

தடியைக் கொடுத்து அடியை வாங்கிக் கொண்டது போலாகி விட்டது பிரதி அமைச்சருக்கு.

### அளவ்வை ரயில் விபத்து தொடர்பாக மூவர் குழு

அமைச்சரை இக்கட்டான நிலைக்குத் தள்ளிவிட்ட தயாசிறி ஜயசேகர சபையை அளவ்வையில் நடைபெற்ற ரயில் விபத்தின் பக்கம் திருப்பிவிட்டார்.




அதாவது முன் எப்போதும் இல்லாத வகையில் பைபர் திரையின் மூலம் ரயில் எஞ்சின் முன் பக்கம் உருவாக்கப்பட்டதாக அறிகின்றோம். இந்த ரயில் எஞ்சின்கள் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவை. இது தொடர்பாக இந்தியாவுடன் தொடர்பு கொண்டீர்களா? அப்பாவிகளான ரயில் சாரதிகள் இருவர் உயிர் இழந்துள்ளனர். இதற்கு என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள் என்று கேள்வி எழுப்பினார்.

இந்தக் கேள்வியை சிறிதும் எதிர்பாராத அமைச்சர் ஒருவாறு சமாளித்தார். அதாவது எல்லா இயந்திரங்களும் தகுதியான பொறியியலாளர்களினால் பரீட்சிக்கப்பட்டு பொருத்தமானது என்று உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே கொண்டு வரப்பட்டன. அதேவேளை அளவ்வை ரயில் விபத்து தொடர்பாக சுதந்திரமான விசாரணை நடத்தி அறிக்கை செய்வதற்கான மூவர் குழு ஒன்றை அமைச்சர் நியமித்துள்ளார் என்று கூறிமுடித்துக் கொண்டார் பிரதி அமைச்சர்.

நாடாளுமன்றம் நேற்று சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியது.

வழமைபோல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பிரதேச மக்களின் தீர்க்கப்படாத பிரச்சினைகள் தொடர்பான மனுக்களை சபையில் சமர்ப்பித்தனர். இந்த மனுக்களை பரிசீலனைக்குழுவுக்கு பாரப்படுத்தும்படி பணிப்புரை விடுத்தார் சபாநாயகர்.

### கேட்கப்படாத கேள்விகள் பதில் இல்லாத வினாக்கள்

நேற்றைய ஒழுங்குப் பத்திரத்தின்படி வாய்மூல விடைக்காக 15 வினாக்கள் கேட்கப்பட்டிருந்தன.

ஆனால், கேள்வி நேரத்தின் போது கேள்விகளைக் கேட்பதற்கு குறிப்பிட்ட உறுப்பினர்கள் சபையில் இல்லாததினால் பதில்கள் சபாபீடத்திலேயே சமர்ப்பிக்கப்பட்டன. இதனால் இடைக் கேள்விகளும் சுவையான விவாதங்களும் இல்லாமல் போயின.

### பாகிஸ்தானில் டெங்கு நுளம்பை ஒழிக்க இலங்கை உதவி

மாத்தறை மாவட்ட ஐ.தே.க. உறுப்பினரான புத்திக்க பத்திரன டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக கேள்வி எழுப்பினார். நாளுக்கு நாள் டெங்கு நோய் பாதிப்பு அதிகரித்து வருவதாகக் கூறினார்.

இதனை வன்மையாக மறுத்தார் பிரதி சுகாதார அமைச்சர் லலித் திஸாநாயக்க. ''நாளுக்கு நாள் டெங்கு பாதிப்பு இருந்து வருகின்றது. விசேடமாக ஜனாதிபதி செயலணி மூலம் நடவடிக்கைகள் திருப்திகரமாகவே நடைபெறுகின்றன. இங்கு டெங்கு நோய் ஒழிப்பு நடவடிக்கைகள் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்படுவதால் பாகிஸ்தான் அரசு கூட தமது உதவிகளைக் கேட்டுள்ளது'' என்றார் பிரதி அமைச்சர்.

### அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் - கொசு அடிக்கவா?

புத்திக பத்திரன ஒரு ஆலோசனையை முன்வைத்தார். ''டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் தாமும் இணைந்து செயல்பட அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள் முன்வந்துள்ளனர். அவர்களையும் இந்தத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளலாம் அல்லவா? என்றார்.

''இப்பொழுது இப்படிக் கூறுவீர்கள். நாம் அப்படிச் செய்தால் எங்கள் அறநெறிப் பாடசாலை ஆசிரியைகள் கொசு அடிக்கவா வந்தார்கள் என்று நீங்களே கேட்பீர்கள். எனவே அவர்களை விட்டு விடுவோம்'' என ஆலோசனையை நிராகரித்து விட்டார் பிரதி சுகாதார அமைச்சர் லலித் திஸாநாயக்க.

### மூன்று சட்ட வரைபுகள் மீது சமகாலத்தில் விவாதம்

கல்வி அமைச்சரும் பொருளாதார விற்பன்னருமான பந்துல குணவர்தன நேற்று நாடாளுமன்றத்தில் மூன்று சட்ட வரைவுகளை முன்வைத்தார்.

✱ நிதித் தொழில் சட்ட மூலம்

✱ பணம் தூய்தாக்கல் தடைத் திருத்தச் சட்டம்

✱ பயங்கரவாதி நிதி ஒடுக்குதல் மீதான சமவாய திருத்தச் சட்டம்.

என மூன்று சட்ட வரைவுகள் மீதான வரைபும் சபையில் சூட்டைக் கிளப்பியது.

### கே.பி.யிடம் கைப்பற்றிய கப்பல்களை கொண்டுவாருங்கள்

''பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு நிதி சேர்ப்பதோ நிதி வழங்குவதோ தேசத்துரோகமான செயல். அதனை யார் செய்தாலும் தண்டிக்கப்பட வேண்டும். சர்வதேச பயங்கரவாதியும், புலிகளின் பல ஆயிரம் கோடி பெறுமதியான சொத்துக்களின் ஏக உரிமையாளருமான குமரன் பத்மநாதன் அதாவது கே.பி. இன்று எங்கே இருக்கிறார்?

ஜனாதிபதியின் செல்லப் பிள்ளையாக சுதந்திரமாக நடமாடுகின்றார். அரச ஹெலிகொப்டரில் வலம் வருகின்றார். இவர் என்ன தேசியவீரரா. அரசு ஏன் கே.பிக்கு அடிமைப்பட்டுள்ளது'' என்று கேள்வி எழுப்பினார் ரவி கருணாநாயக்க. அப்போது ஆளும் கட்சியின் பக்கம் இரண்டு உறுப்பினர்கள் தவிர எல்லா நாற்காலிகளும் காலியாகவே காணப்பட்டன.

### கோரம் கேட்டதால் ஏற்பட்டது அகோரம்

''அரசு முக்கியமான சட்ட வரைவுகளை முன் வைத்து விவாதம் நடத்துகின்றது. ஆனால், அமைச்சர்கள் எவரும் சபையில் இல்லை. சபையில் போதிய கோரம் இல்லை'' என்று சுட்டிக்காட்டினார் ரவி கருணாநாயக்க. இதனால் சபையில் கோரம் மணி ஒலிக்கப்பட்டது.

(26 ஆம் பக்கம் பார்க்க)

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் வானம் மேகமூட்டத்துடன் காணப்படக்கூடிய சாத்தியம்.

CSE
COLOMBO STOCK EXCHANGE
பங்குப்பரிவர்த்தனை யாழ்ப்பாணம்.
398/1, ஆஸ்பத்திரி வீதி. 2221455.
புரட்டாதி 21 2011
பங்குச்சந்தைச் சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 6,792.88↓
மிலங்கா(MPI) 6,138.33↓
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 2,008.46Mn
பங்குகளின் அளவு(No.) 115.51Mn
வியாபாரம்(No.) 18,725
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
ரேடியன் ஜெம்ஸ் 164.70
த பினான்ஸ் 45.40
சொப்லொயிக் கப்பிற்றல் 46.50
த பினான்ஸ்(x) 15.90
நவலொகா 4.50
குறைவு(Top 5 losers) - விலை Rs.
கலமசு 2,511.00
சமசன் இன்ரனசனல் 135.20
மெற்றோ பொலிரன் 28.10
ஈஸ்சேன் மேச்சன் 28.00
மஸ்கலியா 22.60
மேலதிக தகவல்கள்- www.csc.lk

# நிகழ்வுகள்

### வைசர் நினைவுப் பேருரை

ஸ்கந்தவரோதயக் கல்லூரி முன்னாள் அதிபர் வைசர் வி. சிவசுப்பிரமணியம் நினைவுப் பேருரை நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் இடம்பெறும்.

கல்லூரி அதிபர் ஆறு. திருமுருகன் தலைமையில் இடம்பெறும் இந்தநிகழ்வில் யாழ். பல்கலைக் கழக வவுனியா வளாக முதல்வர் பேரறிஞர் இ. நந்தகுமார் ''ஒரு நாட்டின் அபிவிருத்தியில் நல்லாட்சியின் பங்கு'' என்னும் தலைப்பில் நினைவுப் பேருரையாற்றுவார்.

வைசர் சி. சிவசுப்பிரமணியம் நினைவுரையை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தனும் நிறைவுரையை யாழ். பல்கலைக் கழகப் பேரவை உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவானந்தராஜாவும் நிகழ்த்துவர். (ஒ-55)

### சிறார்களில் உற்பத்திப் பொருள் கண்காட்சி

சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய சிறார்களால் தயாரிக்கப்பட்ட உற்பத்திப் பொருள்களின் கண்காட்சி நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி மூன்று தினங்கள் பராமரிப்பு நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

நிலையத் தலைவர் வை. இராசரத்தினம் தலைமையில் நடைபெறும் கண்காட்சியை சிறார்களும் பெற்றோர்களும் பார்வையிட்டு நிலைய சிறார்களை ஊக்குவிக்குமாறு அதன் செயலாளர் அறிவித்துள்ளார். (ஒ-207)

### குறுந்திரைப்பட வெளியீட்டு நிகழ்வு

யாழ் இளைஞர்களின் கூட்டு முயற்சியில் உருவான 'அவசரம்' குறுந்திரைப்பட வெளியீடு இன்று மாலை 4 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. இந்தக் குறுந்திரைப்பட முற்று முழுதாக யாழ். மண்ணிலே படப்பிடிப்பு நடத்தி உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் திரைப்படத்தை ம.கஜதீபன் இயக்க அபிராமன் இசையமைத்துள்ளார். சித்தார்த் மற்றும் யாழினி ஆகியோர் முக்கிய வேடமேற்று நடித்திருக்கின்றனர். (ஒ)

### செயலமர்வு

வடமாகாணப் பாடசாலைகளில் உள்ள ஆசிரிய ஆளணி, கல்விச் செயற்பாடுகளின் அபிவிருத்தி தொடர்பான செயலமர்வு இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு வடமாகாண கல்வித் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வில் வலயத் திட்டமிடல் பணிப்பாளர்கள், கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ம-236)

### பொதுக்கூட்டம்

வடக்கு கிழக்கு மாகாண அரச உத்தியோகத்தர் சங்கம் முல்லைத்தீவு கிளைச் செயற்குழு உறுப்பினர் தெரிவுக்கான பொதுக் கூட்டம் இன்று வியாழக் கிழமை முற்பகல் 10 மணிக்கு மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் முல்லைத்தீவு கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் டாக்டர் எஸ். கிரிஜகலா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவாந்துறையில் இராணுவத்திடம் அடிவாங்கிய இருவர் உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல்

நாவாந்துறையில் இராணுவத்தினராலும் பொலிஸாராலும், தாக்கப்பட்டவர்களில் இருவர் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுக்களை தாக்கல் செய்துள்ளனர். நாவாந்துறை வாசிகளான இருதயநாதன் வீனஸ் றெஜி மற்றும் வில்பரட் அப்பா ஹில்டர் ஆகியோர் சார்பில் சட்டத்தரணி மோகன் பாலேந்திரா மனுக்களைத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுக்களில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் ஜகத் ஜயசூரிய, இராணுவத்தின் யாழ். கட்டளைத் தளபதி மஹிந்த ஹத்துருசிங்க, பொலிஸ் மா அதிபர் இலங்கைக்கோன், இராணுவத்தின் 51ஆவது பிரிவுக் கட்டளை அதிகாரி ஜானக வெல்கம, 52 படைப்பிரிவு அதிகாரி அஜித் பல்லாவல, பிரதிப் பொலிஸ் மா அதிபர் நீல் தளுவத்த, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நெவில் பத்மதேவா, துணைப் பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எம்.சி.ஏ.பண்டார, பொலிஸ் தலைமையகப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா, பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் நதீகா, சட்ட மா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

வடக்கில் வாழும் ஒருவர் என்ற வகையில் மட்டுமல்லாது இலங்கையின் ஒரு குடிமகன் என்ற ரீதியில் அடிப்படை உரிமைகளையும் மொழி உரிமையையும் அனுபவிப்பதற்கான சகல உரித்துக்களும் தனக்கு இருக்கிறது என்று குறிப்பிட்டுள்ள முறைப்பாட்டாளர், அதே வேளை 'கிறீஸ் பூதம்' என்ற பேரில் அடையாளம் தெரியாதவர்களின் நடமாட்டம் காரணமாக வடக்கு, கிழக்கு மற்றும் ஏனைய பகுதிகளில் நிகழ்ந்த பல சம்பவங்கள் குறித்துத் தான் கவலையடைந்திருக்கிறார் என்றும் தெரிவித்துள்ளார்.

மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மர்ம மனிதர்களால் ஏற்பட்ட பயத்தைத் தொடர்ந்து நிகழ்ந்த சம்பவங்களால் மக்கள் தாக்கப்பட்டும் கொலை செய்யப்பட்டும் உள்ளனர். படையினரும் பொலிஸாரும் பலரைக் கைது செய்துள்ளனர். எனினும் அத்தகைய சம்பவங்களை அரச அதிகாரிகள் மறுக்கின்றனர்.

ஒகஸ்ட் 23ஆம் திகதி, புத்தளம், மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய இடங்களில் உள்ள பள்ளிவாசல்களின் நம்பிக்கை நிதியப் பிரதிநிதிகளுடன் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நடத்திய சந்திப்பில் - சட்டத்தைக் கையில் எடுப்பவர்களுக்கு உச்சபட்சத் தண்டனை படையினரால் விதிக்கப்படும் என்று கூறியிருந்தார் செய்திகள் வெளியாகி இருந்தன.

அதேதினத்தில் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி ஊடகங்களுக்குத் தந்த தகவலில் கத்திகள் பொல்லுகள் கற்கள் பெற்றோல் நிரப்பப்பட்ட போத்தல்களுடன், சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்போர் மீது தாக்குதல் நடத்த முற்படுபவர்கள் பயங்கரவாதிகளாகவே கொள்ளப்படுவார்கள் என்றும் அவர்களுக்கு மன்னிப்பே கிடையாது என்றும் கூறியிருக்கிறார்.

ஒகஸ்ட் 22ஆம் திகதி இடம்பெற்ற 'கிறீஸ் பூதம்' தொடர்பான பிரச்சினையைத் தொடர்ந்து இரவு 9 மணியளவில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களைக் கேட்டு நான் விழித்தெழுந்தேன். நிக்கோலஸ் மேரி மாதா ஆலயத்துக்கு அருகில் துப்பாக்கிச் சூடு நடப்பதையும் பார்த்தேன். நாற்பது ஐம்பது மக்கள் நாலு சந்தியில் அமைந்திருந்த காவலரண் நோக்கிச் செல்வதைப் பார்த்தேன். அவர்கள் பெரும் குரலில் சத்தமிட்டார்கள். அதேசமயத்தில் எச்சரிக்கைச் சத்தங்களையும் அந்தப் பகுதியில் கேட்டேன்.

இரவு 11.30 மணியளவில் எனது வீட்டுக் கதவு மீண்டும் மீண்டும் பலமாகத் தட்டப்பட்டது. உடனடியாக என்னை வெளியே வருமாறு சத்தமிடப்பட்டது. அதேவேளை கதவை உடைத்துக்கொண்டு உள்ளே வந்த படையினர் எனது சகோதரியின் கணவரையும் என்னையும் பிடித்து இழுத்துச் சென்றனர். அவர்கள் எங்களைத் தொடர்ந்து கட்டைகளாலும் பைப்புகளாலும் இரும்புக் கம்பிகளாலும் அடித்துக்கொண்டே இருந்தனர்.

பின்னர் நாங்கள் நாவாந்துறைச் சந்தைக்குக் கொண்டு செல்லப்பட்டோம். அங்கு கொண்டு வரப்பட்டிருந்த ஏனையவர்களுடன் சேர்ந்து மீண்டும் தாக்கப்பட்டேன். பொலிஸ் ஜீப் ஒன்றுக்குள் பலவந்தமாக ஏற்றப்பட்ட பின்னர் வெளியே வீசி எறியப்பட்டேன். அங்கு நின்ற பெண் பொலிஸ் கொன்ஸ்டபிளான நதீகா, எனது பிடரி, நெஞ்சு, ஆண்உறுப்பு என்பவற்றில் தனது பூட்ஸ் கால்களால் உதைந்தார். பின்னர் வில்லூன்றிப் பிள்ளையார் கோயில் முன்பாக வைத்து பஸ்களில் ஏனையவர்களுடன் சேர்த்து ஏற்றப்பட்ட நான் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டேன்.

சாட்சியம் பதிவு செய்யும் போது பொலிஸ் அதிகாரி தொடர்ச்சியாகச் சிங்களத்தில் எழுதிக் கொண்டிருந்தார். அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்குத் தெரியாது. அதில் கையெழுத்திடுமாறு கேட்கப்பட்டேன். அடுத்தநாள் ஒகஸ்ட் 23 அன்று யாழ்ப்பாணம் நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். நீதிமன்ற நடவடிக்கைகள் முடிந்த பின்னர் மாலை 6.30 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டேன்.

தமிழ் பேசும் மக்கள் வாழும் வடக்கு, கிழக்கில் நிர்வாக மொழியாகத் தமிழ் மொழி அரசமைப்பினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தபோதும் சிங்களத்தில் எழுதப்பட்ட வாக்குமூல அறிக்கையில் கையெழுத்திட என்னை வற்புறுத்தியதன் மூலம் அரசமைப்பு எனக்கு வழங்கிய மொழி உரிமை மறுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நிர்வாக மொழியாக சிங்களம் இருக்கும் நிலையில் பொலிஸ் நிலையங்களில் தமிழிலோ ஆங்கிலத்திலோ வாக்குமூலம் பெறக்கூடிய வசதிகளை ஏற்படுத்துவதற்கான எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

எனது அடிப்படை உரிமைகளான சித்திரவதையிலிருந்து விடுதலை, சட்டத்தின் முன்பான சமத்துவம் மற்றும் சம அந்தஸ்து எழுந்தமானமான கைதில் இருந்தான் விடுவிப்பு போன்ற உரிமைகள் பிரதிவாதிகளால் மீறப்பட்டுள்ளன. அத்துடன் அரசமைப்பின் உறுப்புரை 22(1), 22(2) ஆகியவற்றால் உறுதிசெய்யப்பட்ட மொழியுரிமையையும் மறுத்துள்ளனர் - என்றுள்ளது.

(உ)

# சொகுசு கார் பனையுடன் மோதியது ரெலோ பிரமுகர் தவநாதன் சாவு

## சாரதி படுகாயம்; அல்லைப்பிட்டியில் சம்பவம்



யாழ்ப்பாணம், செப்.22

அல்லைப்பிட்டிச் சந்தியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த சொகுசுகார் பனைமரத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

இந்தச் சம்பவத்தில் முன் ஆசனத்தில் இருந்து பயணித்தவர் அந்த இடத்திலேயே பலியானார். காரின் சாரதி படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இடம்பெற்றது. விபத்தில் நாரந்தனை வடக்கு ஊர்காவற்றுறையைச் சேர்ந்த அருமைநாதன் தவநாதன் (வயது - 62) என்பவரே உயிரிழந்தவர் ஆவார். படுகாயமடைந்தவர் திருநெல்வேலியைச் சேர்ந்த சே. சஜீபன் (வயது - 24) என்பவர் ஆவர். இவர் தான் காரின் சாரதி.

விபத்தில் மரணமானவர் ரெலோ இயக்கத்தின் முன்னாள் துணை முதல்வரும் தற்போதைய மத்தியகுழு உறுப்பினரும் ஆவார்.

ஊர்காவற்றுறையில் நேற்று இடம்பெற்ற உறவினர் ஒருவரின் மரணச் சடங்குக்காக சென்றபோதே இந்த அனர்த்தம் நிகழ்ந்தது. காரில் சாரதியுடன் இறந்தவரான தவநாதனும் பின் ஆசனத்தில் இன்னொருவருமாக மூவர் பயணித்துள்ளனர். பின் ஆசனத்தில் இருந்தவர் எந்தவித காயங்களுமின்றி தப்பிவிட்டார்.

ஊர்காவற்றுறை நீதிவான் திருமதி ஜோய் மகிழ் மகாதேவா மரண விசாரணை மேற்கொண்டார். சடலம் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. ஊர்காவற்றுறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-4-267-167)

# இந்தியாவில் பிறந்த 122 சிறுவருக்கு இலங்கைக் குடியுரிமைப் பத்திரங்கள்

யாழ்ப்பாணம்.செப்.22

இந்தியாவில் பிறந்த நெடுந்தீவைச் சேர்ந்த பிள்ளைகளுக்கான குடியுரிமைப்பத்திரங்கள் நேற்று புதன்கிழமை நெடுந்தீவு உதவி அரச அதிபர் பணிமனையில் வைத்து 122 பேருக்கு வழங்கப்பட்டன.

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சினால் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினால் செயற்படுத்தப்படும் நீதி நியாயத்தை சமமாக அணுகும் கருத்திட்டத்தின் அனுசரணையுடன் இந்தப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

கடந்த மாதம் இடம் பெற்ற நடமாடும் சேவையில் இந்தியாவில் இருந்து வந்த நெடுந்தீவு மக்கள் பலர் தமது பிள்ளைகளுக்கான குடியுரிமைப்பத்திரங்களுக்கு விண்ணப்பித்திருந்தனர்.

1992 இல் இடம்பெற்ற போர் காரணமாக நெடுந்தீவில் இருந்து சுமார் 250 க்கும் அதிகமான குடும்பங்கள் இந்தியாவுக்கு இடம் பெயர்ந்திருந்தன. தற்போது போர் ஓய்ந்துள்ள நிலையில் அவர்களில் சிலர் தாயகம் திரும்பி உள்ளனர்.

அவ்வாறு வந்த குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கான குடியுரிமைச் சான்றிதழ்களே நேற்று வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்டீன், மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், ஐ.நா. அபிவிருத்தித் திட்ட அலுவலர், அடையாள அட்டைகள் திணைக்கள உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர். (உ-7)


# 50 ஆவது ஆண்டு நினைவு நாள்



அமரர் முகாந்திரம் முதலியார்

**அத்தியார் அருணாசலம் -JP**

மண்ணுலகில்: 27.08.1887
நினைவலையில்: 22.09.1961

ஊரும் செழிக்க உள்ளம் மகிழ
உதித்த பெருமகனாரை
இந்நாளில் நினைவு கூருகின்றோம்

திரு.திருமதி ந.சிவகுமாரன் குடும்பம்
'அத்தி அகம்', நீர்வேலி.


# பனை வடலி எரிந்ததால் ஏற்பட்ட பதற்றம்

தென்மராட்சி, செப்.22

வடலிப் பனை திடீரெனத் தீப்பற்றி எரிந்ததில் மக்கள் மத்தியில் பதற்றம் ஏற்பட்டது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இருள் சூழும் வேளையில் சாவகச்சேரி நகர்ப் பகுதியில் உள்ள கண்டுவில் இரண்டாம் ஒழுங்கையில் இடம்பெற்றது.

மர்ம மனிதன் நடமாட்டத்தினால் பயபீதியுடன் வாழும் மக்கள் மாலை ஆறு மணியுடன் கதவுகளை மூடிவிட்டு வீட்டினுள் தங்கியிருப்பது தற்போதைய வழமையாகும். இந்த நிலையில் இரவு 7 மணியளவில் திடீரென வடலிப் பனை தீப்பற்றி அங்கே காணப்பட்ட சருகுகளும் சேர்ந்து எரிந்தபோதும் மக்கள் வெளியேவர அஞ்சினர்.

அப்போது அந்த வழியே வந்த ஒருவரும் இளைஞர்களில் சிலரும் சேர்ந்து தீயை அணைத்தனர்.

இதேவேளை வடலி மரத்துக்குக் கீழ் பெருமளவு சாராயப் போத்தல்களும், பியர் ரின்களும் காணப்பட்டன என்றும் தினமும் இவ்விடத்தில் இரகசிய மதுப் பிரியர்கள் அமர்ந்திருந்து தமது வேலையை முடித்துச் செல்வது வழமையென்றும் அவ்வாறானவர்களின் புகைத்தல் காரணமாகவே இந்தத் தீப்பிடித்த சம்பவம் நடந்திருக்கக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 ஆயிரம் வீட்டுத்திட்டப் பணிகள் ஆரம்பம்; இந்திய அரசின் ஒத்துழைப்பும் தேவை

## சபையில் அமைச்சர் விமல்

இந்தியா உறுதியளித்த 50 ஆயிரம் வீட்டுத்திட்டத்தின் முன்னோடித் திட்டமாக ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்த வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச, 50 ஆயிரம் வீடுகளை ஒரே நேரத்தில் கட்டிக் கொடுக்க அரசுக்கு விருப்பமுள்ள போதிலும், இந்திய அரசே அதனை செய்யவேண்டும் எனவும் கூறினார்.

நாடாளுமன்றில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க, இந்திய அரசால் உறுதியளித்தப்பட்டுள்ள வடக்கில் இடம்பெயர்ந்தவர்களுக்கான 50 ஆயிரம் வீட்டுத்திட்டம் தொடர்பாக வீடமைப்பு அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.

2010ஆம் ஆண்டு ஜூன் 8ஆம் திகதி இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதியிடம் வடக்கில் தமிழ் மக்களுக்கான 50 ஆயிரம் வீடுகளைக் கட்டுவதற்கு 24 பில்லியன் ரூபாவை வழங்க இந்திய அரசு இணங்கியதா என்றும், இதுவரை கட்டி முடிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை, அவற்றை பெற்றுக்கொண்டவர்களின் பெயர், இந்தியாவில் வழங்கப்பட்ட பணத்தொகை என்பன தொடர்பாக ரவி கருணாநாயக்க எம்.பி. அமைச்சரிடம் வினவினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் கூறியவை வருமாறு:

ஜனாதிபதி இந்தியாவுக்குச் சென்றிருந்தபோது வடக்கு இடம்பெயர் மக்களுக்காக 50 ஆயிரம் வீட்டுத்திட்டம் செய்து கொடுப்பதற்கு இந்திய அரசு இணக்கம் தெரிவித்தது.

இத்திட்டத்தின்கீழ் முன்னோடித் திட்டமாக ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்காக இந்திய அரசால் தெரிவு செய்யப்பட்ட இந்திய கம்பனியும் இலங்கைக்கு வந்துள்ளது.

இந்த ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கும் முன்னோடித் திட்டத்திற்குரிய பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன்படி இம்முன்னோடித் திட்டத்தின்கீழ் விதவைகள், வயோதிபர்கள் மற்றும் வறுமைக்கோட்டின்கீழ் வாழும் குடும்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். மீள்குடியேறியுள்ள மக்களிலும் தெரிவுசெய்யப்படுவர் - என்றார்.

இதனைக் கேட்டுக்கொண்டிருந்த எம்.பி. ரவி கருணாநாயக்க, ''ஆயிரம் வீடுகளுக்கு இவ்வளவு காலம் எடுக்கும் என்றால், 50 ஆயிரம் வீடுகளுக்கு எவ்வளவு காலம் எடுக்கும்'' எனக் கிண்டலான கேள்வி ஒன்றை சபையில் எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர், இந்த 50 ஆயிரம் வீடுகளையும் ஒரே சமயத்தில் நிர்மாணித்துக் கொடுக்க அரசுக்கு விருப்பம்தான். இருந்தபோதிலும், இந்திய அரசின் கையிலேயே உள்ளது என்று தெரிவித்தார்.

# 'அலுகோசு' பெயரை மாற்ற முடிவு

கொழும்பு, செப். 22

நீதி மன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்படும் குற்றவாளியை தூக்கிலிட்டு தண்டனையை நிறைவேற்றும் ஊழியர் 'அலுகோசு' என்ற பெயரால் அழைக்கப்படுவார். அவரது அந்தத் தொழிற்பெயரில் மாற்றம் செய்யப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் பீ.டபிள்யு.கொடிப்புலி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்; சிறைச்சாலை என்ற பெயரில் மாற்றம் செய்யப்படவேண்டியது அவசியமெனவும், ஆங்கிலேய ஆட்சியாளர்களால் 150 வருடங்களுக்கு முன்னர் அறிமுகப்படுத்தப்பட்ட 'அலுகோசு' என்ற பெயர் தற்காலத்துக்கு பொருந்தும் வகையில் மாற்றம் செய்யப்படவேண்டியுள்ளது எனவும் தெரிவித்தார்.

'அலுகோசு' பதவிக்கு இருவர் நியமிக்கப்பட்டிருந்தபோதிலும் தற்போது இப்பதவிகள் இரண்டுமே காலியாகவுள்ளன. இப்பதவிகளை நிரப்ப அடுத்த மாதத்தில் விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன.

வெற்றிடமாகவுள்ள இந்தப் பதவிகளுக்கு முன்னர் விண்ணப்பங்கள் கோரப்பட்டபோது ஆறுபேரே விண்ணப்பித்திருந்ததாகவும், அவர்களில் ஒருவர் மட்டுமே குறிப்பிட்ட பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டபோதிலும் அந்த நபர் கூட தமது பதவியை பொறுப்பேற்க இதுவரை முன்வரவில்லை எனவும் சிறைச்சாலைகள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

1976 ஆம் ஆண்டுக்கு பின்னர் மரண தண்டனைக் கைதிகளை தூக்கிலிட்டு மரண தண்டனை நிறைவேற்றும் நடவடிக்கை நிறுத்தப்பட்டதுடன் 'அலுகோசு' பதவி வகிப்பவரின் சேவையும் தடைப்பட்டது.

ஹம்பாந்தோட்டை உயர் நீதி மன்றத்தால் மரணதண்டனை விதிக்கப்பட்ட தங்காலையைச் சேர்ந்த சந்திரதாச என்ற கைதியே கடைசியாக 1976 ஆம் ஆண்டில் தூக்கிலிடப்பட்ட மரண தண்டனை கைதியாவார்.

# வீதி திருத்தப் பணி பூர்த்தி

நவாலி, செப்.22

நெல்சிப் திட்டத்தின் கீழ் புனரமைப்பு செய்யப்பட்டு வரும் நவாலி சின்னப்பா வீதியின் வேலைகள் நிறைவடையும் நிலையில் உள்ளன.

இந்த வீதி அமைப்புக்கு உலக வங்கி 80 லட்சம் ரூபா நிதியை ஒதுக்கியிருந்தது.

இதற்கமைய இந்தப் பகுதி மக்கள் தமது மதில்கள் வேலிகள் என்பவற்றை வெட்டியும் உடைத்தும் வீதி அகலிப்பு செய்து கொடுத் தமைத் தொடர்ந்து வீதி அகலிக்கப்பட்டு வருகின்றது.

இவற்றைக் கவனிக்கும் பணியில் பிரதேச சபையின் தலைவர், செயலாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஆகியோர் ஈடுபட்டுள்ளனர்.

(ம-100)

# யாழ்ப்பாணத்திலிருந்து மொனராகலை சென்ற தனியார் பேருந்தில் வெடிபொருள்கள் மீட்பு

கொழும்பு, செப்.22

யாழ்ப்பாணத்திலிருந்து மொனராகலைக்குப் பயணத்தை மேற்கொண்டிருந்த தனியார் பேருந்தில் சி4 ரக வெடிபொருள்கள் அடங்கிய பொதியொன்று கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேருந்தின் முன் புறத்தில் இந்தப் பொதி காணப்பட்டது. இதில் 610 கிராம் நிறை யுள்ள சி4 ரக வெடிபொருள்கள் வைக்கப்பட்டிருந்தன. மொனராகலையில் வைத்துப் பேருந்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது பொலிஸார் இந்த வெடிபொருள் அடங்கிய பொதியைக் கைப்பற்றினர்.

இது தொடர்பாகப் பேருந்து நடத்துநரிடம் விசாரணைகளை மேற்கொண்டபோது; கிளிநொச்சியில் வைத்துப் பேருந்தில் ஏறிய இராணுவத்தைச் சேர்ந்த ஒருவரே இந்தப் பொதியை வைத்ததாகக் கூறினார். மொனராகலையில் பேருந்து சோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது ஆள் திடீரெனத் தலைமறைவாகி விட்டதாகவும் அவர் பிபிலையைச் சேர்ந்தவரென்றும் நடத்துநர் மேலும் தெரிவித்தார். (க)

# பண்டிகைக்கால கொடுப்பனவுகள்

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளில் சேவையாற்றும் உத்தியோகத்தர், ஊழியர்களுக்கு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தால் தீபாவளி பண்டிகை முற்பணம் வழங்கப்பட உள்ளது.

இந்தப் பண்டிகை முற்பணத்தைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள விண்ணப்ப படிவங்களைப் பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட நிறுவனத் தலைவரூடாக எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ம-300)

# வாராந்த நிகழ்வு

வடமராட்சி, செப்.22

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்தி வரும் வாராந்த நிகழ்வு வரிசையில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 'தேவிபாகவதம்' என்னும் தலைப்பில் தொடர் சொற்பொழிவு நடைபெறும். இந்தச் சொற்பொழிவை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் நிகழ்த்துவார்.

(ம-236)

# அமெரிக்காவில் குடியேற முயன்ற 11 இலங்கையர்கள் நாடு கடத்தல்

சட்டவிரோதமாக அமெரிக்காவில் குடியேறத் திட்டமிட்ட 11 இலங்கையர்கள் மத்திய அமெரிக்காவில் உள்ள 'பெலிஸ்' நாட்டுப் பொலிஸாரால் கடந்த வாரம் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். அவர்களுக்கு மூன்று மாத கால சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்த நீதிமன்றம் மேலதிகமாக அவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 350 அமெரிக்க டொலர் குற்றப்பணம் செலுத்துமாறும் உத்தரவிட்டுள்ளது. அத்துடன் சிறை வாச முடிவில் அவர்களை நாடு கடத்து மாறும் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

திரைப்படமொன்றைத் தயாரிக்கப் போவதாகக் கூறி பெலிஸ் நாட்டில் தங்கியிருந்த 11 இலங்கையர்கள் அங்கிருந்து சட்டவிரோதமாக அமெரிக்காவில் குடியேறத் திட்ட மிட்டு வந்ததாகக் குற்றம் சாட்டியே பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

(த)


## வீடு விற்பனைக்கு

கோப்பாய் மத்தியில் பருத்தித்துறை வீதியில் கிறிஸ்தவ கல்லூரிக்கு சமீபமாக அமைந்துள்ள 'வயிரக்கண்டி' என்னும் 6 பரப்புக்காணியும் அதில் அமைந்துள்ள வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0771923997
0776608616

## காணி விற்பனைக்கு

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரிக்கு அருகில் 10 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

மேற்படி விவரங்களுக்கு 0750415417என்ற தொலைபேசி இலக்கத்தை நாடுங்கள்

## பாராட்டி நன்றி கூறுகின்றோம்

யாழ்/கொக்குவில் ஸ்தான சி.சி.த.க பாடசாலையில் கல்வி கற்று புலமைப் பரிசில் பரீட்சையில் 171 புள்ளிகளைப் பெற்று எமக்கும் பாடசாலைக்கும் பெருமை சேர்த்த



**செல்வி மனோஜிகா சுபாஸ்கரகுகமூர்த்தி**

அவர்களை

பாராட்டி வாழ்த்துவதோடு 2011 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 171 புள்ளிகளைப் பெற்று சித்தியடைவதற்கு அதிக அக்கறையோடு மேலதிக வகுப்புகள் நடத்தி எமது பிள்ளையின் கல்வி வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் வித்திட்ட பாடசாலை அதிபர், பெருமைமிகு **திரவியநாதன் யோகலக்சுமி** அவர்களையும், பெருமைமிகு வகுப்பாசிரியர் **சிவசோதி தவதேவி** அவர்களையும் மற்றும் பாடசாலை ஏனைய ஆசிரியர்களையும் மனமார வாழ்த்தி நன்றி தெரிவிக்கின்றோம்.

*3ஆம் வட்டாரம்,*
*பெருங்காடு, புங்குடுதீவு.*

பெற்றோர்
திரு.திருமதி சுபாஸ்கரகுகமூர்த்தி பிரதீபா

## அதிபர் வைசர் வி. சிவசுப்பிரமணியம்

(B.A.B.Sc., PGD, புவியியல் அறிஞர்)
*(முன்னாள் அதிபர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்)*

அவர்களின் 15 ஆவது நினைவுப் பேருரை



### அழைப்பு

காலம்:-
23.09.2011 வெள்ளிக்கிழமை
பிற்பகல் ஒரு மணி
இடம்:- கல்லூரி-
*அதிபர் சிவகுமாரன் மண்டபம்*

தலைவர்:-
ஆறு. திருமுருகன் அவர்கள் (அதிபர்)

நினைவுப் பேருரை : பேரறிஞர் திரு.இ.நந்தகுமார் (முதல்வர், வவுனியா வளாகம்)
விடயம் : "ஒரு நாட்டின் அபிவிருத்தியில் நல்லாட்சியின் வகிபங்கு"
நினைவுரை வழங்குநர்: திரு.தர்மலிங்கம் சித்தார்த்தன் *(ஸ்கந்தா ஸ்தாபகர் குடும்பம், முன்னாள் நா.உ.)*
நிறைவுரை: வைத்தியகலாநிதி சி.சிவானந்தராஜா *(பேரவை உறுப்பினர், யாழ். பல்கலைக்கழகம்)*

ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

14, கற்குளம், கொட்டடி,யாழ்ப்பாணம் என்ற முகவரியில் வசிக்கும் சிவலிங்கம் வினோத்குமார் என்பவரது தேசிய அடையாள அட்டை (811021750V) மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் என்பவை 18.09.2011 ஞாயிற்றுக்கிழமை அளவெட்டிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. இவற்றைக் கண்டெடுத்தவர்கள் 0770203399 இற்கு தொடர்பு கொள்ளவும்.

## அபூர்வ ஜோதிடம்

கொலஸ்ரோல், சிறுநீரகக்கல், மூச்சுத்திணறும் முட்டு, குழந்தை இன்மையை தரும் கெற்ப நோய்க்கான சாதனை படைத் துள்ள சிகிச்சை
சனி,ஞாயிறு: 8.30 am - 2.00 pm,
கிழமை நாள்: 3.00 pm -7.00 pm, T.P - 0773212740
உயரப்புல பிள்ளையார் கோயிலடி,
தபால்பெட்டி லேன், ஆனைக்கோட்டை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நல்லிணக்கம் தலையெடுக்க...

வவுனியாவில் உள்ள மெனிக்பாம் முகாம் அகதிகள் - இடம் பெயர்ந்தோர் விரைவில், இந்த வருட இறுதிக்கு முன்னர் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தைச் சேர்ந்த கோம்பாவில் பகுதியில் மீளக்குடியமர்த்தப்படுவர். இந்தத் தகவலைப் பாதுகாப்பு அமைச்சுத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, போரினால் பாதிக்கப்பட்டவர்களின் நலன்களைக் கவனிப்பதற்கென உருவாக்கப்பட்ட மீள்குடியேற்ற அமைச்சும் வருடக் கடைசியோடு மூடப்பட்டுவிடும் என்றும் அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

மெனிக்பாம் இடம்பெயர்ந்தோர் முகாமில் கடந்த சுமார் மூன்று வருடங்களாகத் தங்கியிருந்து பல கஷ்டங்களையும் இல்லாமைகளையும் சுமந்த, அனுபவித்த 2,097 குடும்பங்களைச் சேர்ந்த 7,394 மக்கள் தமது சொந்தப் பகுதிகளுக்குத் திரும்ப முடியாவிடினும், தமது சொந்தப் பிரதேசமான புதுக்குடியிருப்புக்குச் சென்று வசிக்க வாய்ப்பு உண்டாக்கப்பட்டுள்ளது குறித்து ஓரளவேனும் நிம்மதி கொள்வர்.

மேலும் கோம்பாவிலில் மீளக்குடியமர்த்தப்பட உள்ளவர்களில் முள்ளிவாய்க்காலைச் சொந்த இடமாகக் கொண்டவர்களும் அடங்குவர் என்று தெரிவிக்கப்படுகிறது. முன்னதாக முள்ளிவாய்க்கால் வாசிகளை அவர்களின் சொந்த மாவட்டத்தில் அதாவது முல்லைத்தீவு மாவட்டத்தில் மீளக்குடியமர்த்தப் போவதில்லை என்று அரசாங்க அதிகாரிகள் தெரிவித்து வந்தனர்.

எப்படியோ, முந்திய முடிவு மாற்றப்பட்டிருப்பது முள்ளிவாய்க்கால் பகுதியில் காலங்காலமாக வசித்து வந்த மக்களுக்கு ஓரளவு திருப்தியைத் தந்திருக்கும்; தமது சொந்த மண்ணில் மீண்டும் வசிக்கலாம் என்ற நிறைவை உண்டாக்கியிருக்கும்.

அரசாங்கம் இப்போது புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் ஏழு கிராம சேவையாளர்கள் பிரிவுகளிலும் கரைத்துறைப்பற்று பிரதேசத்தின் மூன்று கிராம சேவகர் பிரிவுகளிலும் மேற்கொண்டு வரும் கண்ணிவெடி அகற்றும் பணிகள் முடிவடையும் வரை சுமார் 7,394 பேர் கோம்பாவிலில் மீளக்குடியமர்ந்து அந்தப் பகுதியில் வசிக்கப்பழகிக் கொள்வர் என்று தாம் நம்புவதாகத் தேசிய பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் தகவல் வெளியிட்டுள்ளார்.

மேலும், மெனிக்பாம் முகாமில் உள்ளவர்கள், அனேகமாக அடுத்த மாதம் (ஒக்ரோபர்) இரண்டாம் வாரத்தில் கோம்பாவிலில் மீளக்குடியமர்த்தப்படுவர் என்று மீள்குடியேற்ற அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. திருகோணமலை சம்பூர் பிரதேசத்திலும் ஆகக்கூடியது இரண்டு மாதங்களுக்குள் மக்கள் மீளக்குடியேற்றப்படுவர் என்றும் அமைச்சு வட்டாரங்கள் மேலும் அறிவித்துள்ளன. அது மட்டுமன்றி, இந்த வருட இறுதியுடன் மீள்குடியேற்ற அமைச்சுக்கு மூடுவிழா நடத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எதுவானாலும்-

கடந்த சுமார் இரண்டரை வருடங்களாக மெனிக்பாம், மனித அவலத்தின் பெரும் சின்னமாக விளங்கியது என்பதில் மாற்றுக் கருத்துக்களுக்கு இடமிருக்க முடியாது. அங்கு தங்க வைக்கப்பட்டவர்களை தாய், தந்தையர், உடன்பிறந்தவர்கள் கூடச் சந்திக்க இயலாத கடுமையான தடுப்புவிதிகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. மெனிக்பாம் ஒரு சித்திரவதை முகாமோ என்று சந்தேகப்படும் அளவுக்கு அங்கு நடைபெறுவன எல்லாம் மூடுமந்திரமாகவே இருந்தது. சர்வதேச சமூகத்தின் கண்டனங்களே மிக அண்மைக்காலத்தில் இவ்விடயத்தில் ஆக்கபூர்வமான மாற்றங்களைக் கொண்டு வந்தது என்பது தவறன்று.

எனினும், மெனிக்பாம் முகாமில் தங்கவைக்கப்பட்ட, ஒரு வகையில் தடுத்து வைக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மக்கள், தமது வாழ்க்கை அந்தகாரத்துக்குள் வீழ்ந்துவிட்டது என்று நம்பிக்கை இழந்திருந்த வேளையில், தாம் மீளக்குடியமர்த்தப்பட உள்ளனர் என்ற செய்தி அறிந்து மன ஆறுதல் பெறுவர் என்பது நிச்சயம்.

மெனிக்பாம் மூடப்படுவதோடு, இலங்கையின் சரித்திரப் புத்தகத்தில் ஊற்றப்பட்ட கன்னங்கரிய மை அழிந்துவிடும் என்று நினைக்கலாகாது. இது மறக்கப்படக்கூடியதோ அன்றி மறைக்கக்கூடியதோ அன்று.

மேலும் கடந்த சுமார் ஒரு வருடத்துக்கு முன்னர், வன்னிப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்தவர்கள் இன்னும் தமது முந்திய (பழைய) இயல்பு நிலை வாழ்க்கைக்குத் திரும்பவில்லை. இது விடயத்தில் மந்திரத்தால் மாங்காய் வீழ்த்த முடியாது; கட்டம் கட்டமாகப், படிப்படியாகத்தான் முன்னேற்றம் காணலாம் என்று அரச தரப்புக் கூறலாம். ஆனால், பிரசாரத்துக்கும் அதனூடு வெளிநாடுகளின் உதவிகளையும் பெறுவதற்குமென எடுக்கப்படும் முயற்சிகள், நடவடிக்கைகள் மட்டும் போதாது.

பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை நிலையை முன்னேற்றுவதற்கான விரைந்து பயன்தரும் குறுகிய காலத் திட்டங்களைச் செயற்படுத்த வேண்டும். மீள்குடியமர்ந்தவர்களின் குடியிருப்பு, தொழில், வைத்திய வசதி போன்ற அடிப்படைத் தேவைகள் கூட கால், அரை மட்டங்களில் இழுபட்டுப் போய்க்கிடப்பதே உண்மைத் தோற்றமாக உள்ளது. இத்தகைய ஒரு நிலையில், மீள்குடியேற்ற அமைச்சை மூடுவது என்பது போரினால் பாதிக்கப்பட்டவர்களின் நலன்களை மீள்வளர்ச்சியை புறந்தள்ளுவதற்கான முன்னோட்டம் என்றே கொள்ளவேண்டியுள்ளது; சந்தேகம் எழுகிறது.

மெனிக்பாம் முகாமை மூடிவிடுவதால், அங்கிருந்து நரகவாழ்வு வாழ்ந்தவர்களை மீளக்குடியமர்த்துவதால், நாட்டில் நல்லிணக்கமும், நல்லுறவும் தாமாக பிறக்கமாட்டா, வளரமாட்டா.

இங்குவாழும் சகல இனங்களும் தமக்குரிய அரசியல் உரிமைகளை, வாழ்வுரிமைகளை ஒரு ஜனநாயக நாட்டில் ஊறு எதுவுமின்றி அனுபவிக்கிறோம் என மனம் நிறைந்து உணர்ந்து திருப்தி கொள்ள வகை செய்யப்பட வேண்டும். இனங்களுக்கிடையே, சமூகங்களுக்கிடையே, சந்தேகமும் பாகுபாடும், தொடராமல் தடுப்பதற்கு வகை செய்யக்கூடிய அரசியல் தீர்வு ஒன்று காணப்பட வேண்டும். அதற்கான இதயசுத்தியுடனான, அழுக்காறு கொள்ளாத மனப்பக்குவம் முதலில் ஆட்சியில் உள்ளவர்களுக்குப் பிறக்க வேண்டும். அப்போதுதான் இன நல்லுறவும் நல்லிணக்கமும் தலையெடுக்கும்.

# தேசிய ரீதியில் முதல் 10 இடங்களில் 3 வடக்கு மாகாண மாணவர்களுக்கு

### கல்வி வளர்ச்சியைக் காட்டுகிறது என்கிறார் மாகாணக் கல்விப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், செப்.22

புலமைப்பரிசில் பரீட்சையில் வடக்கு மாகாண மாணவர்கள் தேசிய ரீதியில் முதல் 10 இடங்களில் 3 இடங்களைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளனர். இது வட மாகாணத்தின் கல்வித்துறை வளர்ச்சிப் போக்கைக் காட்டுவதுடன் மீண்டும் வடமாகாணம் தேசிய ரீதியில் முன்னிலை பெறுவதற்கான சான்றாகவும் அமைந்துள்ளது.

இவ்வாறு வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் பி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டி வெளியிட்டுள்ள செய்தியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நடைபெற்று முடிந்த தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தேசிய ரீதியிலும், மாகாண ரீதியிலும் சாதனை படைத்த எமது பிள்ளைகளை வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் என்ற வகையில் மனதாரப் பாராட்டுகின்றேன்.

செல்வன் பரமேஸ்வரன் சேதுராகவன் 194 புள்ளிகளைப் பெற்றுத் தேசிய ரீதியில் 2 ஆம் இடத்தையும், தமிழ்மொழி மூல மாணவர்களில் 2 ஆம் இடத்தையும், வடமாகாணத்தில் 1 ஆம் இடத்தையும் பெற்றுள்ளார். யுத்த அனர்த்தங்களில் சிக்கிய இம்மாணவன் இவ்வாறு ஒரு சாதனை படைத்துள்ளமை அவருடைய பெற்றோர்களினதும் பிள்ளையினதும் மனவலிமையையும் விடாமுயற்சியையும் எடுத்துக் காட்டுவதாக அமைகின்றது. அவர் எமது மாகாணத்துக்கு பெருமை சேர்த்துள்ளார். அவரை நாம் அனைவரும் மனதாரப் பாராட்டுகின்றோம். அவருக்கு வழிகாட்டிய முல்லைத்தீவு வலய நெத்தலியாறு தமிழ் வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள் ஆகியோரும் பாராட்டப்படவேண்டியவர்கள். இனிவருங்காலங்களிலும் பல்வேறு சாதனைகளைப் படைக்க வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

அடுத்து வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த மாணவி செல்வி சர்வானந்தன் சர்மிகா 193 புள்ளிகளைப் பெற்றுத் தேசிய ரீதியில் 4 ஆம் இடத்தைப் பெற்றதோடு தமிழ்மொழி மூல மாணவர்களில் 4 ஆம் இடத்தையும், எமது மாகாணத்தில் 2 ஆம் இடத்தையும் வவுனியா மாவட்டத்தில் முதலாம் இடத்தையும் பெற்றுப் பெருமை சேர்த்துள்ளார். அவருடைய பெற்றோர்களையும் அவரை வழிநடத்திய பாடசாலை அதிபர் ஆசிரியர்களையும் மனதாரப் பாராட்டுகின்றேன்.

யாழ்.புனித பொஸ்கோ வித்தியாலய மாணவி செல்வி இரமேஸ் நிதூசிகா 192 புள்ளிகளைப் பெற்று தேசிய ரீதியில் 10 ஆம் இடத்தையும், மாகாணத்தில் 3 ஆம் இடத்தையும், யாழ். மாவட்டத்தில் 1 ஆம் இடத்தையும் பெற்றுள்ளார். இவரையும் மனதாரப் பாராட்டுகின்றேன். அவருடைய பெற்றோர்களையும் அவரை வழிநடத்திய பாடசாலை அதிபர், ஆசிரியர்களையும் மனதாரப் பாராட்டுகின்றேன். இதுபோல இன்னும் பல மாணவர்கள் இம்முறை மாவட்ட ரீதியில் சிறப்பாகச் சித்தியடைந்துள்ளனர். அவர்களைப் பற்றிய பூரண தகவல்கள் எமக்கு வந்து சேராத போதும் அவர்களையும் அவர்களை வழிநடத்திய பாடசாலைகளையும் பாராட்டுகின்றேன்.

இவற்றுக்கு அடித்தளமிட்ட மாகாணக் கல்வித் திணைக்கள ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர், அவருடன் இணைந்து செயற்பட்ட வலயங்களைச் சேர்ந்த ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆரம்பக் கல்விச் சேவைக் கால ஆசிரிய ஆலோசகர்கள், அவர்களை வழிநடத்திய வலயக் கல்விப் பணிப்பாளர்கள் அனைவரையும் வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் சார்பில் பாராட்டுகின்றேன்-என்றுள்ளது. (த)

# பிரிட்டன் செல்லும் போர்க்குற்றவாளிகளை கைது செய்யாதவாறு சட்டத்தில் தளர்வு

கொழும்பு, செப். 22

பிரிட்டன் செல்லும் வெளிநாட்டவர்களைப் போர்க்குற்றங்கள் தொடர்பாக கைது செய்யும் சட்டத்தில் அந்நாட்டு அரசு தளர்வை ஏற்படுத்தியுள்ளது.

பிரிட்டன் பழைய சட்ட விதி முறைப்படி அந்நாட்டுக்கு விஜயம் செய்யும் வெளிநாட்டு அரசியல்வாதிகளுக்கு எதிராக போர்க்குற்றம் தொடர்பாக பொதுமகன் எவரும் வழக்குத்தாக்கல் செய்து ஏதாவது ஒரு நீதிமன்றத்தின் ஊடாக கைது உத்தரவை கோரமுடியும்.

கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் மூலம் இது மாற்றப்பட்டுள்ளது.

புதிய சட்டவிதிகளின்படி வெளிநாட்டு அரசியல்வாதி ஒருவர் மீதான வழக்குகளின்போது கைது உத்தரவு பிறப்பிப்பதற்கு முன் சட்டமா அதிபரின் ஒப்புதலைப் பெறுதல் வேண்டும்.

கடந்த 2009ஆம் ஆண்டு முதல் இஸ்ரேல் இந்தச் சட்டத்தில் திருத்தத்தைக் கோரியிருந்தது.

பாலஸ்தீன - காசா மீதான 2008 - 2009 போர்க்குற்றங்கள் தொடர்பில் இஸ்ரேலிய முன்னாள் வெளியுறவு அமைச்சர் சிபிலி பினி பிரிட்டனில் வைத்துக் கைது செய்யப்படக்கூடிய வாய்ப்புகள் இருந்தன. இதன் காரணமாக அவர் அந்நாட்டுக்கான பயணத்தை இரத்துச் செய்திருந்தார். ஆனால் தற்போது இச்சட்டம் இஸ்ரேலுக்கு ஆதரவாகத் திருத்தப்பட்டுள்ளது.படை அதிகாரிகளுக்கும் சிப்பாய்களுக்கும் எதிராக பிரிட்டனின் சட்டம் பயன்படுத்தப்படுவதை இது தடுத்து நிறுத்தும். அதேவேளை, இலங்கையில் போர்க்குற்றங்கள் தொடர்பில் குற்றம்சாட்டப்பட்டுள்ள ஜனாதிபதி உட்பட்ட படைத் தளபதிகள் மற்றும் அதிகாரிகள் ஆகியோருக்கும் இப்புதிய சட்டம் சாதகமாக அமைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

## புலனுறுப்புக்களில் மிகவும் பிரதானமானது 'நா'

புலனுறுப்புக்களில் பிரதானமானது நாவாகும். நாவை அடக்கினால்எல்லா உறுப்புக்களையும் அடக்கியதற்குச் சமமாகும். நாவுக்கு இரு முக்கிய கருமங்கள் உண்டு. உணவு உண்ணுதல், பேசுதல். நாவின் இவ்விரண்டு இயல்புகளையும் அடக்க முடியுமாயின் நாம் தெய்வீகத் 'தானுடன்' இணையமுடியும்.நாவானது பேசுவதை நிறுத்தினால், சிந்தை கலகலக்கத் தொடங்கி விடும். சிந்தையைத் தடுப்பதற்கு அறிவைத் தட்டி எழுப்ப வேண்டும். எழுப்பி மெதுவாக ஆத்மாவிடம் செல்லத் தூண்டவேண்டும். உண்மையான அனுட்டானம் என்பது வாக்கைச் சிந்தையுடன் இணைவித்து சிந்தையைப் புத்தியில் இணைத்துப் புத்தியை ஆத்மாவுடன் இணைத்தலாகும்.

இந்த அனுட்டானத்தை செய்யாது விடுத்து, மனிதன், ஆழ்ந்த துன்பத்தில் அமிழ்த்தக் கூடிய புலனின்பத்தில் ஈடுபடுகிறான்.



*(நன்றி: சத்தியசாயி பாபாவின் அருளுரைகள்)*

**சாயி சிந்தனை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸார், படையினர் முறையாகச் செயற்பட்டால் யாழ். குடாநாட்டில் அசம்பாவிதங்கள் நடக்கமாட்டா

## அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.22

பொலிஸ் மற்றும் படையினர் முறையாகச் செயற்பட்டால் யாழ்.மாவட்டத்தில் கிறீஸ் மனிதன் மற்றும் ஏனைய அசம்பாவிதங்கள் நடைபெறமாட்டா.

இவ்வாறு யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு:-

கிறீஸ் மனிதன் என்று கூறிப் பலர் சட்டவிரோத செயல்களில் ஈடுபடுகின்றனர். பெண்களுக்கெதிரான வன்முறைகளிலும் பலர் ஈடுபடுகின்றனர்.

அத்துடன் இந்த விவகாரங்கள் தொடர்பில் நான் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஷத்துருசிங்கவை சந்தித்துக் கலந்துரையாடினேன்.

இதன் போது இவ்வாறான சம்பவங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் பொலிஸாருக்கு கடுமையான உத்தரவுகளைப் பிறப்பிக்குமாறு கட்டளைத் தளபதியிடம் கேட்டுக் கொண்டுள்ளேன்.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்ச்சியாக நடைபெறுவதற்கு சில காரணங்கள் இருக்கத்தான் செய்கின்றன.

சமூகத்தின் ஒழுக்கக் கட்டுப்பாடுகளில் ஏற்பட்ட தளர்வு, பெற்றோர்களின் கவலையீனம், ஆண்களின் வல்லுறவுப் போக்கு, பெண்களுக்கு சமூகத்தில் உயர் அந்தஸ்து கொடுக்க மறுத்தல், பெண்கள் ஆகக் கூடிய சுதந்திரமான முறையில் நடமாட முற்படுதல், சமூகக் கண்காணிப்பு குறைவடைந்தமை போன்றவற்றைச் சுட்டிக் காட்டலாம்.

இவை எல்லாவற்றையும் விட பொலிஸார் மக்களிடமிருந்து முறைப்பாடுகளைப் பெற்றுக் கொள்கின்றார்களே தவிர, எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுப்பதில்லை. இவை எல்லாவற்றினாலும் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

பொலிஸார் இனியாவது இவ்வாறான குற்றங்கள் புரிவோர் மீது கடுமையான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும்-என்றார். (ம-15)

# வலிகாமம் வலய மாணவர்களுக்கு பாடசாலை செல்வதில் நாட்டமில்லை

## பெற்றோரின் அக்கறையின்மையே காரணம்

நவாலி, செப்.22

வலிகாமம் கல்வி வலயத்தில் பெரும் எண்ணிக்கையான பிள்ளைகள் பாடசாலைக்கு செல்வதில்லையென்று தெரிய வந்துள்ளது. இதற்குக் காரணம் பெற்றோர்களின் அக்கறையின்மையே என்று கூறப்படுகின்றது.

வலிகாமம் வலயப் பாடசாலைகளில் கட்டாயக் கல்விக்கான கட்டளையை அமுல்படுத்தும் குழுவின் வேலைத்திட்டம் தொடர்பான செயலமர்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் ஆசிரிய வள நிலையத்தில் இடம்பெற்றது.

செயற்திட்ட அலுவலர் சண்முகராசா இந்த செயலமர்வில் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

இவர் இதில் மேலும் தெரிவிக்கையில்:-

அரசின் அறிவுறுத்தலுக்கமைய நூறுவீதமான பிள்ளைகள் எழுத்தறிவு பெற்றிருக்க வேண்டும்.

ஆனால் இங்கே அவ்வாறு செயற்படுவதில்லை.

பல பெற்றோர்கள் தமது பிள்ளைகளை கொண்டாட்டங்களுக்கு கூட்டிச் செல்லல், வீடமைப்புத் திட்ட வேலைகளை மேற்கொள்ளல், பிள்ளைகளை வீட்டுக்கு காவல் வைத்தல், கிறீஸ் மனிதன் பிரச்சினை, பிள்ளைகளை கடத்திச் செல்லல், தொழில் நிமிர்த்தம் பாடசாலைக்கு செல்லாமை, வறுமை காரணமாக செல்லாமை போன்றன இதற்குக் காரணமாக உள்ளன.

கட்டாயக் கல்வி சட்டத்தின் பிரகாரம் ஒரு பிள்ளை 5 வயது தொடக்கம் 14 வயது வரை கட்டாயம் கல்வி பெறவேண்டும்.-என்றார். (ம-100)

# சீரடிபாபாவின் அவ்தார தினம்

யாழ்ப்பாணம், செப்.22

யாழ்ப்பாணம் பகவன் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் இன்று வியாழக்கிழமை முதல் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை ஒவ்வொரு நாளும் காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணி வரை சீரடிபாபாவின் சத்சரிதம் வாசிக்கப்படும் என்று நிலையத்தினர் அறிவித்துள்ளனர்.

புதன்கிழமை சீரடிபாபாவின் அவதார தின நிகழ்வுகள் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் 12 மணிக்கு நாராயணா சேவையுடன் நிறைவுறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)




நல்லூர் நடராசா பரமேஸ்வரி மணி மண்டபத்தில் மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட செவ்விசை மாலை நிகழ்வில் இலங்கை, இந்தியக் கலைஞர்கள் இசை விருந்தளிக்கின்றனர். (ம-7)

# சாவகச்சேரி இந்துவுக்கான பஸ் நாளை கையளிப்பு

தென்மராட்சி, செப்ரெம்பர், 22

சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு கொண்டு வரப்பட்டுள்ள புதிய பஸ் நாளை காலை 8 மணிக்கு கல்லூரி அதிபரிடம் உத்தியோக பூர்வமாக கையளிக்கப்படவுள்ளது.

கல்லூரியின் ஸ்தாபகர் அமரர் தாமோதரம் பிள்ளையின் மகனான தாமோதரப்பிள்ளை சரவணமுத்து புதிய பஸ்ஸை அதிபரிடம் கையளிக்கவுள்ளார்.

ஸ்தாபகர் தாமோதரம் பிள்ளையின் சந்ததியைச் சேர்ந்த தற்போது லண்டனில் உள்ள சபாரத்தினம் ஸ்ரீகுமார், ஸ்ரீகுமார் நில்காந்தி சுரேஷியும் இணைந்து 40 லட்சம் ரூபா பெறுமதியான 40 இருக்கைகள் கொண்ட பஸ்ஸைக் கல்லூரிக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-207)

# மறவன்புலோ விவசாயிகளுக்கு தெளிகருவிகள்

தென்மராட்சி, செப். 22

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சித் திட்டத்தில் மறவன்புலோ கமக்கார அமைப்பைச் சேர்ந்த 30 விவசாயிகளுக்கென 30 தெளிகருவிகள் வழங்கப்படவுள்ளன.

கமக்கார அமைப்பினால் தெளிகருவி வழங்கக் கூடிய விவசாயிகள் தெரிவு இடம் பெற்று வருகிறது.

இத்திட்டதின் கீழ் மறவன்புலோ கிராம மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கென கோழி மற்றும் ஆடுகள் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-207)

# பால் விற்பனை நிலையம் மூடப்பட்டதால் நெருக்கடி

நவாலி, செப்.22

நவாலியில் இயங்கி வந்த பால் கொள்வனவு விற்பனை நிலையம் கடந்த ஒரு மாதமாக மூடப்பட்டுள்ளதால் பாற் பண்ணையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையத்தில் நவாலி, ஆனைக்கோட்டை, காக்கை தீவு பகுதிகளிலுள்ள மாடு வளர்ப்போர் பாலை இந்தக் கொள்வனவு நிலையத்திலேயே வழங்கி வந்தனர்.

தற்போது இது திடீரென மூடப்பட்டுள்ளதால் இவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

காலை,மாலை இவற்றைபெற்று தமது தேவைகளைப் பூர்த்தி செய்த பாவனையாளரும் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை எடுத்து மீண்டும் இதனைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ம-100)

# அல்லைப்பிட்டி றோ.கவை இயங்க வைக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப்.22

அல்லைப்பிட்டி றோ.க பாடசாலையை மீண்டும் இயக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படுகின்றது. கடந்த 1990 ஆம் ஆண்டு இந்தப் பாடசாலை யுத்தநடவடிக்கை காரணமாக மூடப்பட்டது. தற்போது அல்லைப்பிட்டியில் மீள் குடியமர்வு இடம் பெற்றுள்ளதால் அங்குள்ள சிறுபிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்க வசதியாக இந்தப் பாடசாலையை மீண்டும் திறக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக அல்லைப்பிட்டி மக்கள் தெரிவித்தனர். (ம-7)

# அனுமதி பெற்றே கட்டடங்கள் அமைக்குமாறு அறிவுறுத்து

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் அனுமதியின்றி கட்டடங்கள் அமைப்போர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை அறிவித்துள்ளார்.

சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடியிருப்பு வீடுகள், வர்த்தக நிலையங்கள், எல்லைச் சுவர்கள், மலசலகூடம், கிணறு போன்றவை நகரசபையின் அனுமதியின்றி அமைப்பதாகப் பொது மக்களால் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

கட்டடம் அமைப்பதற்கான ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் பயிற்றப்பட்ட உத்தியோகத்தர்களின் பரிசீலனையின் பின்னர் குறுகியகாலத்தில் அனுமதி வழங்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் சபையின் அனுமதியின்றி கட்டடங்கள் அமைப்பது நகரசபை கட்டளைச் சட்டங்களுக்கு அமைவாக சட்ட விரோதமென கருதப்படுவதால் அனுமதியின்றி கட்டடங்கள் அமைப்போர் மீது சட்டநடவடிக்கைகள் எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே சபை எல்லைக்குள் கட்டடங்கள் அமைக்கவுள்ளோர் நகரசபையின் அனுமதி பெற்ற பின்னரே மேற்கொள்ளுமாறும் கேட்டுள்ளார். (ம-207)

# சண்டிலிப்பாய் விவசாயிகளுக்கு விவசாயத்துக்கான உதவிகள்

யாழ்ப்பாணம், செப்.22

சண்டிலிப்பாய் கமநல கேந்திர நிலையம் ஊடாக விவசாயிகளுக்கு மண்வளப்படுத்தலுக்கு விவசாயிகளுக்கு பலவித கலப்பைகளின் உதவிகள் வழங்கப்படுகின்றன.

இதன் மூலம் இந்த வருட பெரும்போக நெல் விதைப்பினை மண் இலகுபடுத்தி விதைப்புக்கு பயன்படுத்தலாம்.

சண்டிலிப்பாய் கமநலகேந்திர நிலைய பெரும்போக அதிகாரி திருமதி பாமா மகேந்திரன் இத் தகவலை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் : இந்திய நட்புறவு மக்களின் உதவியுடன் சண்டிலிப்பாய் கமநல கேந்திர நிலையத்துக்கு டிஸ்கலப்பை, சாதாரண உழவு - மறுப்பு கலப்பை , மண் பதப்படுத்தும் ரொட்ட வேட்டர் கலப்பை ஆகிய 3 வகையான கலப்பை மூலம் பூரண சேவை இடம்பெறுகின்றது.

கலப்பைகளின் பயன்பாட்டுக்கு ஏற்பவும் பரப்பளவுக்கு ஏற்பவும் குறைந்த செலவில் மக்களுக்கான சேவை இடம் பெறுகிறது.

எனவே வலி.தென்மேற்கு மக்கள் முழுமையாக பயன்படுத்த முன்பதிவு மேற்கொள்ளலாம் என்று பெரும்போக அதிகாரி திருமதி பாமா மகேந்திரன் தெரிவித்தார்.

இதேவேளை: இந்திய நட்புறவு சங்கத்தால் வழங்கப்பட்ட இரு கலப்பைகள் உடைந்துள்ளதாகவும் விரைவில் திருத்த வேலைகள் மேற்கொள் ளவும் பெரும்போக அதிகாரி நடவடிக்கை எடுத்துள்ளார் என்று குறிப்பிடப்பட்டது. (ம-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட கல்விச் சமூகத்துக்கு விசேட லீவுக்கு அமைய சம்பளம் வழங்கவேண்டும்

**மாகாணக் கல்விப் பணிப்பாளர் அறிவுறுத்து**

யாழ்ப்பாணம், செப்.22

வடமாகாணத்தில் யுத்த காலங்களில் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் கல்வி வலய அதிகாரிகளுக்கு விசேட லீவுக்கு அமைய உரிய சம்பளத்தை வழங்குமாறு அனைத்து வலய கல்விப் பணிப்பாளர்களுக்கும் வட மாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

வடமாகாணக் கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கான விசேட கூட்டம் யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு அங்கவீனமான ஆசிரியர்கள், இறந்தவர்கள் ஆகியோருக்கு 55 வயது வரை உரிய சம்பளங்களும் வழங்கப்பட்டு ஓய்வூதியங்களும் வழங்கப்படும்.


பதவி உயர்வுகள் வழங்கப்பட வேண்டும். இனிவரும் ஒரு மாத காலத்துக்குள் அனைத்து ஆசிரியர்களினதும் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும்.

வட மாகாணத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் தளபாடம் வழங்கப்படும். ஆசிரியர்களினது அனைத்து நலத்திட்டங்களையும் வட மாகாண கல்வித் திணைக்களம் பூர்த்தி செய்யும்.

அனைத்து கல்வி வலய அதிகாரிகளும் பாடசாலைகளதும் ஆசிரியர்களதும் விவரங்களைத் திரட்டி விரைவில் சமர்ப்பிக்குமாறு வடமாகாண கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் அனைத்துக் கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், வலயக்கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-311-4)

**சுகாதாரச் செயற்பாடு...**



பெரும்போக மழை ஆரம்பித்ததையிட்டு டெங்கு தாக்கம் வலிகாமம் பகுதியில் மிக மோசமாக அதிகரித்து வருகிறது. இதனை முன்னிட்டு புகை அடிக்கும் இயந்திரம் மூலம் டெங்கு கட்டுப்பாட்டு பரீட்சார்த்த முயற்சி ஆரம்பிக்கப் பட்டுள்ளது. (ம-302)

# கைதடி இலவச மருத்துவ முகாமில் 300 பேருக்கு மூக்குக்கண்ணாடிகள்

**100 பேருக்கு உலருணவு; சிறுவனுக்கு சக்கர நாற்காலி**



யாழ்ப்பாணம், செப்.22

சர்வதேச லயன்ஸ் கழக பி1 மாவட்டங்களான கொழும்பு வோட்டர்ஸ் மீற் லயன்ஸ் கழகமும் கொட்டாஞ்சேனை சேர்க்கிள் லயன்ஸ் கழகமும் இணைந்து கைதடி தெற்கு சனசமூக நிலையத்தில் நீரிழிவு நோய்க்கான மருத்துவ முகாம் ஒன்றை கடந்த ஞாயிறன்று நடத்தி இருந்தது.

இதில் 300 பயனாளிகளுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகளும் 100 பேருக்கு உலர் உணவுப் பொதிகளும் வழங்கப்பட்டன. அத்துடன் வலுவிழந்த சிறுவனுக்குச் சக்கர நாற்காலியும் வழங்கப்பட்டது. அது மட்டுமன்றி அந்தச் சிறுவனுக்கு ஒரு வருடத்துக்கு கழக அங்கத்தவர்களால் சத்துணவு வழங்கவும் ஏற்பாடாகியுள்ளது.

இந்த நிகழ்வுக்கு மேற்படி கழகங்களின் அங்கத்தவர்களால் அழைக்கப்பட்ட பிரதம விருந்தினர், மாவட்ட ஆளுநர் லயன் பிரியந்த பெர்னாண்டோவும் அவரது துணைவியாரும் கலந்து கொண்டனர். சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட ஆளுநரின் செயலாளர் லயன் தேவா பீற்றர் மற்றும் வடபிராந்திய செயலாளர் லயன் பத்மநாதன் வடபிராந்திய பொருளாளர் லயன் விக்னேஸ் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். (ஒ)

# சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு உபகரணங்கள் கையளிப்பு

தென்மராட்சி, செப்.22

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்டு பூர்த்தியடையும் நிலையில் உள்ள இரண்டு விடுதிகளுக்கான மருத்துவ உபகரணங்கள் வைத்திசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன.

பின்லாந்து செஞ்சிலுவைச் சங்கத்தினரால் நிர்மாணிக்கப்பட்டு வரும் விடுதிகளுக்குரிய மருத்துவ உபகரணங்களை யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளரின் வழிகாட்டுதலில் சங்கத்தினர் கொள்வனவு செய்து வழங்கியுள்ளனர். (ம-207)

# சீட்டிழுப்புத் திகதி பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், செப்.22

இலங்கை மின்சார சபையின் வடமாகாண ஊழியர் நலன்புரி விளையாட்டுச் சங்கத்தால் கடந்த 15 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று நடத்தப்படவிருந்த அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணத்தால் எதிர் வரும் முதலாம் திகதி நடத்தப்படும் வருடாந்த விளையாட்டு போட்டியின் போது இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# மண்டைதீவு அலுவலகம் விரைவில் புனரமைப்பு

யாழ்ப்பாணம், செப்.22

வேலணை பிரதேச சபையின் மண்டைதீவு உபஅலுவலகம் விரைவில் திருத்தியமைக்கப்படும் என்று வேலணைப் பிரதேச சபைத் தலைவர் தெரிவித்தர்.

மண்டைதீவில் 1992 இல் இடம் பெற்ற யுத்த நடவடிக்கை காரணமாக சேதமடைந்துள்ள உப அலுவலகப் புனரமைப்புப் பணிகள் இன்னமும் இடம்பெறவில்லை என்று கடந்த பிரதேச சபையின் உறுப்பினர்களுக்கான கூட்டத்தில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

இதனையடுத்து உடனே உபஅலுவலகத்தைப் புனரமைத்து இயக்க வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

இதனையடுத்து இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# தனிமையில் இருந்த யுவதியை கூரிய ஆயுதத்தால் கீறி காயம்

**நவாலியில் பரபரப்புச் சம்பவம்**

யாழ்ப்பாணம், செப்.22

கூரிய ஆயுதத்தினால் இரு கைகளிலும் கீறிக் காயமடைந்த நிலையில் யுவதி ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நவாலி மகாவித்தியாலயத்துக்கு முன்பாக உள்ள ஒரு வீட்டில் நேற்று முன்தினம் மு.ப 10.30 மாணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இதனால் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த வங்கி முகாமையாளரான செ.இராசேந்திரத்தின் மகளான காயத்திரி (வயது 25) என்ற யுவதியே காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த யுவதியின் தந்தையும், தாயும் வெளியே சென்று விட்டதை அவதானித்த இனந்தெரியாத ஒருவன் வீட்டின் உள்ளே சென்றுள்ளான். வீட்டில் சமையல் வேலையில் ஈடுபட்டிருந்த யுவதியின் தொண்டையை திருகியபடி சத்தம் போடவிடாமல் அவரது இருகைகளிலும் கூரிய ஆயுதத்தினால் கீறியுள்ளான். வலிதாங்க முடியாமல் யுவதி கூக்குரல் இட்டதும் அவன் தப்பி ஓடிவிட்டான்.

தகவல் அறிந்து அந்தப் பகுதிக்கு வந்த மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஒ-எ)

# 6 மாத கடூழிய சிறை

கசிப்பு வைத்திருந்த மிருசுவில் வாசிக்கு ஆறு மாத கடூழியச்சிறைத் தண்டணையும் 5 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இந்த நபர் ஏற்கனவே இரு தடவைகள் இந்த நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டவர் என்று பொலிஸார் நீதிவானின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

வழக்கை விசாரித்த நீதிவான் மா.கணேசராஜா இந்த நபருக்கு ஆறு மாத கடூழியச் சிறைத் தண்டனை விதித்ததுடன் 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் மூன்று மாத சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் உத்தவிட்டார். (ம-207)

# அரியாலை கிழக்கில் மீள்குடியமர்ந்த மக்களுக்கு கடற்றொழில் உபகரணங்கள்

யாழ்ப்பாணம், செப்.22

அரியாலை கிழக்குப் பகுதியில் மீள்குடியமர்ந்த கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த, வறிய நிலையில் உள்ள 48 கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு கடற்றொழில் உபகரணங்கள் ''பாசிக்'' நிறுவனத்தால் வழங்கப்படவுள்ளது.

இதற்கென இந்தப் பகுதியில் உள்ள அரியாலை கிழக்கு, பூம்புகார், உதயபுரம், மணியம் தோட்டம் ஆகிய கிராமங்களில் மீள்குடியமர்ந்துள்ள கடற்றொழிலாளர் குடும்பங்களில் தலா 12 குடும்பங்கள் வீதம் 48 கடற்றொழிலாளர் குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த நான்கு கிராமங்களையும் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் பிரதானமாக இறால் பிடித்தல் தொழிலில் ஈடுபடுகின்றனர். இதனால் மழை காலம் இதற்குப் பொருத்தமான காலம் என்பதால், தெரிவு செய்யப்பட்ட பயனாளிக் குடும்பங்களுக்கு இறால் பிடித்தல் தொழிலை மேற்கொள்ள வசதியான உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன. வலை [illegible] பன இவ்வாறு வழங்கப்படவுள்ளன.

கடற்றொழில் உபகரணங்கள் வழங்கும் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ள 'பாசிக்' நிறுவன அதிகாரிகளும், இந்தத் திட்டத்துக்கு நிதி உதவி வழங்கும் நிறுவனமான ஜப்பான் நாட்டைச் சேர்ந்த 'பிளாற்லோம்' நிறுவன அதிகாரிகளும் இந்த நான்கு கிராமங்களுக்கும் சென்று பயனாளிகளைச் சந்தித்து கடற்றொழில் தொடர்பான விவரங்களைக் கேட்டறிந்துள்ளனர்.

கிராமிய கடற்றொழில் கூட்டுறவுச் சங்கத்தினர் கடற்றொழில் பரிசோதகர், கிராம சேவையாளர்கள் ஆகியோரின் உதவியுடன் இந்தப் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அரியாலைப் பகுதியில் மீள்குடியமர்ந்துள்ள கடற்றொழிலாளர்களுக்கு கடற்றொழில் உபகரணங்கள் எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை என கடற்றொழில் நீரியல் வள யாழ். மாவட்ட உதவிப்பணிப்பாளர் ஆர்.ரவீந்திரன் 'பாசிக்' நிறுவனத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதவைகள், அங்கவீனமுற்றோர், முன்னாள் போராளிகளின் தொழில்வாய்ப்புகளுக்கு உதவி வழங்குமாறு கோரிக்கை

## ஐ.நா. கூட்டத்தொடரில் யாழ். அரச அதிபர் விடுத்ததாகக் கூறுகிறார்

யாழ்ப்பாணம், செப். 22

யாழ். மாவட்டத்திலுள்ள 29 ஆயிரம் விதவைகள், அங்கவீனமடைந்த ஐயாயிரத்து 500 பேர் மற்றும் முன்னாள் போராளிகள் ஆகியோருக்கான தொழில் வாய்ப்புகளை வழங்குவதற்கு உதவிசெய்யுமாறு, ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரில் இடம்பெற்ற மீள் குடிமர்வும் அபிவிருத்தியும் என்னும் தலைப்பிலான மாநாட்டில் தாம் வேண்டுகோள் விடுத்ததாக யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:-

ஐ.நா.மனித உரிமைகள் கூட்டத்தொடர் காலை அமர்வாக நவநீதம்பிள்ளை தலைமையில் இடம்பெற்றது. இதில் நான் கலந்துகொள்ளவில்லை. மாலையில் மீள்குடியமர்வும் அபிவிருத்தியும் என்ற தலைப்பில் இடம்பெற்ற மாநாட்டிலேயே பங்குபற்றினேன். இதில் சகலருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்த மாநாட்டில் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் வீதித்திருத்தம், நீர்வழங்கல், வாழ்வாதாரச் செயற்பாடுகள், சட்டம், ஒழுங்கு என்பவற்றை நிலைநாட்டல் என்பன தொடர்பில் பல கேள்விகள் எழுப்பப்பட்டன. இவை அனைத்துக்கும் இங்கு மேற்கொள்ளப்பட்டுவரும் வேலைத் திட்டங்களை தெளிவாக எடுத்துக் கூறி விளங்கப்படுத்தினேன். அத்துடன் அவர்களது சந்தேகங்கள் தீர்த்தன.

முக்கியமாக மர்ம மனிதன் விவகாரம் தொடர்பாகவும் அவர்களால் விளக்கம் கேட்கப்பட்டது. அதற்கு இங்குள்ள சமுக விரோத செயல்களில் ஈடுபடுபவர்களே இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இதைக் கட்டுப்படுத்துவதற்கு தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. என்று கூறினேன்

இந்த மாநாட்டின் பின்னர் உலகத் தமிழர் பேரவையின் தலைவர் அருட்திரு இம்மானுவேல், மனித உரிமைகள் அமைப்பில் அங்கம் வகிக்கும் சட்டத்தரணி கிருபாகரன் ஆகியோர் தனியாகச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது யாழ். மாவட்டத்தில் 60 ஆயிரம் வீடுகள் வரையில் நிர்மாணிக்கப்பட வேண்டியிருப்பது பற்றியும், முன்னாள் போராளிகளுக்கான வேலை வாய்ப்புகளுக்கு உதவிகள் செய்யுமாறும் கேட்டுக் கொண்டேன்.

அவர்கள் ஏனைய புலம்பெயர் தமிழ் அமைப்புகளுடன் கலந்தாலோசித்து சொல்வதாகக் கூறினர். அத்துடன் இவ்வாறு உதவி செய்ய விரும்பினால் எதிர்காலத்தில் நேரடியாகத் தொடர்பு கொண்டால் அவர்களை பதிவு செய்வதற்கான சகல நடவடிக்கைகளையும் செய்து கொடுக்க முடியும்.

இந்த விடயத்தில் ஜனாதிபதிச் செயலக செயலாளர் திவாரட்ண இங்கு பதிவுக்காக விண்ணப்பித்தால் சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு தருவதாக உறுதி அளித்தார்.

மேலும் அங்குள்ள மக்கள் தொடர்பு கொண்டு இங்கு இன்னும் பணம் வாங்குகின்றார்கள். எமது பணம் உங்கள் பகுதிகளில் ஏதாவது வேலைத்திட்டம் மேற்கொள்ளப் பயன்படுகின்றதா? அல்லது பணம் கிடைக்கின்றதா? என்று கேட்டனர். இது தொடர்பில் எனக்கு அறிவிக்காமல் செய்வது தொடர்பில் தெரியாது என்று கூறினேன் என்றார். (வ-15)

# ஆஸி. கிறீன் கட்சியின் குற்றச்சாட்டு ஆதாரமற்றது என்கிறார் இலங்கைத் தூதர்

இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் போர்க் குற்றச்சாட்டுகள் குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும் என்று ஆஸ்திரேலியாவின் கிறீன்ஸ் கட்சி விடுத்துள்ள கோரிக்கையை அந்த நாட்டுக்கான இலங்கைத் தூதர் றியர் அட்மிரல் திசேர சமரசிங்க வன்மையாகக் கண்டித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறுகையில்:

இலங்கை அரசு மீதான போர்க்குற்றச்சாட்டுகளை ஆதாரமற்ற பிரசாரங்கள் என்று அவர் விமர்சித்துள்ளார். இறுதிக் கட்டப் போரின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றச்சாட்டுகள் குறித்து முழுமையான விசாரணை நடத்தப்படும் வரை பொதுநலவாய அமைப்பிலிருந்து இலங்கையின் அங்கத்துவத்தை இடைநிறுத்தி வைக்கவேண்டும் என்று ஆஸ்திரேலிய கிறீன் கட்சியின் செனட்டர் லீ றியானன் நேற்று முன்தினம் வலியுறுத்தியுள்ளார்.

மனிதஉரிமைசெயற்பாட்டாளர்களுடன் நேற்றுமுன்தினம் வட்டமேசை மாநாடொன்றை நடத்திய லீறியானன், இலங்கை தொடர்பாக விசாரிப்பதற்காக சர்வதேச விசாரணை மன்றமொன்றை ஏற்படுத்த ஆஸ்திரேலிய அரசு ஆதரவளிக்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

அடுத்த மாதம் ஆஸ்திரேலியாவின் பேர்த் நகரில் நடைபெறவுள்ள பொது நலவாய உச்சி மாநாட்டுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பயணம் செய்வற்கு தாம் இடையூறு விளைவிக்கக் கூடும் என்பதையும் இந்த உச்சிமாநாட்டில் பங்குபற்றியவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் குறித்த விசாரணைக்கு பிரிட்டன், கனேடிய பிரதமர்கள் அழைப்பு விடுத்துள்ள நிலையில் ஆஸ்திரேலிய பிரதமர் ஜூலியா கில்லார்ட் இந்த விடயத்தில் மௌனமாக இருப்பதாக மேற்படி மனித உரிமை செயற்பாட்டாளர்கள் கூறுகின்றனர்.

'மனித உரிமைக்காக முன்னிற்பதற்கான பந்து ஆஸ்திரேலிய அரசின் பக்கம் உள்ளது. வேலிமீது அமர்ந்திருப்பதற்கான தருணம் இதுவல்ல' என்று றியானன் கூறியுள்ளார்.

எனினும் மேற்படி குற்றச்சாட்டுகளானவை ஆதாரமற்ற பிரசாரங்களாகும் என்று இலங்கைத் தூதர் றியல் அட்மிரல் திசேர சமரசிங்க கூறியுள்ளார்.

பொதுமக்களைக் காப்பாற்றுவதற்காக பயங்கர வாதிகளைத் தோற்கடிப்பதற்கு அரசு ராணுவ நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி யேற் பட்டது. இந்த (பிரசாரம்) முழுவதும் தோற்கடிக்கப்பட்ட பயங்கர வாதிகள் சார்பான அமைப்புகளினால் மேற்கொள்ளப்படுபவையாகும்' என்று அவர் கூறியுள்ளார். (வ)

# இலங்கை பிக்கு மீது லண்டனில் பாலியல் வல்லுறவு குற்றச்சாட்டு

லண்டனில் உள்ள சிங்கள பௌத்த பிக்கு ஒருவர் மீது சிறுமியை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இதனை லண்டன் மெட்ரோ பொலிட்டன் பொலிஸார் உறுதி செய்துள்ளனர் என்று பி.பி.பி. செய்தி வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பாக பி.பி.சி. வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

லண்டனில் குரைடனில் உள்ள தேம்ஸ் பௌத்த விகாரையின் தலைமை பிக்கு வான பகலஹம சோமரட்ண தேரோ என்பவர் மீது கடந்த 12 ஆம் திகதி பாலியல் துஷ்பிரயோகம் உட்பட 4 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

16 வயதுக்குக் குறைவான சிறுமி மீதான மேற்படி பாலியல் வல்லுறவும், மேலும் மூன்று பாலியல் ரீதியான தாக்குதல்களும் லண்டனில் செல்வந்தர்கள் வாழும் புறநகர் பகுதியான சிஸ்விக் பகுதியில், 1977 ஆம் ஆண்டுக்கும் 1978 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட கால கட்டத்தில் நடந்ததாகக் கூறப்படுகின்றது. கைது செய்யப்பட்டு தற்போது பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ள பிக்கு, நாளை நீதிமன்றில் மீண்டும் ஆஜர் செய்யப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (வ)

# தற்காலிக தேர்தல் அ.அட்டை விண்ணப்பப்படிவம் விநியோகம் ஒக்ரோபர் I இல் நிறைவு

கொழும்பு, செப்.22

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக தற்காலிக அடையாள அட்டைகளுக்கான விண்ணப்பப்படிவங்களின் விநியோகம் அடுத்தமாதம் முதலாம் திகதியுடன் முடிவடையவுள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

தேர்தல்கள் செயலகத்தால் விநி யோகிக்கப்படும் இந்த தற்காலிக அடையாள அட்டைகளுக்கு எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது எனவும் விண்ணப்பதாரிகள் $1\frac{1}{4} \times 1$ அங்குலம் கொண்ட கறுப்பு, வெள்ளை அல்லது வர்ணப் புகைப்படங்களை சமர்ப்பிப்பதே போதுமானது எனவும் செயலகம் தெரிவித்துள்ளது. தேசிய அடையாள அட்டை அல்லது ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆளடையாளங் களை கொண்டிராதவர்கள் தற்காலிக அடையாள அட்டைகளுக்கு தத்தமது பகுதி கிராம சேவையாளர்களுடன் தாமதமின்றி தொடர்பு கொள்ளுமாறு தேர்தல்கள் செயலகம் வாக்காளர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. (வ-5)

# குவைத்தில் நிர்க்கதியான 75 பேர் இன்று நாடு திரும்புவர்

வெளிநாட்டு வேலை தேடி குவைத்துக்குச் சென்று வீட்டு உரிமையாளர்களால் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாக்கப்பட்டு வெளி முகாம்களில் தங்கியிருந்த இலங்கையர்கள் சிலர் இன்று நாடு திரும்பவுள்ளனர். சுமார் 75 பேர் அடங்கிய குழு இன்று இலங்கை வரவுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணி யகம் தெரிவித்துள்ளது. குவைத்தில் உள்ள இலங்கைத் தூதரின் முயற்சியில் இவர்கள் அனைவரும் இலவசமாக நாட்டுக்கு அழைத்து வரப்படவுள்ளனர். இவர்களை நாட்டுக்கு திருப்பி அனுப்ப குவைத் அரசு நிதியுதவி அளித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் ஏற்பாடு செய்யும்
'தென்னாசிய நாடுகளில் பால்நிலை எண்ணக்கரு பற்றிய புரிதல்'
பற்றியதோர் கருத்துப்பகிர்வு

பங்கேற்கின்றார்

தமிழ் நாடு மற்றும் உலகளாவிய ரீதியில் புகழ்பெற்ற மனித உரிமை ஆர்வலரும், பால்நிலைப் பயிற்சியாளருமான பியூலா ஆசாரியா அவர்கள்

அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் பணிபுரிவோர், சமூகப்பணியில் ஆர்வமுடையோர், பல்கலைக்கழக மாணவர்கள், விழுது வாசகர்வட்ட அங்கத்தவர்கள் மற்றும் ஆர்வலர்கள் அனைவரையும் உங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள அன்போடு அழைக்கின்றோம்.

இடம்: விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம், இல. 23, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
காலம்: செப்ரெம்பர் 24 ஆம் திகதி சனிக்கிழமை
நேரம்: முற்பகல் 10 மணி

உங்கள் தொடர்புகளுக்கு: 021 222 9866

# மரண அறிவித்தல்

## விசுவலிங்கம் கந்தையா



நயினாதீவு, 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 7ஆம் வட்டாரத்தை வதிவிடமாகவும் தற்பொழுது கொக்குவில், பொற்பதி லேனில் வசித்தவருமாகிய விசுவலிங்கம் கந்தையா 19.09.2011 திங் கட்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் - சிவகாமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கதிரேசு- பொன்னம்மா தம்பதியரின் மருமகனும் சரோஜினிதேவியின் அன்புக் கணவரும், கேதீஸ்வரன்(தபாலதிபர், வண்ணார் பண்ணை), பரமேஸ்வரன் (ஜேர்மனி),காலஞ்சென்றவர்களான சகுந்தலாதேவி, யசோதரன் மற்றும் புவனேஸ்வரி, பரிமளாதேவி (நோர்வே), சுதாகரன் (ஜேர்மனி), நாகேஸ்வரி, விஜேந்திரன் (சமுர்த்தி வங்கி, வேலணை), விஜயகுமார், தர்சினி(பிரான்ஸ்), தனுசியா ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகஜனி, ரஞ்சிதாதேவி(ஜேர்மனி),யோகரத்தினம், ஸ்ரீதரன் (நோர்வே), ராஜினி(ஜேர்மனி), காலஞ்சென்ற கேதீஸ்வரன் மற்றும் கேதாரகௌரி, சுதாகரன்(பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும், காலஞ்சென்ற கமலாம்பிகை சரவணமுத்து மற்றும் பத்மாவதி சிவக்கொழுந்து, காலஞ்சென்ற ஏகாம்பரம் சாரதாமணி மற்றும் கிருபாமணி (சங்கீத பூஷணம் - ஜேர்மனி ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் சாம்பசிவம்(சோதிடர்), சிவ பூரணி(ஜேர்மனி), லிங்காதேவி (ஜேர்மனி), சிதம்பர நடராசா (கொழும்பு), இராஜயோகபூபதி (கொக்குவில்), நவ புஸ்பராணி (ஹொலண்ட்), வருண்நாதன்(SPHI), முருகபத்மராசா (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.09.2011) வெள்ளிக்கிழமை மு.ப. 10மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.கேதீஸ்வரன் (தபாலதிபர்).
செம்பாட்டு ஒழுங்கை, பொற்பதிலேன், கொக்குவில்

ஷாம்சன் இங்கிலீஷ் - 3 மாத பயிற்சிநெறி

எந்தவொரு குழந்தையும் 2 தொடக்கம் 4 வயதுக்குள் தன் தாய் மொழியைப் பேசப் பழகிக்கொள்கிறது. தமிழ்க் குழந்தைகள் தமிழைப் பேசப்பழகுகின்றன. ஆங்கிலக் குழந்தைகள் ஆங்கிலத்தைப் பேசப்பழகுகின்றன. 2 வருடத்தில் ஒரு குழந்தை செய்யும் காரியத்தை ஏன் இன்று வரை உங்களால் செய்ய முடியாமல் இருக்கிறது.

தவறான வழியில் ஆங்கிலத்தைக் கற்றுக் கொண்டதனாலேயே அது உங்களுக்கு கடினமாக இருக்கின்றது. எமது பழக்கப்படுத்தல் மூலமான பயிற்சி நெறியில் இலக்கணமோ, எழுத்துப் பயிற்சியையோ நாம் வழங்குவதில்லை மாறாக ஏனையவர்களுடன் உரையாடற் பயிற்சியில் ஈடுபடுத்துவதன் மூலமே ஆங்கிலம் பழக்கப்படுத்தப்படுகின்றது. இது குழந்தைகள் தம் தாய்மொழியைப் பழகுவதை அடிப்படையாகக் கொண்டது.

எமது பழக்கப்படுத்தல் மூலமான பயிற்சியில் இணைந்த அனைத்து மாணவர்களும் தற்போது ஆங்கிலத்தில் சரளமாக பேசுகின்றனர். நீங்களும் இப்பயிற்சி நெறியில் இணைய விரும்பினால் 24.09.2011 இற்கு முன் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.

சனி, ஞாயிறு பிரிவுகள்
பிரிவு I 08 - 10 a.m
பிரிவு II 10 - 12 a.m
பிரிவு III 01 - 03 p.m
பிரிவு IV 03 - 05 p.m

03 மாத பயிற்சிநெறிக் கட்டணம் ரூபா 3000.00

பயிற்சி நெறி முடிவில் பெறுமதியான சான்றிதழ் வழங்கப்படுவதோடு, மூன்று மாத பயிற்சி நிறைவில் உங்களால் ஆங்கிலத்தில் சரளமாக பேசமுடியாது விடின் முழுப்பணமும் திருப்பித் தருவதற்கான உத்தரவாதம்.

SAAMSON ENGLISH
279, மணிக்கூட்டுக் கோபுர வீதி, யாழ்ப்பாணம் (ஆஸ்பத்திரி பின்புறம்)
Tel: 0778214597

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதைகள் அமைத்து கட்டடங்களைக் கட்டிவிட்டால் வடக்கில் வசந்தத்தை ஏற்படுத்திவிட முடியுமா?

## அமைச்சர் டியூ குணசேகர கலந்து கொண்ட கருத்தரங்கில் சுரேஷ் கேள்வி

யாழ்ப்பாணம், செப்.22

பாதைகளை அமைத்து கட்டடங்களையும் கட்டிவிட்டால் மட்டும் வடக்கில் வசந்தத்தை ஏற்படுத்திவிடமுடியாது. முப்பது வருடங்கள் பின்தள்ளப்பட்டுள்ள எமது மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பும் வகையில் தொழிற்சாலைகளையும் தொழில் வாய்ப்புகளையும் ஏற்படுத்த நடிவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றார். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் கிறீன்கிறாஸ் ஹேட்டலில் "தேசிய மனித வள மற்றும் தொழில் வாய்ப்புகள் கொள்கை'' என்ற தலைப்பில் நடைபெற்ற பிராந்திய கருத்தரங்கில் சிறப்பு விருந்தினர்களுள் ஒருவராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதியின் 'வடக்கின் வசந்தம்' அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக அமைச்சர் டியூ குணசேகர கூறினார். அது வரவேற்கத்தக்கது. தேசிய ரீதியாக மனிதனை மற்றும் தொழில் வாய்ப்புகளைக் கண்டறிந்து அவற்றைச் செயற்படுத்தும் நோக்கத்துடனேயே இந்தக் கருத்தரங்கு நடைபெறுகின்றது.



இங்கு ஒன்றை கூட்டிக் காட்ட விரும்புகின்றேன். அரச அறிக்கைகளின்படி இங்கு 80 ஆயிரம் இளம் விதவைகள் இருக்கின்றனர். முழு குடும்பப் பெறுப்புமே இவர்களின் தலையிலேயே சுமத்தப்பட்டுள்ளது. இவர்களுக்கு ஒரு தையல் இயந்திரத்தையோ சிறு தொகைப் பணத்தையோ கொடுத்து விட்டால் போதாது.

அவர்களுக்கு நிரந்தரமான வருமானம் கிடைக்கக்கூடிய வழி வகைகளைக் கண்டறிய வேண்டும். தொழிற்சாலைகளை உருவாக்கி நல்ல பயிற்சிகளை வழங்கி தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும்.

இங்கு தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தக் கூடிய மூல வளங்கள் பெருமளவில் காணப்படுகின்றன. ஆனையிறவு உப்பளம், பரந்தன் இரசாயன தொழிற்சாலை, காங்கேசன்துறை சிமெந்து ஆலை, கண்ணாடி தொழிற்சாலை என்பன மூடிக் கிடக்கின்றன. இவை எல்லாம் மீளத் திறக்கப்பட வேண்டும்.

கடலோர செல்வங்களான முருகைக்கற்கள் சூறையாடப்படுகின்றன. இது தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

எமது பிரதேசங்களில் காணப்படும் மூல வளங்கள் கடத்தப்படாமல் இங்கேயே உற்பத்திகளை ஆரம்பித்தால் இங்கு வேலை இல்லாப் பிரச்சினையே ஏற்படாது.

நாட்டுக்குத் தேவையான மீன் 53 சதவீதம் வடபகுதி மீனவர்களினாலேயே வழங்கப்பட்டன. இன்று அதி உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் கடற்படையினர் ஆக்கிரமிப்புச் செய்துள்ளனர்.

மயிலிட்டி மீன்பிடித்துறைமுகம் கடற்படையினரிடமிருந்து மீட்கப்பட்டு கடற்றொழிலாளர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். சுதந்திரமாகத் தொழில் செய்ய அனுமதிக்கப்பட வேண்டும்.

இப்படி ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் வீதிகளை அமைத்து கட்டடங்களையும் கட்டுவதால் பயன் இல்லை. நொந்து போயுள்ள மக்களின் மனதைக் கட்டியெழுப்ப அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார் சுரேஷ் பிரேமச்சந்திரன் (ஒ-02)

# முஸம்மிலின் அலுவலகம் மீது தாக்குதல்

கொழும்பு,செப்.22

கொழும்பு மாநகரசபைக்கான தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் மேயர் வேட்பாளரான முஸம்மிலின் அலுவலகம் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொழும்பு பம்பலப்பிட்டியில் அமைந்திருந்த வேட்பாளர் முஸம்மிலின் அலுவலகம் மற்றும் கொட்டாஞ்சேனையில் அமைந்திருந்த அவரது ஆதரவாளர் ஒருவரின் வீடு ஆகியவற்றின் மீதே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் ஆளுங்கட்சி சார்பில் மேயர் வேட்பாளராகப் போட்டியிடும் முன்னாள் அமைச்சர் மிலிந்த மொரகொடவே இந்தத் தாக்குதல்களின் பின்னணியில் செயற்பட்டுள்ளார் என முஸம்மில் குற்றம் சாட்டியுள்ளார்.

அத்துடன் கொழும்பில் ஆளுங்கட்சி வேட்பாளர்கள் மக்களின் வாக்குகளைக் கொள்ளையடிக்கும் வகையில் வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர் எனவும் அவர் கண்டனம் தெரிவித்துள்ளார். (ச)

# வாக்குகளைக் கொள்ளையடிக்க போலி தேசிய அடையாள அட்டை

## திஸ்ஸஅத்த நாயக்க குற்றச்சாட்டு



கொழும்பு,செப்.22

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வாக்குகளைக் கொள்ளையடிப்பதற்காக அரசு போலி தேசிய அடையாள அட்டைகளைத் தயாரித்து வருவதாக ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் அத்தநாயக்க நேற்று முன்தினம் குற்றஞ்சாட்டினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியதாவது:

அரசுக்கு மக்கள் ஆதரவு இருந்தால் அரசு ஏன் இப்படிச் செயற்பட வேண்டும்? அது மாத்திரமின்றி, அரசு எமது வேட்பாளர்களைப் பணம் கொடுத்து வாங்கவும் முயற்சி செய்கிறது. வேட்பாளர்களுக்கு லட்சக் கணக்கான ரூபாவை விலையாக நிர்ணயிக்கின்றது.

ஹம்பாந்தோட்டையில் இந்த செயற்பாடு தீவிரமாக இடம் பெறுவதாக எமது பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ கூறியுள்ளார். எமது வேட்பாளர்கள் இந்தப் பணத்திற்கு அடிபணிய மாட்டார்கள் - என்றார்.



கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்திற்கு ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க, கொழும்பு மாநகரசபை மேயர் வேட்பாளர் ஏ.ஜே.எம். முஸம்மில் ஆகியோர் வருகை தந்தபோது .

# அரசியல் சக்தியை உறுதிப்படுத்த எமக்கே வாக்களியுங்கள்

## மனோ கணேசன் தெரிவிப்பு

ஜனநாயக மக்கள் முன்னணிக்கு வழங்கப்படும் ஒவ்வொரு வாக்கும் தமிழ் மக்களின் ஜனநாயக அரசியல் சக்தியை கொழும்பிலே உறுதிப்படுத்துகின்ற வாக்காகும். அந்த வாக்கு தொகையை அடிப்படையாக வைத்துக்கொண்டே ஆளுகின்ற அரசுடனும், ஏனைய பெரும்பான்மை கட்சிகளுடனும் எம்மால் பேரம்பேச முடியும் - என்று ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் மட்டக்குளி, கதிரானவத்தையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

கொழும்பிலே நாம் எமது சகோதர இனத்தவர்களுடன் ஐக்கியமாக வாழ வேண்டும் என்பதும் எங்களுக்குத் தெரியும். அதே போல் ஐக்கியமாக வாழ்வது என்பது எமது உரிமைகளை விட்டுக் கொடுத்து வாழ்வது அல்ல என்பதுவும் எங்களுக்குத் தெரியும்.

சிங்கள சகோதரர்களுடன் நாங்கள் வாழ்கின்றோம். ஐக்கிய இலங்கைக்குள்ளே அவர்களுடன் ஐக்கியமாக வாழவே நாம் விரும்புகின்றோம் - என்றார்.

# கொழும்பில் 60 ஆயிரம் வீடுகள் உடைப்பு என்பது கட்டுக்கதை

## அமைச்சர் விமல் தெரிவிப்பு

கொழும்பு,செப்.22

கொழும்பு நகரில் 60 ஆயிரம் வீடுகள் உடைக்கப்படுகின்றன என்பது கட்டுக்கதை. குறைந்த வசதிகளையுடைய மக்களுக்கு அதே இடங்களில் வசதிகளுடனான மாடிவீட்டுத் திட்டங்களே முன்னெடுக்கப்படுகின்றன. மாறாக கொழும்பு நகர் மக்களை வெளியேற்றும் எண்ணமும் அரசுக்கு இல்லை.

- இவ்வாறு பொறியியல், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் துறை- அமைச்சர் விமல் வீரவன்ச நேற்றுமுன் தினம் முன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்தார்.

அத்துடன், கொழும்பு நகரில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டிருந்த வீடுகளும், கட்டடங்களும் நீதிமன்ற உத்தரவின் பேரில் அகற்றப்பட்டன .

நாடாளுமன்றில் நேற்றுமுன் தினம் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது கொழும்பு மாநகரிலுள்ள 60 ஆயிரம் வீடுகள் உடைக்கப்படுகின்றன என்றும், அதனூடாக அரசின் திட்டம் என்ன எனவும் வீடமைப்பு அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.

மேலும் பொரளை - சாஸ்புர பகுதியில் 38 வீடுகளும், வனாத்தமுல்லயில் 88 வீடுகளும், புளூமெண்டல் பகுதியில் 260 வீடுகளும் இவ்வாறு உடைக்கப்பட்டுள்ளன என்பதையும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க சுட்டிக் காட்டினார். இதற்குப் பதிலளித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

அத்துடன், 60 ஆயிரம் வீடுகள் உடைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் தகவலிலும் எவ்வித உண்மையும் இல்லை. கொழும்பு நகரில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டிருந்த வீடுகளும், கட்டடங்களுமே நீதிமன்ற அனுமதியின்பேரில் உடைக்கப்பட்டன என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடிவு கிடைக்காத வெள்ளாங்குளம் வீதியால் புழுதியிலும் மேடு பள்ளத்திலும் மக்கள் அவலம்

துணுக்காய், செப்.21

பலமுறை கோரிக்கைகள் விடுக்கப்பட்டதுடன் பத்திரிகைகளில் செய்திகள் வந்துள்ள போதும் மாங்குளத்திலிருந்து துணுக்காய் ஊடாக வெள்ளாங்குளம் செல்லும் பிரதான வீதி எதுவித புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ளப்படாது மோசமான நிலையில் இருந்து வருவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

சுமார் 40 கிலோ மீற்றர் நீளமான இந்தப் பிரதான வீதி யுத்தத்துக்கு முன்னர் கிரவல் மண்ணால் சீர் செய்யப்பட்டது. ஆனால் யுத்தம் முடிவுக்கு வந்துள்ள போதிலும் இந்த வீதி எந்த விதப் புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ளப்படாமல் மோசமான நிலையை அடைந்துள்ளது. மேலும் இந்த வீதியி லிருந்து கிளம்பும் கிரவல் புழுதியினால் மோசமான பாதிப்புக்கள் தோன்றியுள்ளன. வீதியோரத்திலுள்ள மரங்கள், வீடுகள், வர்த்தக நிலையங்கள் என்பன கிரவல் புழுதி நிறத்துக்கு மாறியுள்ளன.

இதனைக் கொண்டு இங்கு வாழும் மக்கள் எத்தகைய பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர். என்பதை யூகிக்க முடியும். மேலும் இந்த வீதியூடாகத் தினமும் ஏராளமான வாகனங்கள் பயணம் செய்கின்றன. இவற்றுள் கிரவலை ஏற்றிச் செல்லும் நூற்றுக்கணக்கான வாகனங்களும் அடங்கும். இந்த நிலையில் இந்த வீதியூடாகப் பயணிப்போர் சொல்ல முடியாத அளவு சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர். ஒரு புறம் புழுதிக் குளியல், மறு புறம் மேடுபள்ளம் நிறைந்த வீதியின் அவல நிலை. இதனால் பல விபத்துச் சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன.

அபிவிருத்தியைப் பற்றிப் பேசுவோர் முதலில் மிக மோசமான நிலையிலுள்ள இந்த வீதியின் அவல நிலையைப் போக்கித் தமக்கு உதவ வேண்டுமெனத் தினமும் பாதிக்கப்பட்டு வரும் மக்கள் அவசர வேண்டுகோள் விடுக்கின்றனர். (க-425)

கல்விக்குப் புகழாரம்....



கல்விப் பயணம் தொடரட்டும்- தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தமிழ் மொழி மூலம் அகில இலங்கை ரீதியில் மூன்றாவது இடத்தையும், மாகாண மட்டத்தில் இரண்டாவது இடத்தையும், மாவட்ட மட்டத்தில் முதலாவது இடத்தையும் பெற்ற வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி மாணவி செல்வி சர்மிகா சர்வானந்தன் பாடசாலை அதிபர் மேரி யோசெப்பின் சந்தியாப்பிள்ளை, வவுனியா நகரசபை உப தலைவர் எம்.எம்.ரதன், வவுனியா நற்பணி மன்றத் தலைவர் செ.மயூரன் மற்றும் பெற்றோர்களுடன்.

# கண்டாவளை பிரதேச செயலகத்தின் கலாசார விழா அடுத்தமாத இறுதியில்



கிளிநொச்சி, செப்.22

கண்டாவளைப் பிரதேச செயலகத்தின்கீழ் இயங்கி வரும் கலாசாரப் பேரவையால் நடத்தப்படும் கலாசார விழா அடுத்த மாதம் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்திலுள்ள கலைஞர்களை ஊக்குவிக்கும் முகமாகவும்மூத்தகலைஞர்களைக் கௌரவிக்கும் முகமாகவும் இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த விழா தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கடந்த 14 ஆம் திகதி கண்டாவளைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கண்டாவளைப் பிரதேச செயலரும் பிரதேச கலாசாரப் பேரவையின் தலைவருமான எஸ். சத்தியசீலன் தலைமையில் நடைபெற்றது. இதில் பேரவையின் நிர்வாக சபை உறுப்பினர்கள், கிராம அலுவலர்கள், பிரதேசத்தைச் சேர்ந்த கலைஞர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். இந்தக் கலந்துரையாடலின் போது கலாசார விழா நடத்துவது , மலர் வெளியீடு ஆகியன தொடர்பாக ஆராயப்பட்டன. மேலும் அடுத்தமாத இறுதிப் பகுதியில் மாபெரும் கலாசார விழாவை நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இவை தொடர்பான விவரங்கள் கிராம அலுவலர்கள், பாடசாலை அதிபர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்படுமென பிரதேச செயலர் குறிப்பிட்டார். (க-421)

# மன்னாரில் சர்வமத நிகழ்வு

இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் சர்வ மதத்தலைவர்கள்கலந்து கொண்ட சர்வமத நிகழ்வொன்று நேற்று முந்தினம் செவ்வாய்க் கிழமை மாலை 4 மணியளவில் மன்னார் சமூகத் தொடர்பு அருட்பணி மையத்தில் இடம் பெற்றது. இதில் தென்பகுதியில் இருந்து சர்வமதத்தலைவர்கள், மற்றும் தென்பகுதி மக்கள் என சுமார் 50 பேர் வரை வருகை தந்திருந்தனர்.

இதன் போது மன்னார் மாவட்ட மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் குறிப்பாக யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள பெண்கள் மற்றும் சிறுவர்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகள் பற்றியும் காலந்தாலேசிக்கப்பட்டது.

இதன்போது சர்வமதத்தலைவர்கள் மற்றும் தென்பகுதி மக்கள் மத்தியில் மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை கலந்து கொண்டு தமிழ் மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளை தெரிவித்தார். (க-601)

# மக்களின் பாவனைக்கு உதவாத நிலையில் வளநகர், திருநகர் செல்லும் வீதி

துணுக்காய், செப்.22

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வளநகர், திருநகர் பகுதிக்குச் செல்லும் நீர்ப்பாசனத் திணைக்களத்துக்குச் சொந்தமான பண்ட் வீதி மக்கள் பாவனைக்கு உதவாத நிலையில் மிகவும் மோசமான நிலையில் காணப் படுவதாகத் தெரிய வருகின்றது.

மேற்படி வளநகர், திருநகர் ஆகிய கிராமங்களிலும் சுமார் நானூறுக்கு மேற்பட்ட குடும்பங்கள் நிரந்தரமாகத் தங்கி வாழ்ந்து வருகின்றனர்.

அண்மையில் ஏற்பட்ட போர் நடவடிக்கையால் இடம் பெயர்ந்து மீளவும் குடியமர்த்தப்பட்டு இரண்டு வருடங்கள் ஆகியும் இந்த வீதி புனரமைக்கப்படாது புல், பூண்டுகள் மூடிக் காணப்படுகின்றது.

அத்துடன் நாடோடி வாய்க்கால், நவகிரக வாய்க்கால், வைரவ வாய்க்கால், பிள்ளையார் வாய்க்கால் போன்ற வயல் வெளிகளுக்குச் செல்லும் இந்த வீதியானது மக்கள் பாவனைக்கு உதவாத நிலை யில் இருந்து வருவதால் உரிய அதிகாரிகள் இந்த வீதியைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனப் பிர தேச வாசிகள் கேட்டுக் கொண்டுள்ளனர். (க)

# இருளில் சிவன் கோயில் வீதி மக்கள்

துணுக்காய், செப்.22

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மல்லாவி சிவன்கோயில் வீதியில் வசிக்கும் சுமார் 20இற்கும் அதிகமான குடும்பங்கள் மின் வெளிச்சம் இன்மையால் இருளில் வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மல்லாவி சிவன் கோயில் வீதியில் யுத்தம் முடிவுக்கு வந்ததால் மீள்குடியமர்ந்த 20 இற்கும் அதிகமான குடும்பங்கள் தங்கள் வாழ்விடங்களைச் சீராக்கி வாழ்ந்து வருகின்றனர்.

வீட்டுத்திட்டம் மூலம் 15 இற்கும் மேற்பட்ட நிரந்தரக்கல் வீடுகள் இருந்தும் மின்சார வசதிகள் இன்றி வாழ்ந்து வருகின்றன. இதனால் மாணவர்களின் கல்வி நிலைகள் வெகுவாகப் பாதிப்படைந்து வருவதாக மக்கள் கவலையுடன் தெரிவித்தனர். (க)

# மனித உரிமைகள் நடமாடும் சேவை கண்டாவளையில் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.22

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உள்நாட்டில் இடம் பெயர்ந்தோர் மற்றும் மீள் திரும்பியோருக்கான தேசிய பாதுகாப்புக்கும் நிரந்தர தீர்வுக்குமான செயற்றிட்டத்தால் கண்டாவளைப் பிரதேச் செயலகப் பிரிவில் கிராம சேவையாளர் பிரிவுகளான கோரக்கண்கட்டு, பரந்தன், தட்டுவன்கொட்டி, ஊரியான் மக்களுக்கான நடமாடும் சேவை ஒன்று கண்டாவளைப் பிரதேசசெயலகத்துடன் இணைந்து நாளைய தினம் காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.15 மணி வரை கோரக்கன் கட்டு குடியிருப்புப் பகுதியில் அமைந்துள்ள புலேந்திரன் முன்பள்ளி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் கண்டாவளை பிரதேச செயலகம், இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு, பதிவாளர் நாயகம் திணைக்களம், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, சமூக சேவைகள் திணைக்களம், சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு, மாங்குளம் பொலிஸ் நிலையம், பால்நிலை வன்முறைக்கு எதிரான அமைப்பு, கமநல சேவைகள் அபிவிருத்தி திணைக்களம், விவசாயத் திணைக்களம், நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புத் திணைக்களம், கரைச்சிப் பிரதேச சபை ஆகியன தமது சேவைகளை வழங்கவுள்ளன.

எனவே இப்பகுதி மக்கள் இந்த நடமாடும் சேவையில் பங்குபற்றுவதன் மூலம் தங்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

# மாங்குளம் புதிய கொலனிப் பகுதியில் மர்ம மனிதனின் நடமாட்டத்தால் அச்சம்

மல்லாவி, செப்.22

மாங்குளம் புதிய கொலனியில் மர்ம மனிதனொருவன் நுழைந்துள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. மாங்குளம் ஏ-9 வீதிக்கு அண்மையில் மாங்குளம் கிராம சேவை அலுவலரின் அலுவலகம் அமைந்துள்ளது. இதற்கு முன்புறத்தில் புதிய கொலனி மக்கள் குடியிருப்புப் பகுதி அமைந்துள்ளது.

கடந்த 19 ஆம் திகதி இரவு 9.30 மணியளவில் இந்த மக்கள் குடியிருப்புப் பகுதியிலுள்ள ரஞ்சித் என்பவரின் வீட்டின் பின்புறத்தில் கைத்தொலைபேசி ஒலிக்கும் சத்தம் கேட்டுள்ளது.

வீட்டிலிருந்தவர்கள் சூரிய சக்தியால் இயங்கும் விளக்குகளை ஒளிரவிட்டபின் அந்த இடத்துக்குச் சென்ற போது மர்ம மனிதன் ஒருவன் ஓடிய தைக் கண்டனர். இதனால் அச்ச மடைந்த அவர்கள் [illegible] டன் அயலவர்களும் இணைந்து கொண்டனர். ஆனால் அந்த மர்ம மனிதன் ஓடித்தப்பிவிட்டான்.

பின்னர் அந்த இடத்தில் தேடுதல் நடத்திய போது இயங்கிக் கொண்டிருந்த கைத்தொலைபேசி ஒன்று கறுப்பு நிற நீளக் காற்சட்டை, 200 ரூபா பணம் என்பன கண்டெடுக்கப்பட்டன. கைத்தொலைபேசியில் யாரையோ தொடர்ந்து அழைப்பது கேட்டது.

இந்தச் சம்பவத்தைக் கேள்வியுற்றதும் அருகிலுள்ள இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவ அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்துள்ளனர். கண்டெடுக்கப்பட்ட கைத்தொலைபேசி, காற்சட்டை என்பவற்றை அவர்கள் தம்முடன் எடுத்துச் சென்றுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இந்தச் சம்பவத்தால் அங்குள்ள மக்கள் இரவு முழுவதும் விழித்திருந்ததைக் காண முடிந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-425)

# துணுக்காய் பிரதேச சபைக் கூட்டம்

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய்ப் பிரதேசத்தில் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் துணுக்காய் பிரதேச சபை உறுப்பினர்களுக்கான கூட்டம்கடந்த 12ஆம் திகதி மு.ப. 10.30 மணியளவில் பிரதேச சபைக் கேட்போர் கூடத்தில் அதன் தவிசாளர் வீ. இராச ரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி கூட்டத்தில் துணுக்காய் பிரதேச சபையில் இருக்கும் நெருக்கடிகளை தீர்ப்பதற்கு மேலும் வாகனங்களைப் பெற்றுக் கொள்வது தொடர்பாகவும் வருமானத்தைப் பெருக்க ஆளணிகளைச் சேர்த்தல், துணுக்காய் பிரதேச சபை ஆளுகைக்குள்ள சிறு வீதிகளை இனம் கண்டு அபிவிருத்தி செய்தல் போன்ற விடயங்களையும் ஆராய்ந்தனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 600 தொண்டராசிரியர்கள் நிரந்தர நியமனம் பெறுவர்

## கல்வியமைச்சர் கலந்துரையாடலின்போது உறுதிமொழி

யாழ்ப்பாணம், செப். 22

2005 ஆம் ஆண்டு ஆசிரிய உதவியாளர் நியமனம் வழங்கப்படாத வடமராட்சி கிழக்கு உட்பட வன்னியைச் சேர்ந்த 600 தொண்டராசிரியர்களுக்கு விரைவில் ஆசிரிய உதவியாளர் நியமனம் வழங்கப்படவுள்ளது. இதற்கான பிரேரணை விரைவில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படும். இவ்வாறு கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். இது தவிர ஆசிரிய உதவியாளர்கள் 500 பேருக்கு 2 வருட பயிற்சியும் வழங்கப்படவுள்ளது.

வடமாகாணக் கல்வி அபிவிருத்தி சம்பந்தமான கூட்டம் யாழ்.பொது நூலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட அமைச்சரிடம் தொண்டராசியர்களது நியமனம் தொடர்பான கோரிக்கை முன் வைக்கப்பட்டது. அது பற்றிக் கருத்துத் தெரிவித்த போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

2005 ஆம் ஆண்டு வடமாகாணத்தைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட தொண்டராசிரியர்களுக்கு ஆசிரிய உதவியாளர் நியமனம் வழங்கப்பட்டது. அந்தக் காலத்தில் வடமராட்சி கிழக்கு உட்பட வன்னி நிலப்பரப்பு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. அதனால் இந்தப் பகுதிகளைச் சேர்ந்த தொண்டராசிரியர்கள் தெரிவு செய்யப்பட்ட போதும் அவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படவில்லை. இந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களைத் தவிர வடமாகாணத்தின் ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே 2005 இல் நியமனம் வழங்கப்பட்டது.

இவ்வாறு 2005 இல் ஆசிரிய உதவியாளர் நியமனம் வழங்கப்படாத600தொண்டார்ஆசிரியருக்கே தற்போது நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இது தவிர யாழ்.மாவட்டத்திலுள்ள ஆசிரிய உதவியாளர்களில் சுமார் 500 பேருக்கு இரண்டு வருட பயிற்சி நெறி வழங்கப்படவுள்ளது. பலாலி ஆசிரிய கலாசாலை, மற்றும் கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஆகியவற்றில் இந்தப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. பயிற்சிக் காலத்தில் ஆசிரிய உதவியாளர்கள் வாரத்தில் மூன்று நாள்கள் பயிற்சி பெறவும் மூன்று நாள்கள் பாடசாலையில் கடமையாற்றவும் ஏற்றதாக ஒழுங்குகள் மேற்கொள்ள எண்ணியிருப்பதாகவும் இது பற்றி இன்னும் தீர்மானம் எடுக்கப்படவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-4)

## காலபோகத்துக்கு நீர் விநியோகம்

அக்கராயன்,செப்.22

அக்கராயன் குளத்திலிருந்து காலபோக நெற்செய்கைக்கு நீர்விநியோகம் நடைபெறும் எனத் தெரியவந்துள்ளது.

கடந்த 20 ஆம் திகதியன்று கிளிநொச்சி அரச செயலகத்தில் நடைபெற்ற விவசாயக் குழு கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனைத்தொடர்ந்து வயல் நிலங்களை துப்பரவு செய்து பயன்படுத்துமாறு ஸ்கந்தபுரம், அக்கராயன் ஐயனார் கமக்கார அமைப்பு விவசாயிகளை அறிவுறுத்தியுள்ளது.மேலும் இது தொடர்பான விசேட கூட்டம் எதிர்வரும் 7 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் ஸ்கந்தபுரம் இல-01 பாடசாலையில் நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-410)

## நீதிபதி அல்லது வைத்தியராவது தான் எனது லட்சியம் என்கிறார் சிவேகா

கிளிநொச்சி, செப்.22

எதிர்காலத்தில் ஒரு நீதிபதியாகவோ அல்லது வைத்தியராகவோ வரவேண்டும் என்பதே எனது லட்சியமாகவுள்ளது. இவ்வாறு தெரிவிக்கின்றார் நடந்து முடிந்த தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் 182 புள்ளிகளைப் பெற்று கிளிநொச்சி மாவட்டத்தில் இரண்டாவது இடத்தைப் பெற்ற தர்மபுரம் இலக்கம் 01 பாடசாலை மாணவியான செல்வி பாலகிருஷ்ணன் சிவேகா.



யுத்தத்தினால் இடம் பெயர்ந்து பல பாடசாலைகளில் கல்வி கற்றேன். ஆனால் புலமைப் பரிசில் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்று சித்தியடைய வேண்டுமென்ற எண்ணம் எனது மனதில் ஆழப்பதிந்திருந்தது.

தற்போது நான் இந்தச் சிறந்த பெறுபேற்றினைப் பெற் றுக் கொண்டமைக்கு வகுப்பாசிரியர், அதிபர், பெற்றோர்கள் ஆகியோருக்கு நான் நன்றி கூற வேண்டும் என மேலும் அவர் தெரிவித்தார். (க-6)

## வீதிகளைப் புனரமைக்குமாறு கோரிக்கை

கிளிநொச்சி நகரிலுள்ள பிரதான வீதிகளைப் புனரமைத்து வழங்குமாறு மக்கள் கோரியுள்ளனர். பிரதான வீதிகளான புகை யிரத நிலைய வீதி, கரைச்சிப் பிரதேச சபைக்கு முன்பாகவுள்ள வீதி ஆகியவற்றையே புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த இரு வீதிகளும் திருத்தம் மேற்கொள்ளப்படாத நிலையில் புழுதி நிறைந்த வீதிகளாகக் காணப்படுகின்றன. இதனால் பெரும் போக்குவரத்து இடையூறுகள் ஏற்படுகின்றன. இந்த வீதிகளிலே எழும் புழுதியால் பலரும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர். இந்த இரு வீதிகளையும் புனரமைத்து வழங்குமாறு பல்வேறு அமைப்புகளும் கோரிக்கை விடுத்துள்ளது. (க)

## வவுனியாவில் டெங்கு ஒழிப்பு வாரம்

வவுனியா, செப்.22

வவுனியாவில் டெங்கு பரவும் அபாயம் உள்ளதால் டெங்கு ஒழிப்பு வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்ட டெங்கு ஒழிப்பு வாரத்தில் வீட்டு உரிமையாளர்கள் தமது வீடுகளையும் அதனை அண்டிய இடங்களையும் துப்புரவு செய்ய வேண்டும்.

இதைப் போன்று அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் துப்புரவுப் பணிகளில் ஈடுபட வேண்டும்.

பொது இடங்களை கிராமிய ரீதியாக உருவாக்கப்பட்டுள்ள கிராம சேவகரைத் தலைமையாகக் கொண்ட டெங்கு ஒழிப்புக்குழுக்கள் துப்புரவு செய்ய வேண்டும்.

இதே வேளை டெங்கு நுளம்புகள் பரவக் கூடிய இடங்கள் அடையாளம் காணப்பட்டு அதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## வாகன இலக்கத் தகடுகள்

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் மோட்டார் போக்குவரத்துக் கிளையில் விண்ணப்பித்தவர்களுக்கான வாகன இலக்கத் தகடுகளின் மேலும் ஒரு தொகுதி கிடைக்கப்பெற்றுள்ளதாகக் கிளிநொச்சி அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

அலுவலக நேரத்தில் வாகனப் பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதி மற்றும் புகைப்படப் பிரதி, தேசிய அடையாள அட்டை, பழைய இலக்கத் தகடுகள் (பழைய பதிவேடுகளுக்கு மாத்திரம்) ஆகியவற்றைச் சமர்ப்பித்து இவற்றைப் பெற்றுக் கொள்ள முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

| | | | |
|---|---|---|---|
| PB-7249 | HH-9294 | KI-5410 | LA-2695 |
| GD-0556 | GW-6254 | JX-6970 | HI-4073 |
| HC-75 | JO-6525 | LH-0170 | MM-4908 |
| HC-6898 | QE-7390 | HA-6344 | HF-6567 |
| LB-3164 | LB-1720 | PD-8778 | PB-9009 |
| HF-9748 | JB-2642 | JB-6549 | GT-1463 |
| PA-4930 | LB-4779 | QD-1329 | WS-2373 |
| YM-9854 | GW-1578 | GG-4697 | HW-4936 |
| PC-7565 | LC-3740 | SG-2907 | PF-1612 |
| GS-2418 | HT-5443 | PC-4154 | QI-1258 |
| PD-5599 | YN-6263 | YN-2066 | YM-9853 |
| SA-1247 | QD-2023 | JV-5285 | RB-2214 |
| QY-2942 | HU-2457 | GF-2585 | KB-6786 |
| HT-5218 | HS-0678 | GD-4761 | GB-3042 |
| RW-0691 | JC-9105 | JB-7575 | KC-5039 |
| HN-7301 | HT-5439 | GT-0362 | QE-7399 |
| YL-1502 | KH-0084 | JD-8386 | PC-8035 |
| GD-4887 | JL-1079 | GJ-3536 | LA-5984 |
| GA-9928 | KH-3738 | KF-7116 | RW-1997 |
| QE-7400 | HT-0867 | GC-2149 | (தொடரும்) |

## மக்களின் தேவைகள் யாவும் நிறைவேற்றப்பட வேண்டும்

### கிளிநொச்சி அரச அதிபர் தெரிவிப்பு

எமது மாவட்டத்தில் பல்வேறுவிதமான தேவையுடைய மக்கள் உள்ளனர். அவர்களுடைய தேவைகள் யாவும் நிறைவேற்றப்படவேண்டும். இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட அரசஅதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்

ஆஸ்திரேலிய மக்களின் நிதிப் பங்களிப்புடன் கிளிநொச்சி கல்லாறு கிராமத்தில் அமைக்கப்பட்ட வீடுகளைப் பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்ட மாவட்ட அரசஅதிபர் உரையாற்றும்போது, எமது மாவட்டத்தில் பல்வேறு தேவையுடைய மக்கள் உள்ளனர். பெண்களைத் தலைவர்களாகக் கொண்ட குடும்பங்கள் விசேட தேவையுடைய குடும்பங்கள், பெற்றோரை இழந்த சிறுவர்கள் என்ற வகையில் பல்வேறு தேவைகளைக் கொண்ட மக்கள் உள்ளனர். இவர்கள் எல்லோரையும் உள்ளடக்கிய வகையில் உதவிகள் கிடைக்க வேண்டும். இங்கு வீடுகளைக் கொடுத்தாலும் இங்கே உள்ள குடிதண்ணீர் போன்ற அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும்.

கடந்த ஒன்றரை வருடத்தில் மிகத் துரிதமாக மக்கள் மீளக்குடியமர்ந்துள்ளனர். இருந்த போதும் 30 ஆயிரம் பேருக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டியுள்ள தேவையுள்ள போதும் 12 ஆயிரம் தொடக்கம் 15 ஆயிரம் வரையான வீடுகளையே கட்டி கொடுக்கக் கூடியதாக உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-6)

## வன்னிப் பிரதேச மாணவருக்கு விரைவில் திறந்த பல்கலைக்கழக கற்கைநெறிகள்

கிளிநொச்சி, செப்.22

இலங்கை திறந்த பல்கலைக்கழகம் வன்னிப்பிரதேச மாணவர்களுக்கான கற்கை நெறிகளை விரைவில் ஆரம்பித்து வைக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தொழிலுரிமைத்துவமும் சிறு வியாபார முகாமைத்துவமும் சான்றிதழ் கற்கை நெறி 2012, மற்றும் முன்பள்ளி கல்விச் சான்றிதழ் ஆகிய சான்றிதழ் கற்கை நெறிகள் ஆரம்பமாகவுள்ளன.

தொழிலுரிமைத்துவமும் சிறு வியாபார முகாமைத்துவமும் சான்றிதழ் கற்கை நெறிக்குரிய தகைமைகள், விண்ணப்ப முடிவுத்திகதி அன்று 18 வயது அல்லது அதற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

திறந்த பல்கலைக்கழகத் [illegible] அடிப்படைக் கற்கை நெறியில் இரண்டு கணிப்பு விகிதத்தை அல்லது விலக்களிப்பைப் பெற்றிருத்தல் வேண்டும்.

க. பொ.த (சாதாரண தரம்) பரீட்சையில் இரு தடவைக்கு மேற்படாத அமர்வில் 6 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

பல்கலைக்கழக அவையினால் ஏற்றுக்கொள் ளக்கூடிய ஏதாவது தகைமை கள் இருத்தல் வேண்டும்.

இக்கற்கை நெறிக்கு தெரிவுப் பரீட்சை இடம் பெற மாட்டாது.

முன் பள்ளிக் கல்விச் சான்றிதழ் கற்கை நெறிக்குரிய தகைமைகளாக விண்ணப்பதாரி 18 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். க.பொ.த சாதாரண பரீட்சையில் தமிழ் மொழி, கணிதம், உட்பட குறைந்தது ஆறு பாடங்களிலாவது சித்தி பெற்றிருத்தல் வேண்டும். தெரிவு செய்த மொழியில் போதுமான அறிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

இந்த இரு கற்கை நெறிகளுக்கும் தகுதியான விண்ணப்பதாரிகள் கிளிநொச்சி சென் திரேசா மகா வித்தியாலத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்து எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன்னர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்,யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு தபாலில் அனுப்பி வைக்குமாறு இலங்கை திறந்த பல்கலைக்கழகம் யாழ். பிராந்திய இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

முன்பள்ளி சான்றிதழுக்குரிய தகுதிகாண் பரீட்சை இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-450-311)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வசந்தகாலம்

இந்த உலகம் அறியாத
அன்னையின் அரவணைப்பில்
இருந்த காலம் - புதுமைக்காலம்

பூஞ்சிட்டாக பூமி மீது தவழ்ந்து
புதுயுகம் படைக்கவென
பள்ளி சென்ற காலம்- பள்ளிக்காலம்

கல்லூரியிலே கல்வி ஒருபுறம்
குறும்புகள், குழறுபடிகள்
குழுக்களாக நண்பிகளுடன்
கழித்த காலம்- வசந்தகாலம்

என்னதான் வரம் வந்து
கிடைத்தாலும் பள்ளி தவிர்ந்த
எந்த இனிய காலமும்-
சிறைக்காலம்தான்

**எஸ்.டிலானி,**
2011 உயர்தரம் கலைப்பிரிவு,
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

# விட்டுக்கொடுத்துப் பழக வேண்டும்



நாம் பலருடன் பேசிப் பழகுவது இயல்பு. ஆனால்அவர்களுக்காக விட்டுக் கொடுத்துப் பழகுவது குறைவாக உள்ளது. நம்மில் தவறு என்றால் கண்டிப்பாக விட்டுக் கொடுத்து வாழ வேண்டும். இல்லையேல் அதுவே அழிவுக்கான பாதையாகிவிடும்.

ஆனால் எல்லா விடயத்துக்கும் விட்டுக் கொடுக்கக் கூடாது. அதாவது பரீட்சை, விளையாட்டு போன்ற விடயங்களாகும். இவைகளில் போட்டிகள் மட்டும் தான் காணப்பட வேண்டும்.

நாம் கூடுதலாகப் பெற்றோர்களிடமும், சகோதரர்களிடமும், நண்பர்களிடமும், உறவினர்களிடமும், பெரியோர்களிடமும் விட்டுக் கொடுத்துப் பழக வேண்டும்.

ஆனால் அந்த விட்டுக் கொடுப்பு எல்லா விடயத்துக்கும் பொருந்தாது. இந்த விட்டுக் கொடுப்புத்தான் வெற்றிக்கு ஒருபடி.

**இரத்தினம் நர்மதன்,**
யாழ்.நெல்லியடி ம.ம.வித்தி.




# இந்த முறை இடம்பெற்ற உள்ளூராட்சி தேர்தலில் இளம் சமுதாயத்தினரின் பிரவேசம்

## போதாது

இளம் சமுதாயத்தினர் என்றாலே துடிதுடிப்பானவர்கள்தான். இவர்களுக்கு அரசியல் அனுபவம் அவசியம் தேவை. இவர்களினால் தான் நல்லதொரு எதிர் காலமும் அமையும். ஆனால் இன்றைய நாட்டின் நிலை அதற்குச் சாதகமானதல்ல. தமிழர் வாழும் தேசம் எல்லோர் பார்வையும் பார்க்கக்கூடிய அமைதியான தேசமல்ல. எமது தேசம் திறந்த வெளிச் சிறைச்சாலை. இவ்வாறு இருக்கும் தேசத்தில் எவ்வாறு இளம் சமுதாயம் இந்தத் தேர்தலில் பிரவேசிக்க முடியும்?

அரசியல் கட்சிகள் என்று சொல்லிக்கொண்டு அடாவடித்தனம் பண்ணுபவர்கள் மத்தியில் இளம் சமுதாயத்தினர் எவ்வாறு உண்மைக்குக் குரல் கொடுக்க முடியும்? முக்கால் பங்கு இளம் சமுதாயத்தினரை போரினால் முடக்கி நான்கு சுவர்களுக்குள் அடக்கிவிட்டார்கள்.

கொலைமிரட்டலும், அடிதடியுமாய் எப்போது எங்கு என்ன நடக்கும் என்ற அச்சத்தில் நடந்தேறியது இந்தத் தேர்தல்.

இந்தச் சூழலில் இருக்கும் மீதி இளம் சமுதாயத்தினரை இழந்து விடக்கூடாது என்பதால் மௌனம் காத்திடவே செய்தனர். நீதி செத்துப் போன எமது தேசத்தில் எவ்வாறு இளம் சமுதாயத்தினர் உண்மைக்குக் குரல் கொடுத்து உள்ளூராட்சித் தேர்தலில் பிரவேசிக்க முடியும்?

**க.கலையரசி,**
துணவி.

## போதுமானது

இந்தமுறை இடம் பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இளம் சமுதாயத்தினரின் பிரவேசம் போதுமானதே. பல பிரதேசங்களின் தலைவர் பதவிகளையும் இளைஞர்களே கைப்பற்றியுள்ளனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் குறிப்பிட்ட அளவில் கட்டாயம் இளைஞர்கள் போட்டியிட்டே ஆகவேண்டும் என்பது தேர்தல் சட்டமாக உள்ளது. அதற்கமைவாக இளைஞர்களும் சகல கட்சிகள் சார்பிலும் தேர்தலில் போட்டியிட்டனர்.

இதில் போட்டியிட்ட இளைஞர்களில் பெருமளவானோர் மக்களால் தெரிவுசெய்யப்பட்டனர். அதிலும் குறிப்பிட்ட சில பிரதேச சபைகளில் இளைஞர்கள் மக்களின் அதிகளவான விருப்பு வாக்கைப் பெற்று தலைவர்களாகவும் தெரிவாகியுள்ளனர்.

இளைஞர்களுக்குத் தேவையான வரை மக்கள் தமது அங்கீகாரத்தை வழங்கியுள்ளனர். மக்கள், இவர்களது செயற்பாடுகள் நாட்டை எதிர்காலத்தில் ஆளுகின்றவர்களின் செயற்பாடுகள் எவ்வாறு இருக்கின்றது என்பதை பார்ப்பதற்கு வழங்கிய சந்தர்ப்பம் ஆகும். இளமைத்துடிப்புடன் அனுபவம் சேரும் போதே நல்லாட்சி நடக்கும். எனவே அரசியல் அனுபவத்துக்கேற்ப இளமைத் துடிப்புள்ள இளைஞர்கள் தெரிவாகியுள்ளனர்.

**க.மயூரன்,**
இருபாலை.

இளைய சமூகத்தின் விவாதத்திறனுக்கும் களம் அமைத்துக் கொடுப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டிருக் கின்றது. எனவே

**ஆலயங்களில் மிருகபலியிடுதல்**

**ஏற்றுக் கொள்ளக் கூடியதொன்று**

**ஏற்றுக் கொள்ள முடியாது**

என்ற விவாதத்துக்கு உங்கள் கருத்துக்களை முன் வைத்து மோதுங்கள். வெற்றியைத் தீர்மானிப்பதும் நீங்களே. வெற்றி பெறும் என்று நீங்கள் கருதும் அணிக்கு வாக்களிக்க முடியும். வெற்றி பெறும் அணிக்கு வாக்களித்தவர்களில் மூவர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குப் பரிசில் வழங்கப்படும். அத்துடன் சிறந்த விவாதம் அனுப்புவோரில் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுப் பரிசில் வழங்கப்படும்.

# இறுதியில் வெல்வோம்

இன்னும் எத்தனை
முறைதான்
விழ வேண்டிவரும்
விடியலின் பூப்பறிக்க
விதி வரைந்த
பாதையில் நேர் கோடுகளாய்
பயணிக்கும்
பெண்களுக்கு
என்ன தான் இருக்கிறது?
எத்தனிக்கும் ஒவ்வொரு
முறையும்
கருவறையில் வைத்தே
கருச்சிதைவு
தொடரும் பயணங்களில்
தொட்டுவிட நினைக்கும் ஆசைகள்
தொலைதூரக் கனவாய்
உருக்குலைந்து போகிறது எமக்கு,
எம்- விருப்பு, வெறுப்புக்கள்
பெட்டிப் பாம்பாய்
அடங்கிப் போகிறது
உதட்டுப் புன்னகை
விலையேற்ற உயர்வால்
உருகும் நிலைதான்
இலட்சிய உறுதியோடு
செல்கிறோம்
இறுதியில் என்றாலும்
விடிவுகிடைக்கும் என்ற
நம்பிக்கையில்...

**சா.ஜிந்துஜா,**
கோண்டாவில்.



## இளவல்கள் வட்டம் வாக்குச் சீட்டு

**இந்த முறை இடம்பெற்ற**
**உள்ளூராட்சி சபைத் தேர்தலில்**
**இளம் சமுதாயத்தினரின் பிரவேசம்**

| போதுமானது | ☐ | போதாது | ☐ |
|---|---|---|---|

பெயர்: ........................................
முகவரி: ........................................
அடையாள அட்டை இல.. ........................................

உங்கள் தீர்ப்புக்களை 29.09.2011 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இந்த வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

**'இளவல்கள் வட்டம்',**
**'உதயன்',**
**50, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

பெயர் :- ........................................
முகவரி :- ........................................
........................................
........................ ........................
திகதி கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் புதிய குடும்ப அட்டையா? திருமலைப் பகுதித் தமிழர் அதிருப்தி

மூதூர், செப்.22

திருகோணமலை மாவட்டத்திலுள்ள மூதூர் கிழக்கில் யுத்தத்தால் இடம்பெயர்ந்து மீள்குடியமர்த்தப்பட்ட மக்களிடையே மீண்டும் புதிய குடும்ப அட்டைப் பதிவுகள் பொலிஸாரால் மேற்கொள்ளப்படுகின்றமை அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

சேனையூர், கட்டைபறிச்சான், கடற்கரைச் சேனையின் ஒரு பகுதி பிரதேச மக்களுக்கு மீள்குடியமர்த்தும் போது பொலிஸாரினால் குடியிருப்பாளர்களின் விவரம் பெறப்பட்டு, குடும்ப பதிவு அட்டை வழங்கப்பட்டது.

தற்போது அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்ட நிலையில் மீண்டும் இந்தப்பகுதிகளில் பொலிஸாரினால் குடும்பப் பதிவு அட்டை புதுப்பிக்கப்படுகின்றது. பொலிஸாரினால் முன்னர் வழங்கப்பட்ட குடியிருப்பாளர் விவரம் அடங்கிய குடும்பப் பதிவு அட்டை உரியவர்களிடமிருந்து பெறப்பட்டு, புதிய குடும்பப் பதிவு அட்டை வழங்குவதற்கான ஆயத்தங்கள் பொலிஸாரினால் மேற்கொள்ளப்படுகின்றன என்று அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அவசரகாலச்சட்டம் நீக்கப்பட்ட நிலையில் குடியிருப்பாளர் விவரம் புதுப்பிக்கப்படுவது எந்தச்சட்டத்தின் கீழ் நடைபெறுகின்றது என்று புத்திஜீவிகள் கேள்வி எழுப்புகின்றனர்.

இந்தப் பதிவுகள் மேற்கொள்வது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மெக்ஸி புரொக்டரிடம் வினவியபோது,

நாட்டின் பாதுகாப்புக் கருதியும் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்குமான உறவைப் பலப்படுத்தும் வகையில் பொலிஸாரால் பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறானதொரு நடவடிக்கையே திருகோணமலைப் பிரதேசத்திலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுகுறித்து பொது மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் பிரதேசங்களின் நிலைமை கையாளப்படும்- என்றார்.

# போலி நாணயத் தாள்களுடன் கேகாலையில் இரு பெண்கள் கைது

கேகாலை, செப்.22

கேகாலை பிரதேசத்திலுள்ள அபிவிருத்தி வங்கியொன்றில் போலி நாணயத்தாள்களை மாற்ற முயன்ற இரு பெண்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் இந்தப் பெண்கள் வங்கியில் ஆயிரம் ரூபா போலி நாணயத் தாளொன்றை மாற்ற முயன்றுள்ளார். பணத்தை வாங்கிய காசாளர் அது போலி நாணயத் தாள் என்று உணர்ந்து அதனை வங்கி முகாமையாளருக்கு தெரிவித்த பின் பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது.

இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, பெண்ணின் கணவரே இந்தப் போலி நோட்டைக் கொடுத்துள்ளார் என்று தெரிய வந்துள்ளது. அவரைக் கைது செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஹெட்டிமுல்ல, பரகம்மன பிரதேசத்தில் வசிக்கும் லீலாவதி (47), கிரிபலுவ, கிம்புல்கஹா தெனிய பிரதேசவாசியான மல்லிகா (44) எனும் இருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் கேகாலை நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டபின் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். (ச-5)



இலங்கை மற்றும் இந்தியக் கடற்படையினர் இணைந்து திருகோணமலையில் கடந்த திங்கட்கிழமை முதல் கூட்டு கடற்படை பயிற்சி நடவடிக்கை களில் ஈடுபட்டு வருகின்றனர். பயிற்சியில் ஈடுபட்டுள்ள இந்திய, இலங்கை போர்க் கப்பல்களைக் காணலாம். (ச)

# நிவாரணப் பங்கீட்டு நடவடிக்கையின்போது பிரதேச செயலர் நியாயமாக நடக்கவேண்டும்

## அரசியல் அலுவலகம் போல் செயற்படாதீர்கள்

மட்டக்களப்பு, செப்.22

அட்டாளைச் சேனைப் பிரதேசத்தில் கடந்த வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரண நிதி பங்கீட்டு நடவடிக்கைகளின்போது பிரதேச செயலாளர் நியாயமான முறையில் நடந்து கொள்ளல் வேண்டும்.

இவ்வாறு அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் எஸ்.எல். முனாஸ் தெரிவித்துள்ளார்.

அட்டாளைச் சேனைப் பிரதேசத்தில் கடந்த வெள்ளத்தின்போது பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு வழங்கவென பிரதேச செயலகத்துக்கு நிவாரண நிதி கிடைக்கப் பெற்றுள்ள நிலையில், பாதிக்கப்பட்ட பல பொதுமக்களின் பெயர்கள் நிவாரணப் பட்டியலில் உள்ளடக்கப்படாமையைக் கண்டித்து, பிரதேச சபை உறுப்பினர் முனாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

மக்களுக்குப் பாகுபாடின்றி சேவையாற்ற வேண்டிய பிரதேச செயலக மானது அரசியல் அலுவலகம் போல் செயற்படுதல் கூடாது. நிர்வாகிகள் தவறாகச் செயற்படும்போதுதான் மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்றனர்.

கிராம சேவகர்கள் மோசடியாகத் தயாரித்துள்ள இந்த நிவாரணப் பட்டியல்களை பிரதேச செயலாளரும் கண்மூடித்தனமாக ஏற்றுக்கொண்டுள்ளமையானது கண்டனத்துக்குரியதாகும். நிவாரணநிதிப் பங்கீடுகளில் அரசியலைப் புகுத்தி, பிரதேச செயலகத்தை ஓர் அரசியல் அலுவலகம் போல் பயன்படுத்துவதை மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

எனவே, இந்த விடயங்களில் அட்டாளைச்சேனைப் பிரதேச செயலாளர் உரிய கவனமெடுப்பதோடு, கடந்த வெள்ளத்தின் போது உண்மையாகவே பாதிக்கப்பட்ட மக்களுக்குநிவாரணநிதிகள்கிடைப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்-இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# இந்தியக் கடற்படைக் கப்பல்கள் திருமலை துறைமுகத்தில் 'முற்றுகை'

திருகோணமலை,செப்.22

இலங்கைக் கடற்படையுடன் போர்ப்பயிற்சியில் ஈடுபடுவதற்காக வந்துள்ள இந்திய கடற்படையின் போர்க் கப்பல்கள் திருகோணமலைத் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த திங்கட்கிழமை திருகோணமலைத் துறைமுகத்தை வந்தடைந்த இந்தப் போர்க்கப்பல்கள், நாளைமறுதினம் சனிக்கிழமை போர்ப் பயிற்சிகள் நிறைவடைந்த பின்னரே புறப்பட்டுச் செல்லும் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஒரே நேரத்தில் அதிகள விலான வெளிநாட்டுப் போர்க் கப்பல்கள் தரித்து நிற்பதை பொது மக்கள் பார்வையிட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# ஏறாவூரில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

மட்டக்களப்பு,செப்.22

ஏறாவூரில் பத்து டெங்கு நோயாளிகள் இனங்காணப்பட்டதையடுத்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரி எம்.எச்.எம் தாரிக்தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஏறாவூரில் டெங்கு நோயாளிகள் இனங்காணப்பட்டிருப்பதையடுத்து மட்டக்களப்பு சுகாதாரப் பகுதியிலிருந்து வருகை தந்த விஷேட சுகாதார பரிசோதனைக் குழுவினர் பூச்சிகள், குடம்பிகள் உற்பத்தியாகக் கூடிய இடங்களைப் பரிசோதித்துள்ளனர் என்று அவர் தெரிவித்துள்ளனர்.

ஏறாவூர் நகர சபையின் தலைவர் அலிஸாஹிர் மௌலானாவும் விஷேட சுகாதார நடவடிக்கைகளை முன்னெடுத்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மரக்குற்றிகளைக் கடத்தியவர் கைது

பொத்துவில்,செப்.22

பொத்துவில் பொட்டுக் கல்லு பிரதேசத்தில் தனது வாகனத்தில் சட்டவிரோதமாக மரக் குற்றிகளை ஏற்றிச் சென்ற நபரொருவர் அருகம்பை பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரிடம் இருந்து மரக்குற்றிகள், மரத் தறிப்புக்கான உபகரணங்கள் ஆகியவை பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.(ச)

# வர்த்தகக் கண்காட்சி

மூதூர், செப். 22

கிழக்கின் மாபெரும் வர்த்தகக் கண்காட்சி நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 25ஆம் திகதி வரை திருகோணமலை மக்கேசர் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கண்காட்சியில் 500 இற்கும் மேற்பட்ட காட்சிக் கூடங்கள், ஆகாய சாகசங்கள், கலை நிகழ்ச்சிகள், களியாட்ட நிகழ்வுகள், முப்படையினரின் இராணுவ தளபாடக் கண்காட்சிக் கூடங்கள் என்பனவும் இடம்பெறவுள்ளன.

# துப்பாக்கி முனையில் பயமுறுத்தி தோட்ட அதிகாரி வீட்டில் கொள்ளை

## ஆறுபேர் பொலிஸாரால் கைது

மத்துகம, செப். 22

மத்துகம, கீணகொல்ல தோட்ட அதிகாரியின் வீட்டுக்குள் புகுந்து சுமார் 2 லட்சத்து70 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள், பணம், துப்பாக்கி ஆகியவற்றைக் கொள்ளையடித்துச் சென்ற அறுவர் கொண்ட கும்பல் பன்னிரண்டாவது வனத்தில் ஒளிந்திருந்தபோது கடந்த ஞாயிற்றுக்கிழமை மாதம்பை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களைப் பங்கிட்டுக் கொண்டிருந்தபோதே பொலிஸார் அவர்களைச் சுற்றிவளைத்துள்ளனர்.

தோட்ட அதிகாரியின் வீட்டிலிருந்து கடத்திச் செல்லப்பட்ட துப்பாக்கியும், கொள்ளைக்குப் பாவிக்கப்பட்ட துப்பாக்கியும் இவர்களிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன.

கடந்த சனிக்கிழமை இரவு தோட்ட அதிகாரியின் வீட்டில் நுழைந்த இவர்கள் அதிகாரி, அவரது மனைவி, தந்தை ஆகிய மூவரையும் துப்பாக்கி முனையில் பயமுறுத்தி 2 லட்சத்து 70 ஆயிரம் ரூபா பெறுமதியான நகை, பணம் மற்றும் துப்பாக்கியையும் கொள்ளையிட்டுச் சென்றனர்.

இவர்கள் இந்த வனத்தில் ஒளிந்திருக்கின்றனர் எனக் கிடைத்த தகவலையடுத்து, மாதம்பை பொலிஸ் பொறுப்பதிகாரி ஏ.எம்.ட.இந்திரஜித் தலைமையில் சென்ற விசேட பொலிஸ்குழு இவர்களை மடக்கிப் பிடித்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட அறுவரில் இருவர் ஏற்கனவே இத்தகைய கொள்ளைச் சம்பவங்களில் கைதாகி, பிணையில் விடுதலை செய்யப்பட்டவர்கள்.

இவர்கள் அறுவரும் மத்துகம பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் மாதம்பைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

(ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்
## உங்களுக்கு எப்படி?



**மேடம்:**
நாடி வந்தவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் உதவி செய்வீர்கள். பிரியமான சிலருடன் தொலைபேசியில் பேசி மகிழ்வீர்கள். கொடுக்கல், வாங்கல்களில் நாணயமாக நடந்து கொள்வீர்கள். பதவி உயர்வை, பணவரவை எதிர்பார்ப்போர் நல்ல தகவல்களை கேட்கலாம். வழக்கு விவகாரங்களில் எச்சரிக்கை அவசியம்.



**இடபம்:**
எங்காவது வெளியில் செல்லும் போது, நடுவழியில் சிக்கிக் கொள்ளலாம். உங்களிடம் கடனுதவி கேட்ட சிலரிடம் சாக்குப் போக்குச் சொல்லிச் சமாளிப்பீர்கள். மற்றவர்களின் சொந்த விடயங்களை அறிந்து கொள்வதில் அக்கறை காட்டுவீர்கள். சிறிய பிரச்சினை ஒன்றுக்காக பெரிய அளவில் வாக்குவாதம் செய்யலாம். குடும்பச் செலவு கூடும்.



**மிதுனம்:**
நினைத்ததை எந்த வழியிலாவது சாதிப்பீர்கள். உறவினர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம். அடுக்கடுக்காக குவியும் வேலைகளால் பரபரப்பாகச் செயற்படலாம். நண்பர்கள் உங்களின் மனம் கோணாமல் நடந்து கொள்வர். எந்த விடயத்திலும் முந்திக் கொண்டு செயற்படுவதைத் தவிர்க்கவும்.



**கடகம்:**
குடும்ப விடயங்கள் அல்லது தொழில் ரீதியான விடயங்களை நினைத்து அதிக பயம் கொள்வீர்கள். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு உண்டாகும். வீட்டுச் செலவுகள் அதிகரிக்கும். சிறிய வேலை ஒன்றுக்கு பல முறை அலைய நேரிடலாம். மருந்துப் பொருள்கள் வாங்க கணிசமான பணத்தைச் செலவு செய்யலாம்.



**சிங்கம்:**
கனிவான பேச்சுக்களால் காரியம் சாதிக்கும் நாள். உறவினர்கள் சிலர் உங்களை நம்பி முக்கிய வேலைகளை ஒப்படைக்கலாம். வியாபாரிகளுக்கு கடன் மிகுதிகள் வசூலாகும். கூட்டுத் தொழிலில் பிரச்னை வராமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். எந்த விடயத்திலும் நிதானமாகச் செயற்பட்டு பெருமை சேர்ப்பீர்கள்.



**கன்னி:**
கடன் பிரச்சினை ஒன்றைத் தீர்க்க முற்படுவீர்கள். பெண்கள் கடும் வேலை நெருக்கடிகளுக்கு ஆள்படலாம். பெரிய மனிதர்கள் சிலரின் நட்புக் கிடைக்கலாம். எதிர்பார்த்த பணவரவுகளை மட்டுமின்றி, எதிர்பாராத பண வரவுகளையும் பெறலாம். சக ஊழியர்கள் உதவிகரமாக இருப்பர். பிள்ளைகளின் செயற்பாடுகளை நினைத்து பெருமை அடைவீர்கள்.



**துலாம்:**
இனம்புரியாத கவலைகள், வீண் பயம் மனதில் ஆள்கொள்ளும். தொழில் ரீதியான விடயத்தில் கண்டிப்பாக நடந்து கொள்வீர்கள். அரசியல்வாதிகள் அங்கும், இங்கும் அலைய நேரிடலாம். உங்களுக்கு உதவி செய்வதாக சொன்ன ஒருவர், கடைசி நேரத்தில் கைவிரிக்கலாம். உடல் உபாதைகளால் உற்சாகம் குறையலாம். சோர்வு ஆள்கொள்ளும்.



**விருச்சிகம்:**
கடமையில் கண்ணும் கருத்துமாக இருந்தாலும், ஏதாவது விமர்சனங்களுக்கு ஆள்படலாம். மற்றவர்களின் நிர்பந்தம் காரணமாக அரைகுறை மனதுடன் சில வேலைகளைச் செய்வீர்கள். ஒரு இடத்தில் நெடுநேரம் காத்திருந்து முக்கியமான வேலைகளை முடிக்கலாம். கணவன், மனைவி விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. தடுமாற்றம் நிகழும்.



**தனுசு:**
புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும் நாள். மனக் குழப்பங்களைத் தவிர்க்க நண்பர்களிடம் ஆலோசனை கேட்டுச் செயற்படுவது நல்லது. அலைச்சல் இருந்தாலும், சில வேலைகளை வெற்றிகரமாக முடிப்பீர்கள். நீங்கள் எதிர்கொண்ட அனுபவம் ஒன்றை மற்றவர்களிடம் சொல்லி மகிழ்வீர்கள். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும்.



**மகரம்:**
உடல் உபாதைகள் குறைந்து உற்சாகம் பெறுவீர்கள். பெற்றோர் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். மாணவர்கள், ஆசிரியர்களின் பாராட்டுக்களைப் பெறுவர். நண்பர்கள் வட்டம் விரிவடையும். நீங்கள் எதிர்பார்த்த போது, கிடைக்காத பணவரவு ஒன்று இன்று கிடைக்கலாம்.



**கும்பம்:**
நீண்டநாள்களாக மனதை வாட்டிக் கொண்டிருந்த பிரச்சினை முடிவுக்கு வரும். உங்களுக்காக சிறு பணத்தை செலவிட விரும்பாத நீங்கள், மற்றவர்களுக்காக கணிசமான பணத்தைச் செலவிடலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். போட்டி, எதிர்ப்புகளால் மன அமைதி பாதிக்கலாம். பிரபலமான கோயில்களுக்குச் சென்று வழிபடலாம்.



**மீனம்:**
பணவரவுகளை எதிர்பார்த்துச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள். பயணங்களால் அலைச்சல்களுக்கு ஆள்படலாம். நீங்கள் நினைத்தபடி சில வேலைகளை முடிக்க முடியாமல், மற்றவர்களால் தடை ஏற்படலாம். மனக் குறைகளால் உற்சாகம், தெம்பு குறையும். வேண்டாத விவகாரம் ஒன்றில் தலையிட்டு மன உளைச்சலுக்கு ஆள்படலாம்.

# அரசு மீது ப
# நம்பிக்
# இழக்கிறா

'அடக்குமுறைச் சட்டங்கள் எப்போதும் பயனளிக்காது' என்ற தல
பத்திரிகையில் எழுதிய கட்டுரையின் தமிழ்

வி.எஸ்.ரி

**ஒரு சிங்கள ஊடகவியலாளரின் மனதிலிருந்து**

அவசரகாலச் சட்டம் மீண்டும் ஒரு போதும் பிரகடனப்படுத்தப்பட மாட்டாது என ஜனாதிபதி நாடாளு மன்றத்தில் அறிவித்தபோது அந்த அறிவிப்பு உள்நாட்டில் மட்டுமல்லாது, இந்தியா, அமெரிக்கா உட்பட்ட பல வெளி நாடுகளின் பாராட்டையும் பெற்றது.

ஜனாதிபதியின் முடிவால் நாட்டின் அரசியலில் மட்டுமல்லாது நாட்டு மக்களது பொது வாழ்க்கையிலும் பெரும் மாற்றம் உருவாகும் என எதிர்பார்க்கப்பட்டது. இருந்தபோதும் இன்றுவரை நாட்டின் நிர்வாகச் செயற்பாடுகளில் எந்தவொரு மாற்றமும் ஏற்பட்டதாகத் தோன்றவில்லை.

விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, இரண்டாண்டு காலத்துக்கும் மேலாக அவசர காலச்சட்ட விதிகளின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்படாமல் தடுத்து வைக்கப்பட்டிருப்போர், அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டதை அடுத்து விடுதலை செய்யப்படுவர் என அரசின் அமைச்சரொருவர்கூட கருத்து வெளியிட்டிருந்தார். இருந்தபோதிலும் அவர்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வடபகுதியில் உயர் பாதுகாப்பு வலயம் அவசர காலச் சட்ட விதிகளின் கீழேயே பிரகடனப் படுத்தப்பட்டது. அவசர காலச் சட்டம் நீக்கப்பட்டதையடுத்து இந்த உயர்பாதுகாப்பு வலயம் நடைமுறைப்படுத்தப்படுவது சட்டத்துக்கு முரணானது. அத்தகைய நிலையில் உயர் பாதுகாப்பு வலய நடைமுறை உடனடியாக நீக்கப்பட வேண்டியதே.

அதே போன்று புனரமைப்பு ஆணையாளர் நாயகம் பதவி கூட இரத்துச் செய்யப்படவேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் நாடாளு மன்றத்தில் தெரிவித்துள்ளார்.

ஒரு நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வேளையில் சட்டத்தையும் அமைதியையும் நிலை நிறுத்துவதற்காக ஆயுதப் படைகளைச் சேவையில் ஈடுபடுத்துவதே வழமை. அதற்கான அதிகாரமே ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆயினும் பொதுமக்கள் பாதுகாப்புச் சட்ட விதிகளின் கீழ் நாட்டின் சகல மாவட்டங்களிலும் பாதுகாப்புப் படையினரின் சேவையைப் பெறும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது. அதன்படியே காவல் கடமைகள், சோதனை நடவடிக்கை போன்ற சகல நடவடிக்கைகளிலும் தற்போதும் பாதுகாப்புப் படையினர் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். இதிலிருந்து அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டுள்ள நிலையிலும், அச் சட்ட விதிகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வந்த சகல நடவடிக்கைகளும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை உணர முடிகிறது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் வட பகுதியில் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் நாட்டில் எந்தவொரு பயங்கரவாத செயற்பாடுகளும் இடம் பெறவில்லை என ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். அதனால் அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை இல்லாமல் போனது. அந்தச் சட்டம் ஒகஸ்ட் 31 ஆம் திகதியுடன் நீக்கப்படுவதாகவும் அவர் அறிவித்தார். இப்போது அவசரகாலச் சட்ட விதிகளின் படி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருப்பினும், அரசு சட்ட விரோதமாக அத்தகைய நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகிறது. வேறு சட்ட விதிகளை உருவாக்குவது அத்தகைய சட்டவிரோத நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லும் நோக்கிலேயே ஆகும்.

1953 ஆம் ஆண்டின் ஹர்த்தால், 1958 ஆம் ஆண்டின் இனக் கலவரம் மற்றும் வேறு சில வேலை நிறுத்தப் போராட்டங்கள் காரணமாக நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது அவசரகாலசச் சட்டம். முதற் தடவையாக நீண்டகாலத்துக்கு நடைமுறைப்படுத்தப்பட ஆரம்பித்தமை 1971 ஆம் ஆண்டிலேயே ஆகும்.

1971 ஆம் ஆண்டின் ஏப்ரல் கிளர்ச்சி இரண்டு மூன்று மாதங்களில் முடிவடைந்த போதிலும் அப்போதைய அரசு அவசரகாலச் சட்டத்தை நீக்கிக் கொள்ளவில்லை. அரச நிர்வாகத்தின் வேறு செயற்பாடுகளுக்காக அப்போதைய அரசு அந்தச் சட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டது. ஜே.வி.பி அமைப்பைச் சேர்ந்த வேறு குழுக்கள் பதுங்கியிருந்து தொடர்ந்தும் இயங்க முயல்வதாக அரசு அதற்குக் காரணம் கற்பித்துக் கொண்டது.

அப்படி மறைந்து வாழ்ந்து வந்த ஒரு சில ஜே.வி.பி தலைவர்கள் காலத்துக்குக் காலம் அரச படைகளால் கைது செய்யப்பட்டனர். அவர்களில் சோமபாலகுருசிங்க என்ற ஜே.வி.பி.தலைவர் கடைசியாக 1976 டிசெம்பர் மாதத்தில் பாதுகாப்புப் படையினரால் கைதுசெய்யப்பட்டார் அவர்களில் பலர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு, தண்டனை வழங்கப்பட்ட போதிலும், மற்றையோர் அவசர காலச் சட்டத்தின் கீழ் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டு வந்தனர்.

கூட்டு முன்னணி அரசிலிருந்து 31 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளியேறியதைத் தொடர்ந்து ஏற்பட்ட ஸ்திரமற்ற அரசியல் சூழல் காரணமாக 1977 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி நாடாளுமன்ற கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டது. மே மாதம் 18 ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு புதிதாகப் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டமையால் அவசர காலச் சட்டம் புதுப்பிக்கப்படாது செயலிழக்க நேர்ந்தது. இதன் காரணமாக அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் அதுவரை தடுத்து வைக்கப்பட்டிருந்தோர் விடுதலை செய்யப்பட்டனர். ஜே.வி.பி. அமைப்பைச் சேராத வேறு அமைப்புகளின் உறுப்பினர்கள் கூட அந்த வேளையில் விடுதலை செய்யப்பட்டனர்.

அது மட்டுமல்லாது ஜே.வி.பி. அமைப்பின் மீது விதிக்கப்பட்டிருந்த தடைகூட அந்த வேளையில் காலாவதியாகியது. அதன் பின்னர் ஜே.வி.பி. அமைப்பு நாடளாவிய ரீதியில் பொதுக் கூட்டங்களை நடத்தித் தமது அரசியல் செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பித்தது. அதே போன்று தடைசெய்யப்பட்டிருந்த பத்திரிகைகள் கூட மீண்டும் தமது செயற்பாடுகளை ஆரம்பித்தன. 1977 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21 ஆம் திகதி இடம் பெற்ற பொதுத் தேர்தலில் ஜே.வி.பி. சுயேச்சைக் குழுவாக நான்கு தொகுதிகளில் போட்டியிட்டது.

### அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டத்தில் எந்தவோர் அர்த்தமும் கிடையாது

அந்த வேளையில் அவசரகாலச் சட்ட நீக்கம் காரணமாகக் கிட்டிய சுதந்திர சூழல் சகல சமூகங்களாலும் நன்குணரப்பட்டது. ஆனால் தொடர்ந்து முப்பது வருடங்களாக நடைமுறையில் இருந்து வந்த அவுசரகாலச் சட்டம் தற்போது நீக்கப்பட்டுள்ள போதிலும், அது குறித்து சமூகங்கள் மத்தியில் எந்வொரு உணர்வலைகளையும் பெரிய அளவில் ஏற்படுத்தவில்லை.

அதேசமயம், அவசரகாலச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வந்த நடவடிக்கைகள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் எனத் தற்போது அரசு தெரிவித்து வருகின்றது. அவ்வாறானால் அவசரகாலச் சட்டத்தை அரசு நீக்கியதில் எந்தவொரு அர்த்தமும் கிடையாது என்றே கொள்ள முடிகிறது.

நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வேளையில் பயன்படுத்துவதற்காக மட்டும் உருவாக்கப்பட்டதே அவசரகாலச் சட்டமாகும். அதன் மூலம் பொது மக்களின் குறிப்பிட்ட சில உரிமைகளைக் கட்டுப்படுத்த அரசுக்கு அதிகாரம் கிட்டியது.

கடந்த முப்பது வருட காலமாக இந்த நாட்டில் குழப்பமான நிலைமையே நிலவி வந்துள்ளது. அது பயங்கரமான யுத்தத்துக்கு வழிவகுத்த போதும் தற்போது யுத்தம் முடிவுக்கு வந்துள்ளது. பயங்கரவாதம் நாட்டில் ஒழிக்கப்பட்டு விட்டதாக அரசு மார்தட்டிக் கொள்கிறது. அவ்வாறானால் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டமை போன்று ஏனைய அடக்குமுறைச் சட்டங்களும் நீக்கப்பட்டாக வேண்டும். பொது மக்களது சுதந்திரம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறு அமையாதது கவலைக்குரியது.

பயங்கரவாதத்தடைச் சட்டம் நாட்டின் சிக்கலான நிலை காரணமாக உருவாக்கப்பட்ட ஒன்றாகும். அது இந்த நாட்டின் சாதாரண சட்டங்களில் ஒன்றல்ல. அது ஒரு வருட காலத்துக்கு மட்டுமேயான தற்காலிகச் சட்டமொன்றாகவே ஜே.ஆரின் அரசால் முதன் முதலில் கொண்டு வரப்பட்டது. ஜே.ஆரின் அரசால் குறிப்பிட்ட அந்த ஒரு வருடகாலத்துள் பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்ட இயலாமற் போனதால் அந்தச் சட்டம் தொடர்ந்து நீடிக்கப்பட்டது. பயங்கரவாதம் நிலவும் வேளையில்

அதனை
உள்ளடக்
பயங்
சட்டத்தை
தச் சட்டத்
மக்களது
பட
அடங்காத
திச் செய
மனித உ
தரணி ஜே
அரசி
சட்ட நட
விடுக்கப்
பின் நா
தெரிவித்
திட்டுள்
குறிப்பிட்
அந்தச் ச
களும் வ
ஜே.சி.வ
வகையில்
சர்வதேச
அரசி
மிகவும்
தப் ப
வைத்தி
பாதிப்பு
வடக்கு
நாட்
சிங்களவ
தொன்
உள்ளடக்
கிக் கொ
னைக்கா
சிங்க
நாட்டு
வடக்கு,
மத்தியில்
'கிறீஸ்பூ
படுத்துச்
ஆயுதப்
மக்களது
பொது
யிட்டு எ
போதும்
வதந்தியே
யானால்
காரணம்
அவ்வித
புப் பை
யில் நில
பயங்
நிலையி
னத்தை
முகாம்க
ளப்பட
தையும்
பொலிஸ்
மாகும்.
களில் த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ு மக்கள் க்கை றார்கள்!

ாது' என்ற தலைப்பில் சி.றே. அமரதுங்க லங்காதீப
ரையின் தமிழ்ப் பொழிப்பு இது.

அத்தனை முறியடிப்பதற்கான சட்ட விதிகளை உள்ளடக்கியதே பயங்கரவாத தடைச்சட்டமாகும்.

பயங்கரவாதம் நிலவாத சந்தர்ப்பத்தில் இந்தச் சட்டத்தைப் பேணுவது அவசியமற்ற ஒன்றாகும். இந்தச் சட்டத்தையும் நீக்கிக் கொள்வதன் மூலமே பொது மக்களது உரிமைகளை உறுதிப்படுத்த இயலும்.

ப[illegible]கரவாதத் தடைச்சட்ட விதிகளுக்குள் அடங்காத விடயங்களுக்காக அதனைப் பயன்படுத்திச் செயற்பட அரசுக்கு அதிகாரம் கிடையாதென மனித உரிமைகள் தொடர்பான சிரேஷ்ட சட்டத்தரணி ஜே.சி.வலிஅமுண கருத்து வெளியிட்டுள்ளார்.

அரசின் இத்தகைய செயற்பாடுகளை எதிர்த்து சட்ட நடவடிக்கை மூலம் அரசுக்குத்தான் சவால் விடுக்கப்போவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார். இலங்கை அரசு கையெழுத்திட்டுள்ள சர்வதேச உடன்படிக்கைக்கு அமையவும் குறிப்பிட்ட ஒரு சட்டத்தை நீக்கிக்கொள்ளும் வேளை அந்தச் சட்ட விதிகளுக்கமைவான செயற்பாடுகளும் வலுவிழந்து போகுமெனவும் சட்டத்தரணி ஜே.சி.வலிஅமுண தெரிவித்துள்ளார். அந்த வகையில் அரசின் தற்போதைய நிலைப்பாடு சர்வதேச சட்டத்துக்கு முரணானதொன்றாகும்.

அரசின் தற்போதைய நடவடிக்கைகளில் மிகவும் பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்துவது ஆயுதப் ப[illegible]களைப் பரந்த அளவில் நிலை கொள்ள வைத்திருத்தலாகும். இதனால் பாரதூரமான பாதிப்புக்களை எதிர்கொள்பவர்கள் நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணப் பொதுமக்களே.

நாட்டின் ஆயுதப் படைகள் முற்றுமுழுதாக சிங்களவர்களைக் கொண்டிருப்பது தெளிவான தொன்றே நாட்டின் சகல இனத்தவர்களையும் உள்ளடக்கிய ஆயுதப்படையை எம்மால் உருவாக்கிக் கொள்ள இயலவில்லை. இதுவும் இனப்பிரச்சினைக்கான முக்கிய காரணங்களில் ஒன்றாகும்.

சிங்களவர்களை மட்டுமே கொண்ட இந்த நாட்டு ஆயுதப்படைகள் மீது இந்த நாட்டின் வடக்கு, கிழக்குப் பகுதி வாழ் பொதுமக்கள் மத்தியில் நம்பிக்கை நிலவவில்லை. அண்மைய 'கிறீஸ்பூதம்' குறித்த சம்பவங்கள் இதனைத் தெளிவுபடுத்துகின்றன. கிறீஸ் பூதம் குறித்த விடயத்தில் ஆயுதப்படையினர் மற்றும் அரசு மீதே நாட்டு மக்களது சந்தேகம் முன்வைக்கப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் இராணுவ முகாம்களை முற்றுகையிட்டு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்ட போதும், கிறீஸ்பூதம் பற்றிய செய்தி வெறும் வதந்தியே என அரசு தெரிவித்து வருகிறது. அப்படியானால் அத்தகைய வதந்திக்கான அடிப்படைக் காரணம் எதுவெனக் கண்டறியப்பட வேண்டும். அவ்விதம் ஆராய்ந்தால் அது அரசு மற்றும் பாதுகாப்புப் படையினர் தொடர்பாகப் பொது மக்கள் மத்தியில் நிலவும் நம்பிக்கையீனத்தையே தெளிவாக்கும்.

### படையினரை முகாம்களுக்குள் முடக்குவதே சிறந்தது

பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டிருக்கும் இன்றைய நிலையில், பாதுகாப்புப் படையினரின் பிரசன்னத்தை விரிவுபடுத்துவதை விடுத்து அவர்களை முகாம்களுக்குள் முடக்கிக் கொள்வதே மேற்கொள்ளப்பட வேண்டும். அதே வேளை நாட்டின் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பொறுப்பு பொலிஸார் வசம் ஒப்படைக்கப்படுதலே நியாயமாகும். அத்துடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் முஸ்லிம் இனங்களைச் சேர்ந்த பொலிஸாரைக் கடமையில் ஈடுபடுத்துதல் அவசியமாகும். இத்தகைய செயற்பாடுகள் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதுடன் நாட்டின் சகல இன மக்கள் மத்தியிலும் தாம் இலங்கையர்கள் என்ற உணர்வை உருவாக்க இயலும்.

அரச நிர்வாகத்தை மேற்கொள்ள அடக்குமுறை வழியைப் பயன்படுத்தலாம் என நம்புவது பல ஆட்சியாளரகள் விடும் தவறாகும். நாட்டின் நிர்வாகத்தைச் சிறந்த முறையில் முன்னெடுக்க வேண்டுமாயின், நாட்டின் நிர்வாகி நாட்டு மக்களது மனதில் தமது நிர்வாகச் செயற்பாடுகள் சரியானவை, நியாயமானவை தான் என்ற நம்பிக்கையை உருவாக்க வேண்டியது அவசியமாகும். நாட்டு மக்களது நம்பிக்கை தம்மீது இருக்கும் வரை மட்டுமே ஆட்சியாளர்களால் எதிரணியினர் மீது குறிப்பிட்ட அளவு அடக்கு முறையை, கட்டுப்பாடுகளை மேற்கொள்ள இயலும்.

சோவியத் நாட்டைக் கட்டியெழுப்பிய யோசெப் ஸ்டாலின் சமதர்ம அடிப்படையில் நாட்டு மக்களை நிர்வகித்ததன் காரணமாகவே அவரால் தமது எதிராளிகளைக் கொலை செய்யக் கூட முடிந்தது. ஆனால் 1990களில் சோவியத் பொது மக்கள் மத்தியில் அந்த சமதர்மக் கோட்பாட்டின் மீதான நம்பிக்கை அற்றுப் போனமையால் சோவியத் இராணுவத்தால் நாட்டு நிர்வாகத்தை முறைப்படி முன்னெடுக்க இயலாது போயிற்று. நிராயுதபாணி களான சோவியத் பொது மக்கள் வீதியில் இறங்கி பலம் மிக்க சோவியத் அரசையே பதவியிலிருந்து அகற்றினர்.

லிபிய ஜனாதிபதி முகம்மர் கடாபியின் நிர்வாகம் இதற்கானதொரு அண்மைக்கால உதாரணம். நாட்டை நிர்வகிக்கும் நடைமுறை குறித்துத் தாம் தயாரித்த 'பச்சைப் புத்தகத்தைக் கையில் வைத்துக் கொண்டே அதன் விதிகளின் அடிப்படையிலேயே அவர் நாட்டை நிர்வகித்து வந்தார். அத்தகைய கொள்கை பலவீனமுற்ற போது அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களைத் தமது இராணுவத்தின் மூலம் அடக்கி ஒடுக்க அவர் முயன்றார். அது வெற்றியளிக்கவில்லை. டுனீசியா, எகிப்து, சிரியா, யேமன் போன்ற நாடுகளின் அரச நிர்வாகங்களுக்கும் அத்தகைய சிரமமே ஏற்பட்டமை புலனாகிறது.

நவீன தொடர்பு சாதன வசதிகள் அபிவிருத்தி கண்டுள்ள இன்றைய உலகில் பொதுமக்கள் உலக அரசியல் நிலைப்பாடுகள் குறித்து தெளிவாகத் தெரிந்து கொண்டுள்ளனர். இந்த நிலையில் உலகின் எந்தவொரு நாட்டு ஆட்சியாளரும் அடக்கு முறைச் சட்டங்கள் மீது நம்பிக்கை வைத்துச் செயற்படுவது சாதகமாக அமையப் போவதில்லை. தம்மீதான மக்களின் நம்பிக்கை அற்றுப் போகும் சந்தர்ப்பத்தில் நாட்டின் ஆட்சியாளர்களால் அடக்கு முறையூடாக எவ்வித பலனையும் ஈட்ட இயலாது போய் விடும் என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான இன்றைய அரசு இதுவரையில் நாட்டு மக்களது ஆதரவை ஈட்டிய அரசாகவே நிர்வாகத்தை முன்னெடுத்து வந்துள்ளது. அதற்குக் காரணம் மூன்று தசாப்த காலமாக நாட்டில் நிலவிய போரை முடிவுக்குக் கொண்டு வந்து வெற்றி கொண்டமையாகும். ஆயினும் அத்தகைய மக்கள் ஆதரவு அண்மைக் காலச் சம்பவங்கள், நடவடிக்கைகள் காரணமாக பின்னடைவு கண்டு வருகிறது. அந்தச் சம்பவங்களின் மூலம் நாட்டு மக்கள் அரசின் மீதான தமது நம்பிக்கையை இழந்து வருகிறார்கள்.

அரசு தனது நிர்வாகத்தை வெற்றிகரமாக முன்னெடுக்க உள்ள வழிமுறை அடக்கு முறைச் சட்டங்கள் மீது நம்பிக்கை வைத்து அத்தகைய புதிய சட்டங்களை உருவாக்குவதல்ல போரின் மூலம் பெற்ற வெற்றி காரணமாகக் கிட்டிய சுதந்திர சூழலை முழு நாட்டு மக்களும் அனுபவிக்க வழிசெய்யும் வகையில் அடக்குமுறைச் சட்டங்களை இரத்துச் செய்து மக்களின் ஜனநாயக உரிமைகளை உறுதி செய்ய வேண்டியது அரசின் கடமையாகும். அத்துடன் நாட்டின் அபிவிருத்தி மீது அக்கறை செலுத்திச் செயற்பட வேண்டியதும் அவசியமாகும்.

எது எவ்வாறான போதிலும், தம்மீது கொண்டுள்ள ஆத்ம நம்பிக்கையை இழந்து போயிருக்கும் அரசும், அதன் நிர்வாகிகளும், நாட்டில் மக்களது சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தி எப்படியாவது ஆட்சி அதிகாரத்தைத் தக்க வைப்பதிலேயே குறியாக உள்ளனர். ஆரம்பத்தில் அது வெற்றியளிப்பதாகத் தோன்றக் கூடும். சிரமமுறும் பொது மக்கள் இலேசில் அது குறித்து வெளிப்படையாக எதிர்ப்புக் காட்ட முன்வருவதில்லை.

காலப்போக்கில் பொதுமக்களது அந்தச் சிரமம், குழப்பம், அவநம்பிக்கை யாவும் படிப்படியாகக் கோபம், ஆத்திரம் பொறுமையின்மை என்பவற்றுக்குப் பொது மக்களைத் தள்ளிச் செல்வதைத் தவிர்க்க இயலாது. அத்தகையதொரு நிலை உருவாகும் போது எந்தவொரு அடக்கு முறைச் சட்டத்தாலும் அத்தகைய் எதிர்ப்பு அலையைத் தடுத்திட இயலாது. அத்தகைய ஒரு நிலை உருவாகும் வேளை ஆட்சியாளர்கள் [illegible] வட்டியுடன் திருப்பிச் செலுத்த நேரிடும்.



## " நீ அப்படிப் பார்க்கலாமா?"



விவேகானந்தர் என்கின்ற ஆன்மிகவாதியை முழுமைப்படுத்தியவர் ஒரு விலைமகள்.

விவேகானந்தர் துறவு பெற்று இராமகிருஷ்ணரைச் சந்திக்க வரும் சமயங்களில் விலைமகளிர் வசிப்பிடம் ஒன்றைக் கடந்தே வரவேண்டி இருந்தது. அந்த வழியில் வர விருப்பமில்லை என்றால் வெகு தூரம் சுற்றி வரவேண்டும். ஒரு சந்நியாசி விலை மகளிர் தெருவழியாக வருவதா என்று கவலைப்பட்டு விவேகானந்தர் நெடுந்தொலைவு சுற்றி வந்தார்.

இப்போதும் அவருக்கு இன்னொரு சிக்கல் தோன்றியது. விலைமகளிரை விட்டு எவ்வளவு தொலைவு விலகி நிற்கிறாரோ; அவர்கள் தெருவழியே வர எவ்வளவு பயப்படுகிறாரோ அவ்வளவுக்கு அவர்களால் அவர் பாதிக்கப்படுகிறார் என்று தானே பொருள். அதாவது ஒரு விசயத்தை விட்டு எதிர்த்திசையில் விலகுவது கூட ஒருவகை ஈர்ப்புத்தான். அந்தப் பொருளின் வெகுவான பாதிப்புத்தான் விலகல். இந்தக் குற்ற உணர்வை வெல்ல விவேகானந்தர் பாடுபட்டார்.

இதேவேளை விலை மகளிர் பலர் அழுதபடி குருதேவை நாடி வந்த சமயம் பலர் அவர்களைப் பழித்தனர். ஆனால் அவர்களிடம் எந்தப் பாகுபாடும் காட்டாது குருதேவர் நடந்து கொண்ட விதத்தைக் கண்டு விவேகானந்தர் வியந்தார்.

ஒருமுறை அமெரிக்கா சென்று உலகப் புகழ்பெற்று விவேகானந்தர் திரும்பி வந்த போது ஜெய்பூர் சமஸ்தானத்தில் அவருக்குப் பெரிய வரவேற்பு அளித்தார்கள். அதைத் தொடர்ந்து வரிசையாகச் சின்னச் சின்ன சமஸ்தானங்களில் வரவேற்பளிக்கப்பட்டது.

ஒரு சமஸ்தானத்தில் அந்த வரவேற்பு வைபவத்தில் ஒரு பெண்மணி குலத் தொழிலால் விலைமகள் ஆனவள், அவரை வரவேற்றுப் பாடுவதாக ஏற்பாடு.

சந்நியாசியாகிய தன்னை ஒரு விலைமகள் வரவேற்றுப் பாடல் பாடுதல் என்பதை ஏனோ விவேகானந்தரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. விழாவைப் புறக்கணித்துவிட்டு மண்டபத்துக்கு வெளியே உலாவிக் கொண்டிருந்தார்.

அப்போது தேனாய் ஒலித்தது அந்தப் பெண்ணின் குரல். குரலைவிடப் பாடலில் பல நூறு அர்த்தங்கள். நரசிம்ம மேத்தாவின் பாடலை நெஞ்சுருகப் பாடினாள் அவள். அதில் ஒரு கேள்வியும் இருந்தது. அது விவேகானந்தரை மிகவும் பாதித்தது. வெகுவாகக் குடைந்தது.

பாரஸ் என்பது ஓர் அதிசயக் கல். அது எந்த உலோகத்தின் மீது பட்டாலும் அதனைத் தங்கமாக்கி விடும் வலிமை உடையது. அவள் பாடினாள். ''ஆடு வெட்டும் கசாப்பு கடை அரிவாளை உலகம் அருவருப்புடன் பார்க்கும். ஆனால் கோயிலில் இருக்கும் பித்தளையில் ஆன சுவாமி சிலையை மதிப்புடன் உலகம் வணங்கும். இது உலகின் இயல்பு உலோகத்தினால் அமைந்த சுவாமி சிலை என்பதனால் பித்தளை சிறந்தது.

கசாப்புக் கடை இரும்பு அரிவாள் தாழ்வானது என்பது உலகின் எண்ணம்.

ஆனால் பாரஸ் கல் இந்த பேதம் எதனையும் காட்டாது. அது கசாப்புக் கடை அரிவாளைத் தொட்டாலும் அது தங்கமாக மாறிவிடும்; பித்தளை விக்கிரகத்தைத் தொட்டாலும் தங்கமாகிவிடும். உலகோர் காட்டும் உயர்வு,தாழ்வுகள் உண்மையான பாரஸ்கல்லுக்கு இல்லை.

நான் ஆடு வெட்டும் அரிவாள்தான். அதனால் இந்த உலகம் என்னை அருவருப்பாகப் பார்க்கிறது. ஆனால் நீ அப்படி பார்க்கலாமா? என்னையும் தங்கமாக்க முடியுமே, நீ உண்மையான பாரஸ்கல்லாக இருந்தால்'' என்று பாடினாள்.

கடவுளைக் குறித்த பாட்டு என்றாலும் விவேகானந்தரை அந்தப் பாட்டும் அதில் இருந்த கேள்வியும் என்னவோ செய்தன. இந்தச் சராசரி உலகம் அவளை விலைமகள் என்று பழிக்கலாம். ஆனால் உண்மையான சந்நியாசி அவ்வாறு பழிக்கலாகாதே. அவர் பளிச்சென்று எழுந்து வரவேற்பு விழாவில் நுழைந்தார். பாடிய பெண்மணியைப் பெருமிதத்துடன் வணங்கி மகிழ்ந்தார்.

இராமகிருஷ்ணர் நரேந்திரனுக்குக் காவி கொடுத்தார். ஆனால் அந்த விலைமகள்தான் விவேகானந்தருக்கு சந்நியாசம் கொடுத்தாள்.

சுகி. சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டுசுட்டான் பிரதேச செயலராகக் கடந்த எட்டு வருடங்களாகச் சேவையாற்றிய திருமதி ம.சுபாசினி, அந்தப் பிரதேச கிராம சேவையாளர் நா.ரஞ்சித்குமார் ஆகியோருக்கான பிரியாவிடை நிகழ்வு அண்மையில் திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்தில் நடைபெற்றது. திருமுறிகண்டி மக்கள் இந்த நிகழ்வை நடத்தினர். (ம)



# பொது மக்களுக்கு முழுமையான சேவை வழங்க அங்கத்தவர்களின் பங்களிப்பு அவசியமானது

## பேக்கரி உரிமையாளர் சங்கச் செயலாளர் உரை

யாழ்ப்பாணம், செப்.22

அங்கத்தவர்களின் பங்களிப்பு சங்கங்களுக்கு முழுமையாகக் கிடைக்குமானால் பொது மக்களுக்கான சேவையை சங்கங்கள் முழுமையாக வழங்கும். இதற்கு அங்கத்தவர்கள் முழுமையான பங்களிப்பை வழங்க வேண்டும். இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் இ.பாஸ்கரன்

யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவு தின விழா நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கக் கட்டடத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரை நிகத்தும் போது தெரிவித்ததாவது:

பேக்கரிகளின் சேவை பொது மக்களின் சுகாதார நலன்களைக் கருத்தில் கொண்டு இடம்பெற வேண்டும்.

இலாபத்தை மட்டும் நோக்காகக் கொண்டு செயற்பட்டால் சங்கமும் இதனால் பாதிப்படையும்.

அத்துடன் சங்கத்தின் முன்னேற்றத்துக்கு பேக்கரி உரிமையாளர்கள் தம்மை அங்கத்தவர்களாக இணைத்துக் கொண்டால் மட்டும் போதாது. சங்கத்தின் ஊடாக மாவைப் பெறுவதற்கு முன் வரவேண்டும்.

ஏனெனில் சங்கத்தில் தற்போது 50 வீதமான அங்கத்தவர்கள் மட்டுமே மாவைப் பெற்று வருகின்றார்கள்.

இதனால் சங்கம் பின்னடைவைச் சந்தித்துக்கொண்டு இருக்கின்றது. இதனால் சங்கத்தில் உள்ள அங்கத்தவர்கள் இதற்கு ஒத்துழைப்பு வழங்கினால் சங்கத்துக்கு என்று நிரந்தரக் கட்டடத்தையும் அமைத்துக் கொள்ள முடியும். - என்றார்.

(ம-313)

# கலாசாரத்தை முறையாகக் கடைப்பிடித்தால் பிரதேசங்களில் சமாதானத்தை ஏற்படுத்த முடியும்

## ஒஸ்மானியாக் கல்லூரி ஆசிரியர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.22

மதங்கள் கூறும் கலாசார முறைமைகளை நாம் ஒழுங்காகக் கடைப்பிடிப்போமானால் சமாதானத்தை அனைத்துப் பிரதேசங்களிலும் ஏற்படுத்த முடியும்.

இதற்கு அடிப்படையாக மாணவர்களிடையே கலாசார முறைகளைப் பின்பற்றுவது தொடர்பாக ஆசிரியர்கள் கற்றுக் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியின் ஆசிரியர் மௌலவி பௌசர்.

சமாதானத்துக்கும் நல்லிணத்துக்குமான பணியகத்தின் ஏற்பாட்டில் கடந்த 19 ஆம் திகதி யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் இடம் பெற்ற சமாதான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நிகழ்வில் கலந்து கொண்டு ''சமாதானம்'' எனும் தலைப்பில் உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது தெரிவித்ததாவது:

மதம், மொழி, கலாசாரம் இவற்றில் வேறுபாடு ஏற்படும் போது நாம் சமாதானத்தை இழந்து கொண்டிருக்கின்றோம். நாட்டில் சமாதானத்தை நாமே உருவாக்க வேண்டுமானால் மதங்கள் கூறும் கலாச்சார முறைகளைப் பின்பற்ற வேண்டும்.

இதற்கு எடுத்துக்காட்டாக சகிப்புத்தன்மை, விட்டுக் கொடுப்பு போன்ற மனநிலைகளை உருவாக்க வேண்டும்.

மாணவர்களுக்குக் கற்றல்களை மட்டும் கற்றுக் கொடுப்பதால் எந்தப் பயனும் கிடையாது.

அவர்களுக்கு ஒழுக்கப் பண்புகளை கற்றுக் கொடுக்க வேண்டும். கடந்த காலங்களில் ஏற் பட்ட இழப்புக்களை மீளப் பெறு வது கடினம். என்றாலும் சமாதா னத்தை ஏற்படுத்த வேண்டியது கட்டாயமாகவுள்ளது- என்றார். (ம-313)

# யாழ்ப்பாணத்தின் சிறப்பை இங்குள்ள இந்து ஆலயங்கள் சித்திரிக்கின்றன

## பிரம்மச்சாரி ஜாக்கிரத் சைத்தன்ய

யாழ்ப்பாணம், செப்.21

யாழ்ப்பாணத்தின் சிறப்பை எடுத்துக் காட்டுவதாக இங்குள்ள இந்து ஆலயங்கள் திகழ்கின்றன. ஏனெனில் கடவுளின் வடிவங்களுக்கு ஏற்றமுறையில் சிறப்பு வாய்ந்த ஆலயங்கள் உள்ளன.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். சின்மயா மிஷனைச் சேர்ந்த பிரமச்சாரி ஜாக்கிரத் சைத்தன்ய.

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழாவில் ''முருகவழிபாடு'' எனும்தலைப்பில் உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் தெரிவித்ததாவது

கடவுள் என்பவர் ஒருவராக இருந்தாலும் அவரின் வடிவங்கள் பலவானதாக உள்ளன. இதில் ஒரு வடிவமான முருகன் அழகுக்கடவுளாகப் போற்றப் படுபவர். முருகனுக் கென கதிர்காமம்; நல்லூர், தொண்டமானாறு ஆகிய பிரதேசங்களில் பிரசித்தி பெற்ற ஆலயங்கள் உள்ளன.

இந்த ஆலயங்களில் உள்ள முருகன் ஒவ்வொரு பெயர் கொண்டு அழைக்கப்படுகிறார்.

கதிர்காமக் கந்தன் அபிஷேகக் கந்தனாகவும், நல்லூர் முருகன் அலங்காரக் கந்தனாகவும், செல்வச் சந்நிதி முருகன் அன்னதானக் கந்தனாகவும் அழைக்கப்படுகின்றனர்.

இவ்வாறான சிறப்புமிக்க பொருந்திய முருகப்பெருமானின் தத்துவங்கள் பற்றி சற்று ஆராய்வோமானால் , முருகப் பெருமானின் கையில் வேலுள்ளது.

இந்த வேலானது கூராகவும், அகன்றதாகவும், நீளமானதாகவும் உள்ளது. இது அறிவையும் அதன் ஆழத்தையும் குறிக்கின்றது.

இவ்வாறு சிறப்பு மிக்க தெய்வத்தின் பெருமையையும் இங்குள்ள பக்தர்கள் உணர்ந்து கொண்டுள்ளனர். அத்துடன் பிரதேசத்தின் பெருமையை உணர்த்துவதாகவும் ஆலயங்கள் அமைந்துள்ளன.- என்றார்.

(வ-313)

# புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் சில

**அனலைதீவு வடலூர் அ.த.க.பாடசாலை** - ச.கிருத்திகா - 155, பா. தனுசன் - 154.

**அனலைதீவு தெற்கு அ.த.க.பாடசாலை** - த.துவாரகன் -168, இ.நிதர்சனா-167, உயட்சன் - 157

**அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்.** - கு.தர்சிகா-164

**இமையாணன் அ.த.க. வித்தியாலயம்**- சி.சயந்தினி -178, ற.சதுர்சன்-159, இ.தஷாணா -156, த.மதுமிதா-154.

**உடுப்பிட்டி மகளிர் கல்லூரி**- க.அபிசா-172, தி.மதுசியா-170, சா.ஆர்த்திகா -164, த.நிதுஷா-163, கி.கம்சப்பிரியா-162, கி.தனைபரவி-159, ரா.மேதுஷா -151

**புனித றோக்ஸ் றோ.க.வித்தியாலயம்** - ஜெ. துஸ்யந்தினி-156

**அளவெட்டி வடக்கு அ.மி.த.க.பாடசாலை**- இ.பிரணவி -177, ஐ.நிரோ ஜன்-163, ச.பிரவீன்றாஜ்-161

**கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்**- ரா.விவேகா -189, யே.சாம் பவி-184, ர.அக்ஷியா-182, ம.துஷாந் -181, இ.கிருபதாஸ் -172, உ.கிஷாந்திகா - 168, த.டிஷாளினி-166, செ.தூரிகா -165, ம.கோபிகா- 165, ர.அபி ராம்-161, பா.பவித்ரா-160, ஜெ.பிரவீன் -159, செ.தர்கிகா-156, லோ.நிருக்சியா-155, ரா.லோகநாத்-154, சி.தனோஜன் - 152.

**மீசாலை வீரசிங்கம் ம.வி** க.கவினா-191,(மாவட்ட நிலை 2)கோ.அனுசன்-178, தே.தீபிகா -178, த.அசோகன் -171, நா.டிலக்ஸிகா - 170, தே.ஜதுர்ஷன்-168, மு.ஜொஜிஸ் -166, சி.கிரியோன் -162, க.லாவண்யா-160, அ.கோபிகன் -158, றொ.மேரிஷண்ஸியா -155, ஜெ.கஜவதனி -152, ஜெ.விபுசனா-152.

**கிளிநொச்சி மாசார் அ.த.க பாடசாலை**-கணேசலிங்கம் விநோஜன் -149

# கைதடி சித்த மருத்துவ வைத்தியசாலையில் பயிற்சிப்பட்டறை

அச்சுவேலி, செப்.22

சுதேச வைத்தியத்துறையின் சோதிட வைத்தியகளுக்கான ஒருநாள்பயிற்சிப்பட்டறை நாளை மறுதினம் சனிக்கிழமை கைதடி சித்த மருத்துவ போதனா வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

கொழும்பிலிருந்து வருகை தரும் துறைசார் நிபுணர்கள் பயிற்சிப்பட்டறையை நடத்தவுள்ளனர். அத்துடன் சோதிட வைத்தியர்களுக்கான நலன்புரி நடவடிக்கைகள் தொடர்பாக வும் கலந்துரையாடப்படவுள்ளது. பயிற்சிப்பட்டறையில் கலந்து கொள்ள விரும்பும் சோதிட வைத்தியர்கள் தமது வருகை தொடர்பான பதிவுகளை ஆடிய பாதம் வீதியில் உள்ள வடக்கு மாகாண சுதேச வைத்தி யத் திணைக்கள பணிமனையில் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று வடக்கு மாகாண சுதேச வைத்தியத் திணைக்களப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சியாமா துரைரத்தினம் அறிவித்துள்ளார்.

(ஒ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்ணின் மகிமை வேலைத்திட்டத்தில்

# யாழ். மாவட்டத்தில் உள்ள காணிகளை மக்களுக்கு உரித்தாக வழங்க நடவடிக்கை

■ திலீப்

*(20 ஆம் திகதிய தொடர்ச்சி...)*

உரித்து பெற்ற பின்னர் குறித்த உரிமையாளர் இறந்து போனால் நாட்டின் சொத்து சம்பந்தமாக சாதாரணமாக உள்ள சட்டமுறையின் படி சொத்து பிரிக்கப்படும். அதாவது அவரது காணிக்குரிய சகல உரிமையாளர்களும் அழைக்கப்பட்டு உரிமை நிர்ணய ஆணையாளரால் பகிரங்கமான விசாரணைகள் மூலம் உரிமைகள் தீர்மானிக்கப்படும். உரிமையாளர் இறக்கும்போது மரண சாசனம் எழுதியிருந்தால் அதற்கமைவாக பிரிக்கப்படும்.

அரச உறுதிப் பத்திரமொன்று அல்லது காணி சீர்திருத்த ஆணைக்குழு அல்லது ஸ்ரீலங்கா மகாவலி சபை ஆகிய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளுக்கும் உரித்து சான்றிதழ் வழங்கப்படும். அரச உறுதியொன்று வழங்கப்பட்டுள்ள காணிக்கு குறித்த நிபந்தனைகளுக்கு அமைவாக உரித்துச் சான்றிதழ் வழங்கப்படும். வேறு நிறுவனங்களுக்குரிய காணிகளுக்கும் அந்தந்த நிறுவனங்களில் காணி பராதீனப்படுத்தும் நிபந்தனைகளுக்கு அமைவாக காணி உரித்துச் சான்றிதழ் வழங்கப்படும்.

இதுவரை காலமும் உறுதிகள் வழங்கப்பட்டு வந்தன. அவற்றில் உள்ள குறைபாடுகளை களையவே இந்த உரித்து முறையானது அறிமுகமாகின்றது. அதாவது ஒரே காணிக்காக பல உறுதிகளை பதிவு செய்வதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

ஆரம்பத்தில் பதிவு செய்யப்பட்ட காணி உறுதி போலியானதொன்றாக இருப்பினும் கூட முதற் பதிவு என்ற அடிப்படையில் அதற்கு செல்லுபடியாகும் தன்மை காணப்படுகின்றமை. மற்றும் காணி உறுதிகளில் காணப்படுகின்ற சந்தேக நிலைமை காரணமாக வங்கிகள் போன்ற நிதி நிறுவனங்களில் காணி உறுதியொன்றை சமர்ப்பித்து கொடுக்கல் வாங்கல்களைச் செய்து கொள்வதில் பல சிரமங்கள் ஏற்படும். அத்துடன் புதிய உறுதியொன்றை பெறுவதற்கோ பழைய உறுதியின் பிரதியொன்றை பெறுவதற்கோ நீண்ட நாள்கள் தவமிருக்க வேண்டும். அத்துடன் உறுதி எழுதுவதற்காக அதிகளவான பணத்தைச் செலவு செய்ய வேண்டியிருக்கும். மற்றும் சாதாரணமான ஒருவரால் காணி உறுதியை வாசித்து விளங்கிக் கொள்ள முடியாதிருக்கும்.

இத்தகைய மக்கள் சார்ந்த பெருமளவான குறைபாடுகள் இருப்பதனால்தான் காணி உரித்து முறைமை உருவாக்கப்பட்டுள்ளது.

காணி உரிமையை கொண்ட காணியொன்றை விற்பனை செய்யும் போது அல்லது கொள்வனவு செய்யும் போது சட்ட ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளத் தேவையில்லை. இதனால் நொத்தாரிசுக்காக செலவு செய்கின்ற பெருமளவு பணம் சேமிக்கப்படும். மேலும் போலி உறுதிகள் தயாரித்து ஏமாற்ற முடியாதென்பதுடன் இன்னொருவர் காணி உரிமை கோர முடியாது. மேலும் காணி தொடர்பான சண்டைகள் எதிர்காலத்தில் ஏற்படமாட்டா.

அத்துடன் 2007 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மண்ணின் மகிமை வேலைத் திட்டமானது 2022 ஆம் ஆண்டு நாடு முழுவதும் செய்து முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு மக்களின் ஒத்துழைப்புக்கள் கிடைத்தாலே இதனை வேகமாக நடைமுறைப்படுத்த முடியும்.

மேலும் நாட்டில் தற்போது அமுலில் உள்ள சட்டதிட்டங்களுக்கு அமைவாக தனியார் எவரினதும் காணிகளை அரசாங்கம் எந்தக் காலத்திலும் சுவீகரிக்க முடியாது (சுவீகரிப்பு சட்டத்திற்கு விதிவிலக்காக). எனவே தற்போது மேற்கொள்ளப்படும் மண்ணின் மகிமை வேலைத்திட்டத்தின் ஊடாக அரசாங்கம், புலம் பெயர் தமிழர்களின் காணிகளை அபகரிக்க முடியாது. இருப்பினும் புலம்பெயர் தமிழர்களின் காணிகளை அரசு இனங்கண்டு கொள்வதற்கு வாய்ப்புக்கள் உண்டு. அதை கையகப்படுத்தவிரும்பின் சட்ட ஏற்பாடுகளில் மாற்றம் கொண்டு வந்தே எடுத்துக் கொள்ள முடியும்.

தற்போது உரிமை கோரப்படாத காணிகள் அனைத்தும் மண்ணின் மகிமை வேலைத்திட்டத்தில் உள்வாங்கப்படமாட்டா. பின்னர் அந்தக் காணிகளை உரிமை கோரி விண்ணப்பித்தால் அதனை அவர்களே பணம் செலுத்தி எல்லைப்படுத்த நேரிடும்.

எனவே மண்ணின் மகிமை வேலைத் திட்டத்தின் மூலம் தமிழ் மக்களுக்கு நன்மைகள் அதிகம் இருக்கின்ற போதிலும் சட்ட ஏற்பாடுகள் மாற்றமடைந்தால் சிக்கலே. ✱

---

## ஆயிரம் பாடசாலைகளுக்கு பட்டதாரி ஆசிரியர்களைத் தெரிய போட்டிப் பரீட்சை

### சனிக்கிழமை 99 பரீட்சை நிலையங்களில்

அச்சுவேலி, செப்.22

ஆயிரம் பாடசாலைகளுக்கு பட்டதாரி ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப்பரீட்சை 24 ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.

15 ஆயிரம் பட்டதாரிகள் தோற்றவுள்ள இந்தப் பரீட்சை 99 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட ஆயிரம் பாடசாலைகளுக்கு கணிதம், ஆங்கிலம், தொடர்பாடல்தகவல் தொழில்நுட்பம் ஆகிய மூன்று பாடங்களையும் கற்பிப்பதற்கு பட்டதாரிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

சிங்கள மொழி மூலம் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட பட்டதாரிகளும், தமிழ் மொழி மூலம் 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட பட்டதாரிகளும் ஆங்கில மொழி மூலம் 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட பட்டதாரிகளுமாக 15 ஆயிரம் பேர் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

கற்பிப்பதற்கு தெரிவு செய்த பாடத்துறை நுண்ணறிவு, ஆங்கிலம், பொது அறிவு ஆகிய நான்கு பாடங்களுக்கு பரீட்சார்த்திகள் தோற்ற வேண்டும். காலை முதல் மாலை வரை பரீட்சை நடைபெறவுள்ளது. போட்டிப் பரீட்சையில் பெற்றுக் கொண்ட உயர்புள்ளி அடிப்படையில் நேர்முகப் பரீட்சை நடத்தி கல்வி அமைச்சு நியமனங்களை வழங்கவுள்ளது. பட்டதாரிகளின் ம் வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் உட்பட நாடளாவிய ரீதியில் சகல மாவட்டங்களில் இருந்தும் 15 ஆயிரம் பேர் கொழும்பில் கூடுவதால் எதிர்பாரா த நெருக்கடிகளை பட்டதாரிகள் சந்திக்க வேண்டி உள்ளது. வெளி மாவட்டங்களில் இருந்து பரீட்சைக்குத் தோற்றுவதற்கு கொழும்புக்குச் செல்ல வேண்டி இருப்பதால் கணிசமான அளவு செலவு செய்ய வேண்டிய நிலை பரீட்சார்த் திகளுக்கு ஏற்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-11)

---


## பாராட்டி வாழ்த்துகிறோம்



நாவாந்துறையைச் சேர்ந்த
திரு.திருமதி இன்பநாயகம் ஜெனிற்றா
அவர்களின்
சிரேஸ்ட புதல்வி றொபின்சனா
(புனித ஜோன் பொஸ்கோ
வித்தியாலயம்)
அவர்கள் 2011 ஆம் ஆண்டு தரம் 5
புலமைப்பரிசில் பரீட்சையில்
164 புள்ளிகளைப்பெற்று சித்தியடைந்த றொபின்சனா அவர்களை மனதாரப் பாரட்டுவதோடு மேலும் பல சிறப்புக்களைப் பெற்றும் கல்வியில் பல பட்டங்கள் பெற்றிட வாழ்த்துகின்றோம். அத்துடன் இவருக்கு கல்வி கற்பித்த வகுப்பாசிரியர் அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

வாழ்த்துவோர்,
அப்பா, அம்மா, அப்பம்மா, அப்பப்பா, அம்மம்மா, ஐயா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், அத்தைமார், சித்தப்பாமார், சித்தி மார் அக்காமார், அண்ணன்மார், தங்கைமார், தம்பிமார், அத்தான்மார், மச்சான்மார், மருமகன், மருமகள்.

கோவில் லேன் நாவாந்துறை.

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
### சமயாசமய தொழிலாளர்களுக்கான விண்ணப்பம்

வலிகாமம் மேற்கு பிரதேசசபை எல்லைக்குள் வசிப்பவர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்தப் பதவிகளுக்கு விண்ணப்பிப்போர் 30.09.2011 அன்று 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**தகைமைகள்**

நூலகத் தொழிலாளி

01. க.பொ.த (உ.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
02. சேவையில் அனுபவமுள்ளவர்களுக்கும் கணினி அறிவு உள்ளவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

சுகாதாரத் தொழிலாளி

01. ஆகக் குறைந்த கல்வித் தகைமை 8 ஆம் வகுப்பு சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

உழவு இயந்திர சாரதி

01. ஆகக் குறைந்த கல்வித் தகைமை 8 ஆம் வகுப்பு சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
02. சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல் வேண்டும்.
03. சேவையில் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேற்படி தகைமை உள்ளோர் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி: 28.09.2011**

மேலதிக விவரங்களை வலிகாமம் மேற்குப் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

தவிசாளர்,
வலிமேற்கு பிரதேசசபை
சுழிபுரம்.

(சி/4076)

## விசேட சேவை

புலமைப் பரிசில்
பரீட்சையில்
சித்திபெற்ற மாணவச்செல்வங்களுக்கு அவர்களின் புகைப்படம் பதித்த விருதுப் பொருள்களையோ, தங்க மெடலையோ பரிசாக வழங்கி ஊக்குவியுங்கள்.
**எஸ்.எஸ்.யசோதரன் ஆட்ஸ்**
இல.381, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

## வீடு வாடகைக்கு

யாழ்.பிரதான வீதிக்கு அருகிலுள்ள 10A, கதீற்றல் வீதியில் மேல்மாடி வீடு, பகுதியாகவோ, அல்லது முழுவதுமாகவோ தொழில் நிறுவனங்களுக்கு அல்லது குடியிருப்பாளர்களுக்கு வாடகைக்கு விடப்படும்.
**தொடர்பு: 0718562089**

## காணி விற்பனைக்கு

விக்னேஸ்வரா வீதி, கரணவாய் கிழக்கு, கரவெட்டியில் உள்ள 6½ பரப்பு கொண்ட வீட்டுடன் கூடிய காணி திரு.செல்லத்துரை சுந்தரலிங்கத்துக்குச் சொந்தமாயிருந்து தற்பொழுது கனகசிங்கம் வகிந்தனுக்கும் ஜீவகனுக்கும் அறுதியாகக் கொள்வனவு செய்யப்பட்ட ஆதனம் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.
தொடர்புகளுக்கு: 0779559104

## தரம் 6 அனுமதி - 2012

2011 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களை எமது கல்லூரியில் தரம் 6 அனுமதிக்கான விண்ணப்பத்தை அலுவலக நேரத்தில் பெற்று 2011.09.30 ஆந் திகதிக்கு முன் விண்ணப்பிக்குமாறு தயவாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அதிபர்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,யாழ்ப்பாணம்

## பாராட்டி வாழ்த்துகிறோம்



திரு. திருமதி சிவபாலன் தம்பதியரின் புதல்வி
சங்கவி
(சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை)
2011 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 163 புள்ளிகள் பெற்றுச் சித்தி பெற்றதையிட்டு வாழ்த்துவதுடன் எதிர்வரும் காலங்களில் பல கலைகளிலும் சிறப்புற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்

வாழ்த்துவோர்
வேணி அக்கா குடும்பம்


## கண்ணீர் அஞ்சலி

**கார்த்திகேய ஐயர்**
**வைத்தியநாத சர்மா**

எமது கல்லூரியின் முன்னாள் அதிபர்அவர்கள் இறைபதம் எய்தியுள்ளார். அவரது ஆத்மாசாந்தியடைய எமது பிரார்த்தனைகளை சமர்ப்பிப்பதுடன் உறவினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பழைய மாணவர் சங்கம்,
யா/இணுவில் மத்திய கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயபாடக் குறுவினாப் போட்டிகள்

தென்மராட்சி, செப்.22

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்களுக்கான விவசாயபாடக் குறு வினாப் போட்டிகள் எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் 9.30 மணி வரை சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-207)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியை அழைப்பும்



அமரர்

**தாமோதரம் நவரட்ணராஜா**

(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்)

கடந்த 24.08.2011 புதன்கிழமை சிவபத மடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் அந்தி யேட்டி சபிண்டீகரணக் கிரியைகள் நாளை (23.09.2011) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த் தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சென்.மேரீஸ் வீதி, தும்பளை,
பருத்தித்துறை.

மனைவி, பிள்ளைகள்.
குடும்பத்தினர்.



## கண்ணீர் அஞ்சலி



முன்னாள் சுகந்தினி
விளையாட்டுக் கழக
உரிமையாளரும்,
தற்போதைய
"Jaffna Rest
and Bar"
உரிமையாளருமாகிய

அமரர்

**சின்னத்துரை தனபாலசிங்கம்**

(கிளி அண்ணா)

நாங்கள் அழுகின்றபோது - எம்முள்
எழுகின்ற உணர்வுகளை - இனி
உங்களுக்கு சொல்ல முடியவில்லை.
எத்தனை ரணங்கள் - அந்த
ஒவ்வொரு கணங்களுக்கும்
கரைகிறோம் உங்களுடன்.
உங்கள் நினைவுகள் எம்முடன்
நீங்கள் இன்றோ இறைவனிடம்!

உங்கள் பிரிவால் துயருறும்:
**தம்பி சற்குரு (பிரான்ஸ்).**


# இளைஞர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி மோசடி

கொழும்பு, செப். 22

அமெரிக்கா மற்றும் ஜப்பான் உட்பட ஐரோப்பிய நாடுகளில் வேலை வாய்ப்புப் பெற்றுத்தர அந்நாடுக ளுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி இளைஞர்களிடம் பணம் வசூலித்த இரு நபர்களை கொழும்பு மோசடித் தடுப்புப் பொலிஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி குறிப்பிட்ட இரு நபர் களும் இதற்காக ஒவ்வொரு இளைஞனி டமிருந்தும் 3 முதல் 5 லட்சம் ரூபாவை அறவிட்டிருந்ததாக பொலிஸாரின் விசார ணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

இந்த வகையில் பல பிரதேசங் களைச் சேர்ந்த இளைஞர்களிடமிருந்து மொத்த மாக நாலரைக் கோடி ரூபாவைப் பெற்றுக் கொண்டு அவர் களைஏமாற்றி யுள்ளதாகவும் பொலிஸார் தெரி வித் துள்ளனர்.

இவ்விரு நபர் களாலும் மேற் கண்ட விதத்தில் ஏமாற் றப்பட்ட ஆறு இளைஞர் களும் கொழும்பு மோ சடித் தடுப் புப் பொலிஸ் பிரி வில் மேற்கொண்ட முறைப் பாட்டை யடுத்தே குறிப் பிட்ட இரு நபர் களும் கைது செய் யப்பட்டுள்ளனர். (கு)


## கிளிநொச்சியிலும் அண்ணா தயாரிப்புகள்

கிளிநொச்சியில், அண்ணா கோப்பி, அண்ணா பற்பொடி மற்றும் அண்ணா தயாரிப்புகள் யாவையும் மொத்த, சில்லறை விலைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

**அண்ணா கோப்பிக் கடை,
இந்துபுரம், A9 வீதி,
கிளிநொச்சி.**



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவன்
செல்வன் **அன்ரன் தவராசா நிருஜன்**
2011ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 156 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்காக அவரைப் பாராட்டுவதுடன் அவரின் கல்விக்கு ஊக்கமளித்த அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் வாழ்த்தி அவர் மேலும் கல்வியில் சிறப்புற வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

அம்மா, அப்பா, அண்ணாமார், தங்கை, தம்பி, அம்மம்மாமார், மாமாமார், அத்தைமார், அண்ணாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், மச்சான்மார், மச்சாள்மார்.
சரசாலை தெற்கு, சாவகச்சேரி.



## தூய வேளாங்கண்ணி ஆரோக்கிய அன்னை ஆலய திருவிழா

யாழ். போதனா வைத்தியசாலை



22.09.2011 - மாலை 4.30 மணிக்கு வழிபாடுகள் கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகும்.
24.09.2011 - மாலை 4.30 மணிக்கு நற்கருணை வழிபாடும் குணமாக்கல் வழிபாடும் இடம்பெறும்.
25.09.2011 - காலை 7.15 மணிக்கு திருநாள் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

அன்னையின் ஆசீர் பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆன்மகுரு.



## ஐந்தாண்டு நினைவஞ்சலி

**மார்க்கண்டு மகேந்திரன்**



(கிராம சேவையாளர்)

ஐந்தாண்டுகள் ஆனதப்பா
மனமோ தவிக்குதப்பா
ஏணிப்படி போல் சென்ற எம் வாழ்வு
ஒளி இழந்ததேனோ?
விதி செய்த விளையாட்டால்
தந்தை முகம் காணாமல் தவிக்கும்
மழலைகள்
நிதம் நாமும் அழுகின்றோம்
உமை நினைத்து
எத்தனை ஜென்மம் எடுத்தாலும் – எம்
குலவிளக்கு நீங்கள்தான்
உங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

இல. 77, பாரதி வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி,
பிள்ளைகள்.


# மாணவர்கள் விபத்தில் காயம்

வவுனியா, செப்.22

வவுனியா பெரியகோமரசன் குளம் மகாவித் தியா லயத்தில் இரு மாணவர்கள் பாடசாலை முன் பாக கடந்த சனிக் கிழமை விபத் தில் சிக்கி படு காயம் அடைந் துள்ளனர்.

இந்த மாண வர்கள் தண்ணீர் பம்பியில் நீர் குடித்து விட்டு வீதிக்கு வந்த போது வேகமாக வந்த மோட்டார் சைக்கில் இவர் கள் மீது மோதி யுள்ளது.

இந்த விபத் தில் ஆண்டு 10 மாணவியும், ஆண்டு 9 மாண வனும் படுகாயம் அடைந்துள்ளனர்.

இந்த மாண வர்கள் சிகிச்சைக் காக அருகில் உள்ள வைத்திய சாலையில் அனு மதிக்கப்பட்டுள்ள னர். (ச-42)


## நன்றிகள்



எனது 33 வருட ஆசிரிய சேவையைப் பாராட்டி வாழ்த்துரைகள் வழங்கிய கல்விப்புல அதிகாரிகள், மற்றும் பெரியோர்க்கு என் மனமார்ந்த நன்றிகள்.

பாராட்டு விழா ஒன்றை நடாத்திப் பதக்கம், கேடயம் மற்றும் சிறப்பு நூல்களையும் வெளியிட்டுக் கௌரவித்த யாழ்.மத்திய கல்லூரி கல்விச் சமூகத்தினருக்கும், பத்திரிகையில் சிறப்புமலர் ஒன்றைப் பிரசுரித்துப்பாராட்டிய The Express Institute கல்விச்சமூகத்தினர்க்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

The Express Institute
Irupalai Junction Kopay.

யாழ்.மத்திய கல்லூரி சமூகத்தினரால் வழங்கப்பட்ட கௌரவிப்பு நிகழ்வின் பதிவுகள் சில...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூலிகை உணவுப் பயன்பாட்டை உணரச் செய்த அச்சுவேலி சுதேச மருந்து உற்பத்தி நிலையம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

அச்சுவேலி சுதேச மருந்து உற்பத்தி நிலையத்தின் செயற்பாடுகள், மூலிகை தொடர்பாகத் தமிழ் மக்கள் மத்தியில் உறங்கு நிலையில் இருந்த உணர்வுகளை மீண்டும் உயிர்ப்படையச் செய்துள்ளன. உள்ளூர் சூழலில் காணப்படும் மூலிகைகளை உரிய முறையில் போணிப் பாதுகாப்பதிலும் அவற்றைத் தமது நாளாந்த உணவுகளில் சேர்த்துக் கொள்வதற்கும் வகை செய்திருப்பதோடு மூலிகை உணவு வகைகளின் பயன்பாடு மற்றும் தேவையைக் கண்டுணரச் செய்துள்ளன.

அச்சுவேலி சுதேச மருந்து உற்பத்தி நிலையத்துடன் இணைந்த நிலையில் சுதேச வைத்தியசாலையும் செயற்படுகின்றது. வைத்தியசாலையில் நாளாந்தம் 30 இற்கு மேற்பட்ட நோயாளர்கள் தமது நோய்களுக்கு மருந்துகளைப் பெற்றுச் செல்கின்றனர். ஐரோப்பிய மருத்துவ முறையில் காணப்படும் பக்கவிளைவுகள் மற்றும் இயல்புகளை உணர்ந்து கொண்ட இளைஞர்கள், யுவதிகளும் சுதேச மருந்துகளில் நம்பிக்கை கொண்டு பயன்படுத்த ஆரம்பித்திருப்பதை அவதானிக்க முடிகிறது. தலைமுடி உதிர்தல், முடி நரைத்தல் மற்றும் தோல் நோய் சம்பந்தப்பட்ட இளைஞர், யுவதிகள் கணிசமான எண்ணிக்கையில் சுதேச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர்.

70x40 அடி விஸ்தீரணம் கொண்ட மருந்து உற்பத்தி நிலையத்தில் 40 வகையான மருந்து வகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதில் குளிகைகள், சூறணகள், தைலங்கள், எண்ணெய் வகைகள் உள்ளடங்கும். மருந்து வகைகளைத் தயாரிப்பதற்கு சிறிய வகை இயந்திரங்களும் பயன்படுத்தப்படுகின்றன.

மருந்து உற்பத்தி நிலையத்தில் மூலிகைகளைப் பதப்படுத்துதல், வகைப்படுத்தல், சரக்குவகைகளை அரைத்தல், தைலங்களை வடித்தல் என்பன தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதால் அதில்




இருந்து வெளிவரும் பல்வேறு விதமான சுகந்த வாசனையே சுவாசிப்போரின் உடலில் உளப் பிணியைப் போக்கிவிடும்.

சுதேச வைத்தியசாலையில் மருந்து தயாரிக்கும் கூடம், சரக்கு மற்றும் மருந்து தயாரிக்கப்படும் மூலிகைகளைக் களஞ்சியப்படுத்தும் களஞ்சியம், மருந்து மற்றும் சாதனங்களை காய்ச்சிப் பதப்படுத்தும் உறைகள் கொண்ட கூடம், மருந்துகள் குளிகைகளை குறித்த அளவுப் பிரமாணத்தில் உள்ளடக்கித் தயாரிக்கும் மண்டபம் மருந்துகளை களஞ்சியப்படுத்தும் கூடம், மருந்தகம், நோயாளருக்குச் சிகிச்சை அளிக்கும்கூடம் என்பன நிறுவப்பட்டுள்ளன.

நிலையத்தின் பொறுப்பதிகாரியாக மருத்துவர் திருமதி ஆ. கமலாதேவியும் துணைப் பொறுப்பதிகாரியாக மருத்துவர் கே.செல்வநாதனும், கடமை புரிவதுடன் வைத்தியசாலைக்குச் சிகிச்சை பெறவரும் நோயாளர்களுக்கும் இரண்டு வைத்தியர்களுமே சோதனைகளை மேற்கொண்டு மருந்துகளையும் வழங்கிவருகின்றனர். நிரந்தரப்பணியாளர்கள் நால்வர் உட்பட 6 பேர் பணியாளர்களாகக் கடமை புரிகின்றனர். மருந்து உற்பத்தி நிலையத்தின் தற்போதைய செயற்பாட்டுக்கு பணியாளர் எண்ணிக்கையும் போதியதாக இல்லை என்பதை அவதானிக்க முடிந்தது. முழு நிலையில் செயற்படுவதற்கு 20இற்கு மேற்பட்ட பணியாளர் மட்டில் தேவை எனக் கூறப்படுகின்றது.

ஆறு பணியாளர்களின் அர்ப்பணிப்போடு கூடிய பணி முன்னெடுப்பினாலும், சேவை மனோநிலையினாலும் சுதேச மருந்து உற்பத்தி நிலையத்தின் தொழிற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது.

வைத்தியசாலையின் சுற்றாடலில் கணிசமான அளவு மூலிகைகள் வளர்க்கப்படுவதையும் அவற்றின் கணிசமான அளவு சமகாலப் பகுதியில் பயன்பாட்டிற்கு உள்ளடக்கப்படுவதையும் அவதானிக்க முடிகிறது.

வடக்கு மாகாணத்தில் யாழ். மாவட்டத்தில் செயற்படும் சுதேச வைத்தியத் திணைக்களத்தின் பரிபாலனத்துக்கு உட்பட்ட வைத்திய நிலையங்களின் பயன்பாட்டுக்கும் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்ட சுதேச வைத்தியசாலைகளுக்கும் அச்சுவேலி சுதேச மருந்து உற்பத்தி நிலையத்தின் தயாரிப்புக்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

எதிர்காலத்தில் மன்னார், வவுனியா ஆகிய மாவட்ட வைத்திய சாலைகளுக்கும் இவற்றை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன.

**ஞான ஆதவன்**

சுதேச மருந்து உற்பத்தி நிலையம் எதிர்காலத்தில் முழுவீச்சில் செயற்படக் கூடிய ஏதுநிலை ஏற்பட்டுவருகின்றது. இந்த விடயத்தில் வடக்கு மாகாண சுகாதார மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சும் வடக்கு மாகாண சுதேச வைத்தியத் திணைக்களமும் பொருத்தமான நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றன.

அச்சுவேலி சுதேச மருந்து உற்பத்தி நிலையத்தின் உச்சப் பயன்பாட்டோடு கூடிய செயற்பாட்டுக்கு அனைத்துத் தரப்பினரும் ஆவன செய்யவேண்டும்.

(முற்றும்)

## காரியாலய உதவியாளர் தேவை

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்துக்குக் காரியாலய உதவியாளர் உடன் தேவை.

தொடர்பு: 0771546842

தலைவர்,
பரிபாலனசபை.

- தபால் மூலம் -

## ஆறு மாத கால டிப்ளோமா

Course Length - Six Month

22

SEPT. 2011 TO FEBRUARY 2012

தமிழ் மொழி மூலம்

Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி.
Dip. in Health & Hospital Management - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி.
Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

- கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம்
- வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு
- ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.09.2011

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஆவரங்கால் சிவன்கோயிலடியைச் சேர்ந்த யோகானந்தேஸ்வரசர்மா — வத்சலா தம்பதியரின் செல்வப் புதல்வன்

சங்கீர்த்தன சர்மா

2011 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தில் இருந்து தோற்றி 168 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையை பாராட்டி வாழ்த்துவதுடன் கல்வியில் பல துறைகளிலும் சிறந்து விளங்க எமது நடராஜ இராமலிங்கப் பெருமானின் அருள் வேண்டி வாழ்த்துகிறோம்.

மேலும் இவரை கல்வியில் உறுதுணையாக இருந்து வழிநடத்திய வித்தியாலய அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கும் எமது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்:
வே. நடராசக் குருக்கள் குடும்பத்தினர்,
சு. சிறிதரசர்மா (மாமா) குடும்பத்தினர்.

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமைக்கான பாராட்டும் பத்தாவது பிறந்தநாள் வாழ்த்தும்

பிரம்மஸ்ரீ. உமாசுதக்குருக்கள் வித்யாலெட்சுமி தம்பதியரின் செல்வப்புதல்வன்

உ.சுதர்ஷன்

(யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன்)



ஈன்றவர்கள் மனம் குளிர
சான்றோன் எனப் பார் புகழ
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 177
புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த
எம் செல்வம் சுதர்ஷனை
வரம் என்றே கூறிடுவோம்.
விந்தை பல புரிந்து நீயும்
விஞ்ஞானியாய் ஆகிடவே
கரம் தூக்கி வாழ்த்திடுவோம்
அகவை பத்தை அடைந்த இந்த நாளில்
உவகையுடன் போற்றிடுவோம்.

வாழ்த்துவோர்,
தாத்தா, பாட்டி, சித்தப்பா, மாமாமார்-
அத்தைமார்
மச்சான் - மச்சான்மார்

சட்டநாதர் றோட், திருநெல்வேலி.

## சீமெந்து

விற்பனைக்கு உண்டு.
யாழ். சீமெந்து வணிகம்
021 320 2020

## வீடு வாடகைக்கு

யாழ். நகர் மத்தியில் மாட்டீன் றோட் லேனில் அரச, தனியார் நிறுவனங்களுக்கு ஏற்ற அலுவலகமாக உபயோகிக்கக் கூடிய 3 பரப்புக் காணியில் வரவேற்பறை. 4 அறைகள் [ 1 அறை A/C ], 2 குளியலறை, சமையலறை, 10 வாகனத் தரிப்பிட வசதி, நீர்த் தாங்கி மற்றும் ஜெனரேட்டர் வசதிகள் கொண்ட வீடு ஐப்பசி முதலாம் திகதி தொடக்கம் வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகளுக்கு: 0775003780

## விற்பனைக்கு

சாறிகள், சுடிதார்கள் மலிவாக வாங்க இனி நீங்கள் இந்தியா செல்ல வேண்டியதில்லை. உங்கள் வீட்டில் இருந்தபடியே பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு: 0091948615755 7, 0750387092

## காணி, வீடு, விற்பனைக்கு

பளை புலோப்பளையில் 5 பரப்பு வெற்றுக் காணியும், பளை கச்சார் வெளி பிள்ளையார் கோயிலுக்கு அருகில் 6 ஏக்கர் காணியும், 56 அச்சுக் கூட லேன், கொக்குவில் கிழக்கில் 6 அறை, 2 மலசலகூடவசதி சுற்றுமதில் கொண்ட மேல் மாடி வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்புகள்: 0779592051, 0774346417



## ஸ்ரீ கருமாரி அம்மன் ஜோதிடம்

இந்தியாவிலிருந்து வந்துள்ள பிரபல ஜோதிடர் K.M.ராஜீ சுவாமிஜி

'இவர் வெளிநாடுகளிலும் மக்களது பல பிரச்சினைகளைத் தீர்த்துள்ளார்.'

கைரேகை, கல்வி, உத்தியோகம், தொழில், குழந்தைப்பாக்கியம் அனைத்து பிரச்சினைகளும் தீர்த்துத் தரப்படும்.

T.P 072 3811189,
075 2551018

(சிவகணேசன் ரெக்ஸ் பாதையில்)
இல: 63, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
நேரம் - மு.ப. 8.00 - பி.ப 7.00 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2012இல் முதலாம் தரத்துக்கு அனுமதி

# 124 பாடசாலைகளுக்கு இதுவரை விண்ணப்பம் ஒன்றுகூட இல்லை

கொழும்பு, செப். 22

2012 ஆம் ஆண்டு முதலாம் தர மாணவர் அனுமதிக்காக இதுவரை 124 பாடசாலைகளுக்கு ஒரு விண்ணப்பப் படிவமேனும் கிடைக்காத நிலை காணப் படுகின்றது என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

மேலும் 1,552 பாடசாலைகளுக்கு பத்துக்கும் குறைவான விண்ணப்பப்படி வங்களே கிடைக்கப்பெற்றுள்ளன என்று அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் காணப்படுகின்ற அரச பாட சாலைகளில் நான்கில் ஒரு பங்கு பாடசாலைகளுக்கே பிள்ளைகளை அனு மதிப்பதற்கு பெற்றோர் விரும்புகின்றனர். நாடு முழுவதும் சுமார் 80 பிரசித்தி பெற்ற பாடசாலைகள் காணப்படுகின்ற போதிலும் குறிப்பிட்ட சில பாடசாலை களி லேயே தமது பிள்ளைகளை அனு மதிக்க விரும்புகின்றனர்.

பெற்றோர்களிடம் காணப்படும் இவ் வாறான மனப்பாங்கை நீக்குவதற்காக கிராமப்புறங்களில் காணப்படுகின்ற சிறிய பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வன்புணர்வுக்கு இலக்கான மாணவி வேறொரு பாடசாலைக்கு மாற்றம்

கொழும்பு, செப். 22

மாத்தறை - அக்குறஸ்ஸ தெலிஜ்ஜ வெல பாடசாலையில் வன்புணர்வுக் குட்படுத்தப்பட்ட பத்துவயது மாண வியை வேறு பாடசாலைக்கு மாற்று வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தால் மனமுடைந்து போயுள்ள அந்த மாணவியை வேறொரு பாடசாலையில் அனுமதிக்க வழிவகை களை மேற்கொள்ளுமாறுகோரி தாம் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன வுடன் கலந்தாலோசித்து வருகிறார் என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதி கார சபையின் தலைவி சட்டத்தரணி அனோமா திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த மாணவி தனக்கு நேர்ந்த கொடூ ரத்தால் அதே பாடசாலையில் தொடர்ந்து படிக்க விரும்பமாட்டார் என்ற காரணத் தாலேயே அவரை வேறொரு பாடசா லைக்கு மாற்ற முயல்வதாகஅனோமா திஸாநயக்க தெரிவித்துள்ளார். வெகு விரைவில் இந்தப் பிள்ளையின் பெற் றோரை வரவழைத்து இது தொடர்பில் கலந்துரையாடவுள்ளார் என்று அவர் தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று தற்சமயம் வீடு சென்றுள்ள இந் தச் சிறுமி இன்னும் அதிர்ச்சியிலிருந்து மீளாமல் மனவுளைச்சலுக்கு ஆளாகியுள் ளார். அவரை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதற்காக அதிகாரசபையின் மன நல மருத்துவர்களின் குழுவொன்றை அவரின் வீட்டுக்கு அனுப்பிவைத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(ச-5)

# முதலாம் தர அனுமதியில் லஞ்சம் அதிபர்களுக்கு எதிராக முறைப்பாடு

2012 ஆம் ஆண்டுக்கான முதலாம் தர மாணவர் அனுமதியில் லஞ்சம் பெற்ற தாகக் கூறப்படும் அதிபர்களுக்கெதி ராக கடந்த இரண்டு மாத காலப்பகுதிக் குள் சுமார் நூறுக்கும் மேற்பட்ட முறைப் பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக லஞ்சம் மற்றும் மோசடி தொடர்பான விசா ரணை ஆணைக்குழுவின் தலைவர் ஜகத் பாலபட்ட பெந்தி தெரிவித்துள்ளார்.

மேல்மாகாணத்திலேயே அதிக முறைப் பாடுகள் கிடைத்துள்ளன . அவற்றில் 80 வீதமானவை அநாமதேயமாக இருப்ப தால் விசாரணைகளை மேற்கொள்ள முடி யாதுள்ளது என்று குறிப்பிட்ட அவர், இந்த அதிபர்கள் கல்வி அமைச்சின் சுற்று நிருபத்தை மீறும் வகையில் லஞ்சம் பெற்றுள்ளனர் என்று அவர் தெரிவித்துள்ளார்.

அதிபர்களுக்கு எதிராக நாளாந்தம் 15 தொடக்கம் 20 முறைப்பாடுகள் லஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்குக் கிடைக் கின்றன என்று ஆணைக்குழுவின் ஆய் வறிக்கையொன்று சுட்டிக்காட்டுகின்றது.

# எகிறுகிறது நுகர்வோர் அதிகாரசபை வருமானம்

கொழும்பு, செப். 22

2011 ஒகஸ்ட் வரையிலான காலப்பகுதியில் தேசிய நுகர்வோர் அதிகாரசபை நாடெங்கும் மேற்கொண்ட சுற்றிவளைப்புகளின் போது பிடிபட்டவர்களிடமிருந்து ஐந்துகோடி ரூபாவுக்கும் அதிகதொகை அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளதாக சபை யின் பதில் பணிப்பாளர் நாயகம் திருமதி சந்திரிகா திலகரத்ன தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் நகர நுகர்வோர்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை சுவர்ணபாலி மகளிர் பாடசாலையின் கேட்போர் கூடத்தில் நடை பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நுகர்வோருக்கும், வியாபாரிகளுக்கும் அதிகாரசபையின் சட்ட திட்டங்கள் பற்றி முழுமையாகத் தெரிந்துகொள்ள முடியாமல் இருப்பதாலேயே இத்தகைய தவறுகள் இழைக்கப்படுகின்றன என்று அவர் தெரிவித்தார்.

நாடெங்கும் அதிகாரசபையின் கிளை அலுவலகங்கள் திறக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-5

ASIAN Mega COMPUTER SCHOLARSHIP

CSC® ISO 9001 : 2000 Certified Institution

18 வருட நம்பிக்கையும் சிறப்பு மிக்க கல்விச்சேவையும்

CSC - ASIAN கல்விநிலையம், தகவல் தொழில்நுட்ப கல்விக்காக நடாத்திய புலமைப்பரிசில் பரீட்சையில் பங்குபற்றி வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பதிவுகள் ஆரம்பமாகியுள்ளன. குறிப்பிட்ட அளவு அனுமதிகளே உள்ளதால் அருகிலுள்ள CSC - ASIAN பயிற்சி நிலையங்களில் விரைவாக உங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

A/L பரீட்சைகளின் பின் தொழில்சார் கற்கைநெறிகள்

புதிய பிரிவுகள் ஒவ்வொரு வாரமும் ஆரம்பம்

- Advanced Java Programming
- Hardware & Networking
- Digital Video Production
- Tally Financial Training
- Office Application Management
- Master Diploma in Multimedia
- Web Development & Animation
- Honours Dip. in Computer application



ASIAN COMPUTERS

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி |
|---|---|---|
| 2G ஸ்ரான்லி வீதி | கொடிகாமம் வீதி | 230- 1ம் மாடி கண்டி வீதி |
| 021-2225677 | 021-2262399 | 021-2270257 |

கிளிநொச்சி மாவட்டத்தில்

## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்

# கேள்வி அறிவித்தல்

**யாழ். மாவட்ட செயலகத்தில் புதிய கட்டடம் நிர்மாணிப்பதற்காக பழைய கட்டடத்தை இடித்து அகற்றுதலும் இடிக்கும் போது பெறப்படும் மீள்பாவனைக்குட்படுத்தக்கூடிய கட்டடப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளலும்**

தலைவர், யாழ்.மாவட்ட செயலக பெறுகைக்குழு, மாவட்ட செயல கம் யாழ்ப்பாணம் அவர்களால் யாழ்.மாவட்ட செயலகத்தின் தென் மேற்குப் பக்கமாக உள்ள பழைய கட்டடத்தை இடித்து அகற்றுதலும் இடிக்கும் போது பெறப்படும் சகல கட்டடப் பொருள்களையும் பெற் றுக் கொள்வதற்குமான கேள்வி ஆர்வமுள்ள கேள்விதாரர்களிடமிருந்து கோரப்படுகின்றது.

1. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வி ஆவணங்களை எழுத்து மூலமான கோரிக்கை வாயிலாக அரசாங்க அதிபர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரி யில் மீளளிக்க முடியாத வைப்புப் பணமாக ரூபா 500/= ஐ காசாக செலுத்தி 2011.09.22 ஆம் திகதி தொடக்கம் 2011.10.04 ஆம் திகதி வரை அலுவலக நாள்களில் காலை 9 மணி தொடக்கம் பி.ப. 4 மணிவரையான காலப்பகுதியில் மாவட்ட செயலக பொறியியலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
2. இக்கட்டடத்தை 2011.09.22 ஆம் திகதி தொடக்கம் 2011.10.04 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் காலை 9 மணி தொடக்கம் பி.ப.4 மணி வரை யாழ். அரச அதிபரது அனுமதியுடன் பார்வையிடலாம்.
3. சகல கேள்விதாரர்களும் மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 5,000/= ஐ மாவட்ட செயலகத்தில் வைப்புச் செய்த பற்றுச்சீட்டுடன் கேள்வி ஆவணத்தையும் இணைத்து 2011.10.05 ஆம் திகதியன்று பி.ப.2 மணிக்கு முன் பிரதம கணக்காளரது அலு வலகத்தில் வைக்கப்பட்ட கேள்விப் பெட்டியில் அல்லது பதிவுத் தபாலில் தலைவர், மாவட்ட பெறுகைக்குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். 2011.10.05 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு பின் கிடைக்கப்பெறும் ஆவணங்கள் நிராகரிக்கப்படும்.
4. கேள்வி ஆவணங்கள் யாவும் 2011.10.05 ஆம் திகதி பி.ப.2 மணியளவில் அரச அதிபர் மாநாட்டு மண்டபத்தில் திறக்கப்படும். இதன்போது கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்க முடியும்.
5. கேள்வி ஆவணங்கள் மூலப்பிரதி மற்றும் இணைப்பிரதி எனக் குறிப்பிடப்பட்டு தனித் தனியான உறைகளில் இடப்பட்டு உறையின் இடப்புற மேற்பரப்பில் வேலையின் பெயரையும் மூலப்பிரதி இணைப்பிரதி எனவும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.
6. கட்டடத்தை இடித்து அகற்றும் வேலை கீழ்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   i. கூரை ஓடுகள், மரங்களை அகற்றுதல்
   ii. மின் இணைப்பு பொருள்களை அகற்றுதல்
   iii. சுவர், தூண், சிமெந்துக்கல் என்பவற்றை நிலமட்டத்துக்கு ஒப்பரவாக்கல்
   iv. கட்டடத்தை இடித்து அகற்றும் போது ஏற்படும் குழிகள், பள்ளங்கள் அனைத் தையும் நிரப்புதல்
7. இடித்து அகற்றும் நடவடிக்கைகள் மாவட்ட செயலகப் பொறியியலாளரது மேற் பார்வையில் நடைமுறைப்படுத்தப்படும்
8. இடித்து அகற்றும் போது அருகிலுள்ள கட்டடங்களுக்கு எவ்வித சேதமும் ஏற்படாத வாறு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
9. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் 2011.10.07 ஆம் திகதியிலிருந்து வேலையை ஆரம்பித்து ஒரு வாரத்துக்குள் இடித்து அகற்றும் வேலையை முடிவுறுத்தல் வேண்டும்.

இமெல்டா சுகுமார்,
அரசாங்க அதிபர்,
மாவட்ட செயலாளர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

(சி/4081)

இமெல்டா சுகுமார்,
தலைவர்,
மாவட்ட பெறுகைக்குழு,
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் போர்க்குற்றங்கள் குறித்து சர்வதேச நீதிமன்றில் விசாரணை நடத்துக!

## தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகள் ஐ.நா.விடம் கோரிக்கை

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பாக சர்வதேச நீதிமன்றத்தில் விசாரணை நடத்த வேண்டும் என்று இந்தியாவில் உள்ள தமிழ் அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சென்னை அடையாறில் ஐ.நா.சபை யின் ஓர் அங்கமான யுனிசெப் அமைப் பில் நேற்று முன்தினம் காலை பல்வேறு தமிழ் அமைப்புப் பிரதிநிதிகள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் ஐ.நா. பிரதிநிதிகளிடம் மனு ஒன்றைக் கையளித்துள்ளனர்.

அந்த மனுவில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

இலங்கையில் தொடர்ந்து முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழர்களையும், அங்குள்ள சித்திரவதைச் சிறைகளில் உள்ள இளைஞர்களையும் விடுவித்து அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்ப வேண்டும்.

அவர்கள் அங்கு கௌரவமான வாழ்க்கையை ஆரம்பிக்க உரிய நடவடிக்கையை ஐ.நா. எடுக்க வேண்டும். தமிழர் பகுதிகளில் உள்ள ராணுவத்தைத் திரும்பப் பெற வேண்டும்.

தமிழர் பகுதிகளில் குடியமர்த்தப்பட்ட சிங்களவர்களை வெளியேற்ற வேண்டும். அங்கு நடந்த யுத்தக்குற்றங்களை அந்த நாட்டு அரசே விசாரித்தால் நீதி கிடைக்காது. சர்வதேச நீதிமன்றம் மூலம் விசாரணை நடத்த வேண்டும். சனல் 4 மற்றும் சுதந்திரமான ஊடகங்கள் வெளியிட்ட ஆதாரங்களை இந்த விசாரணைக்கு உரிய ஆதாரங்களாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

பலத்த குற்றச்சாட்டுக்கு ஆளாகியுள்ள இலங்கைத் தலைவரை சர்வதேச நீதிமன்றத்தில் விசாரிக்க வேண்டும். தமிழர் பகுதிகளில் வாழும் மக்களின் கருத்துக்களை அறிவதற்கு அங்கு பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும். சர்வதேச சமூகத்தின் மேற்பார்வையில் இந்தப் பணிகள் நடைபெற வேண்டும்.

மேற்கண்ட இந்தக்கோரிக்கைகள் நிறை வேறும் வரை வெளிநாடுகளில் தஞ்சம் அடைந்துள்ள தமிழர்களை இலங்கைக்கு வெளியேற்றாதபடி, ஐ.நா. சபை பார்த்துக் கொள்ள வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(வ)

# வரதட்சணைக் கொடுமையை விரட்ட இளைஞர்கள் முன்வர வேண்டும்

## ஜனாதிபதி வேண்டுகோள்



ராஜஸ்தான், செப்.22

வரதட்சணைக்கொடுமையை முற்றிலுமாக சமுதாயத்தில் இருந்து ஒழிக்க இளைஞர்கள் உதவ வேண்டும் என்று இந்திய ஜனாதிபதி பிரதிபாபாட்டீல் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம், ராலா வட்டா என்ற கிராமத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு பேசியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்:

வரதட்சணை கொடுப்பதும், வாங்குவதும் சமுதாயத்தில் தீய விளைவுகளை ஏற்படுத்தி வருகிறது. பண வசதியற்ற குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் திரு மணத்தின் வரதட்சணையால் பல பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள்.

வரதட்சணையை எதிர்த்து இளைஞர்கள் தீவிரமாக பிரசாரம் மேற்கொள்ள வேண்டும்.

அண்மையில் எடுக்கப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப் பின்படி, பெண்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. இது கவலையளிப்பதாக உள்ளது என்றார்- அவர்.



ராஜீவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரின் தூக்குத் தண்டனைக்கு எதிராக சென்னை மெரீனா கடற் கரையில் தூக்குத் தண்டனைக்கு எதிரான மணற்சிற்ப கண்காட்சி ஒன்று இடம்பெற்றது. சென்னை ஓவியக்கல்லூரியைச் சேர்ந்த மணற் சிற்பிகளும், பிரபல மணற் சிற்பிகளும் கலந்து கொண்டு மணலில் செதுக்கிய சிற்பங்கள்.

# அணுமின் நிலையத்தை மூடக் கோரி சட்ட சபையில் இன்று தீர்மானம் நிறைவேறும்

## முதல்வர் உறுதிமொழி



சென்னை, செப்.22

தமிழக சட்டசபையிலும், அமைச்சரவையிலும் அணுமின் நிலையத்தை மூடக் கோரி தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று கூடங்குளம் அணுமின் நிலையப்போராட்டக் குழுவினர் முதல்வர் ஜெயலலிதாவிடம் கோரிக்கை விடுத்தனர். இதனையடுத்து இந்த விவகாரம் தொடர்பாக இன்று தீர்மானம் நிறைவேற்றப்படும் என்று முதல்வர் உறுதியளித்துள்ளார்.

முதல்வர் அளித்த உறுதிமொழியைத் தொடர்ந்து கூடங்குளம் அணுமின் நிலையப் போராட்டக்குழுவினர் உண்ணாவிரதத்தைக் கைவிட்டுள்ளனர்.

கூடங்குளம் அணுமின் நிலைய விவகாரம் தொடர்பாக கூடங்குளம் போராட்டக் குழுவினர் மற்றும் மத்திய அமைச்சர் நாராயணசாமி ஆகியோர் முதல்வர் ஜெயலலிதாவை நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

முதல்வர் ஜெயலலிதாவை சந்திப்பதற்காக, டாக்டர் உதயக்குமார் தலைமையிலான போராட்டக் குழுவினர் சென்னைக்கு அழைத்துவரப்பட்டனர்.

நேற்றுக்காலை அவர்கள் சாந்தோமிலிருந்து தலைமைச் செயலகத்துக்கு அழைத் துச் செல்லப்பட்டு அங்கு முதல்வர் ஜெயலலிதாவைச் சந்தித்தனர்.

சந்திப்பின்போது தங்களது கருத்துக்கள், கோரிக்கைகளை அவர்கள் முதல்வரிடம் விளக்கினர். தமிழக சட்டசபையிலும், அமைச்சரவையிலும் அணுமின் நிலையத்தை மூடக் கோரி தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக் கொண்டனர்.

அவர்களது கோரிக்கைகள் குறித்து உரிய நடவடிக்கை எடுப்பதாக முதல்வர் உறுதியளித்தார். இதையடுத்து போராட்டக் குழுவினர் விடைபெற்றுச் சென்றனர்.

இதனைத் தொடர்ந்து அமைச்சர் நாராயணசாமி முதல்வரைச் சந்தித்தார். அவரிடம், கூடங்குளம் அணுமின் நிலையம் குறித்தும், போராட்டம் குறித்தும் நாராயணசாமி விவாதித்தார். இடிந்தகரைக்குச் சென்று வந்தமை குறித்தும் விளக்கியதுடன் முதல்வர் ஜெயலலிதாவுடன் உரையாற்றினார்.

# 2ஜி வழக்கில் சிதம்பரத்தை சேர்க்க மத்திய அரசு – சி.பி.ஐ. எதிர்ப்பு

2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டு வழக்கில் மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத்தையும் ஒரு குற்றவாளியாகச் சேர்த்து விசாரிக்க வேண்டும் என்ற ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமியின் கோரிக்கைக்கு மத்திய அரசும், சி.பி.ஐயும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக சுப்பிரமணியசுவாமி தாக்கல் செய்த மனு மீதான விசாரணை நேற்று முன்தினம் உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்றது. அதன்போது, சி.பி.ஐ. தரப்பில் ஆஜரான சட்டத்தரணி வாதாடுகையில்: சிபிஐயின் விசாரணையில் உச்ச நீதிமன்றம் நேரடியாகத் தலையிட முடியாது. இதில் புதிய குற்றவாளிகளைச் சேர்ப்பது குறித்தோ, மேலும் விசாரணை நடத்த வேண்டும் என்பது குறித்தோ விசாரணை நீதிமன்றம் தான் எந்த முடிவையும் எடுக்க முடியும் என்றார்.

அதே போல மத்திய அரச சட்டத்தரணி சுவாமியின் கோரிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தார்.

# மேற்கு வங்கத்தில் பறவைக் காய்ச்சல்

மேற்கு வங்க மாநிலத்தில் பறவைக் காய்ச்சல் பரவ ஆரம்பித்துள்ளது. ஏவியன் இன்ஃ புளுவன்சா எனப்படும் இந்தக் காய்ச்சலால், மேற்கு வங்க மாநிலத்தில் தெஹாட்டா பகுதியில் உள்ள சில கிராமங்களில் உள்ள கோழிகள் பாதிக்கப்பட்டமை கடந்த திங்கட்கிழமை உறுதி செய்யப்பட்டது.

இதற்கு முன்னதாக இந்த நோய் தொடர்பான மாதிரிகள் எடுக்கப்பட்டு, போபாலில் உள்ள விலங்கின நோய்களுக்கான உயர்தடுப்பு மையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

பரிசோதனையில் பறவைக் காய்ச்சல் உறுதியானதைத் தொடர்ந்து, நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முதல் பாதிக்கப்பட்ட கோழிகள் உள்ளிட்ட பறவைகளை அழிக்கும் பணி ஆரம்பமாகியது. ஏறக்குறைய 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பறவைகள் [illegible]

# தெலுங்கானாவுக்காக மீண்டும் உண்ணாவிரதத்தில் ஈடுபடுவேன்

## சந்திரசேகரராவ் மிரட்டல்

தெலுங்கானா தனி மாநிலம் அமைக்க கோரி தெலுங்கானா ராஷ்ட்ரிய சமிதிக் கட்சித் தலைவர் சந்திரசேகரராவ் மீண் டும் காலவரையற்ற உண்ணா விரதம் இருக்கப் போவதாக மிரட்டல் விடுத்துள்ளார்.

ஆந்திராவைப் பிரித்து தனி மாநிலம் அமைக்க கோரி தெலுங்கானா ராஷ்ட்ரிய சமிதிக் கட்சி கடந்த சில ஆண்டுகளாக போராட்டம் நடத்தி வருகிறது. அந்தக் கட்சியின் தலைவர் சந்திர சேகரராவ் இந்தக்கோரிக்கையை வலியுறுத்தி கடந்த 2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் காலவரையற்ற உண்ணாவிரதம் இருந்தார்.

அப்போது அவர் 11ஆவது நாளாக உண்ணா விரதம் இருந்தபோது உடல்நிலை மோசம் அடைந்தது. மத்திய அரசு தெலுங்கானா மாநிலம் அமைக்க உறுதி அளித்ததைத் தொடர்ந்து உண்ணாவிரதத்தை கைவிட்டார்.

ஆனால் இதுவரை மத்திய அரசு தனி மாநிலம் அமைக்க முன்வரவில்லை. இதனால் சந்திரசேகரராவ் மற்றும் தெலுங்கானா தலைவர்கள் வேதனை அடைந்துள்ளனர்.

இந்த நிலையில் சந்திரசேகரராவ் தெலுங்கானா கோரி மீண்டும் காலவரையற்ற உண்ணா விரதம் இருக்கப் போவதாக மிரட்டல் விடுத்துள்ளார். இது பற்றி அவர் நேற்று முன்தினம் தனது கட்சி தலைவர்கள் மகன் தாரக்ராம், மகள் கவிதா ஆகியோருடன் ஆலோசனை நடத்தினார். இதுபற்றி கவிதா கூறும் போது

எனது தந்தையின் உடல் நிலை சரி இல்லை. இதனால் அவர் காலவரையற்ற உண்ணா விரதம் இருப்பதை நான் விரும்பவில்லை - என்றார்.

# ஈரான் விமானங்கள் கல்கத்தாவில் திடீர் தரையிறக்கம்

ஈரான் தனியார் விமானங்களில் எரிபொருள் முடிவடைந்ததால் கல்கத்தா விமான நிலையத்தில் அந்த விமானங்கள் திடீரெனத் தரையிறக்கப்பட்டன.

ஈரான் நாட்டைச் சேர்ந்த மகான் ஏர் என்ற தனியார் நிறுவனத்துக்குச் சொந்தமான 2 விமானங்கள் தாய்லாந்தின் ஃபுகெட் நகரிலிருந்து ஈரானில் உள்ள தெஹ்ரான் நோக்கி கடந்த திங்கட்கிழமை புறப்பட்டன.

இந்த நிலையில் விமானங்களில் எரிபொருள் தீர்ந்து போனதால், கல்கத்தாவில் உள்ள என்.எஸ்.சி. போஸ் சர்வதேச விமான நிலையத்தில் திடீரென தரையிறக்கப்பட்டன. இந்த விமானங்களில் பயணம் செய்தோர் அதிஷ்டவசமாக உயிர் தப்பினர். அவர்கள் அனைவரும் விமான நிலையத்தில் பாதுகாப்பாக தங்க வைக்கப் பட்டுள்ளனர்.

விமானங்களில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டுள்ளது என்றும், அவற்றை சரி செய்யும் வரை தொடர்ந்து கல்கத்தா விமான நிலையத்தில் அவை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் எனவும் விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை இலங்கை அரசு நடைமுறைப்படுத்தவில்லை

## மனித உரிமைகள் கண்காணிப்பக பிரதிநிதிகள் குற்றச்சாட்டு

கொழும்பு, செப்.22

நல்லிணக்க ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையை இலங்கை அரசு நடைமுறைப்படுத்தவில்லை என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் பிரதிநிதிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட மனிதஉரிமைகள் கண்காணிப்பகத்தின் மூத்த பிரதிநிதிகளை ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி கலாநிதி பாலித கொஹன்ன, பிரதி வதிவிட பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா ஆகியோர் சந்தித்துக் கலந்துரையாடினர். இந்த சந்திப்பின் போதே இந்த விடயம் சுட்டிக் காட்டப்பட்டது.

அதனை நிராகரித்த பாலித கொஹன்ன, காணி விவகாரங்கள் மற்றும் இறப்புச் சான்றிதழ் வழங்கும் விவகாரங்கள் குறித்த அரசின் நிலைப்பாட்டை எடுத்துக் கூறியுள்ளார்.

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை முன்னேற்றமான நிலையில் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவசரகாலச்சட்டம் நீக்கப்பட்டது, நல்லிணக்க ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கை நடைமுறைப்படுத்தப்படுவதன் ஆகப்பிந்திய உதாரணம் என்று மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா கூறியுள்ளார்.

ஐ.நா. நிபுணர்குழு அறிக்கையும், சனல் 4 வெளியிட்ட சிறிலங்காவின் கொலைக் களங்கள் ஆவணப்படமும் விசாரணைகளை ஆரம்பிக்கப் போதுமான சான்றுகள் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் இதன் போது எடுத்துக் கூறியது.

இருந்த போதும் வெளிநாடுகளில் உள்ள, விடுதலைப் புலிகளைப் பிரதிநிதித்துவப் படுத்தும் தலைவர்கள் முப்பதாண்டு கால வன்முறைகளுக்குப் பொறுப்புக் கூற வேண்டும் என்று இங்கு சுட்டிக் காட்டப்பட்டது.

போரின் இறுதிக்கட்டம் குறித்தே மனிதஉரிமைகள் கண்காணிப்பகம் கவலைப்படுகிறது என்று மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா இதன்போது கூறினார்.

இதன்போது வெளிநாடுகளில் வாழும் புலிகளின் தலைவர்கள் மீது குற்றசாட்டுகளைச் சுமத்துமாறும் அந்தந்த நாடுகளுக்கு அழுத்தம் கொடுக்குமாறு மனிதஉரிமைகள் கண்காணிப்பகத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. (ம)

# சியாரம் உடைக்கப்பட்டதா? தெரியாது என்கிறார் சுசில்

கொழும்பு, செப்.22

அநுராதபுரத்தில் முஸ்லிம் பள்ளி சியாரம் உடைக்கப்பட்டமை தொடர்பாக தனக்கு எதுவும் தெரியாது என்று அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நேற்று முன்தினம் கூறினார்.

மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போது ஊடகவியா ளர் ஒருவர் எழுப்பிய மேற்படி விடயம் தொடர்பான கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

''பொலிஸாரின் முன்னிலையில் அநுராதபுரத்தில் முஸ்லிம் சியாரம் ஒன்று உடைக்கப்பட்டது. அச் சம்பவத்தைப் பொலிஸார் கைகட்டிப்பார்த்துக் கொண்டிருந்தனர். இப்படியான நிலையில் அரசின் வாக்குறுதியை எப்படி முஸ்லிம்கள் நம்புவர்'' என்றே அந்த ஊடகவியலாளர் கேள்வி எழுப்பினார். இதன் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

ஒரு வாரத்துக்கு முன் இடம்பெற்ற இந்த சியாரம் உடைப்புச் சம்பவத்தை நாடு முழுவதும் அறிந்திருந்தமை ஊடகங்களில் பரவலாகப் பேசப்பட்டது.

பரவலாகப் பேசப் பட்ட இந்த விடயம் அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுக்குத் தெரியாமல் போனமை அதிசயமாகும் என்கிறார்கள் முஸ்லிம் மக்கள். (ஒ-சி)

# அரசின் மௌனமே சந்தேகம்



### ஏ.ஜே.எம். முஸம்மில்

அநுராதபுரத்திலுள்ள முஸ்லிம் சியாரம் உடைக்கப்பட்ட சம்பவம் தொடர் பாக உரிய விசாரணைகளை முன்னெடுக்காது, அரசு மௌனம் காத்து வருகின்றமையானது முஸ்லிம் மக்கள் மத்தியில் சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது. பொலிஸார் கைகட்டி வேடிக்கை பார்த்துள்ளனர். ஜாதிக ஹெல உறுமயவின் அனுசரணையுடனேயே சியாரம் உடைக்கப்பட்டுள்ளது. இதை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

நடவடிக்கை எடுக்கவேண்டியவர்களே மௌனம் காத்தால் நடவடிக்கைகள் எடுப்பது யார் என நாம் கேட்கின்றோம். அநுராதபுரத்திலுள்ள சியாரம் 400 வருடங்கள் பழைமை வாய்ந்தது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். - என்று கொழும்பு மாநகர சபை மேயர் வேட்பாளர் ஏ.ஜே.எம். முஸம்மில் தெரிவித்துள்ளார்.

# இந்தப் பிரச்சினை தீரும்

### அஸ்வர் எம்.பி.



அநுராதபுரத்தில் சியாரம் இடிக்கப்பட்ட விவகாரத்தைப் பயன்படுத்தி எவரும் அரசியல் ஆதாயம் தேட முனையக் கூடாது. இது மதம் சம்பந்தப்பட்ட விடயம். இந்தப் பிரச்சினையை நாம் சுமுகமாகத் தீர்த்துவைப்போம்.

கொழும்பு மாநகரசபையை அரசு கைப்பற்றிவிடும் என்ற அச்சம் ஐ.தே.கட்சிக்கு வந்துள்ளது. சிறிகொத்தா பிளவுபட்டுள்ளது. அதேபோன்று, ஜே.வி.பிக்குள்ளும் கட்சி உட்பூசல் அதிகரித்துள்ளது. இவ்வாறானதொரு நிலையில் அந்தக் கட்சிகளுக்கு அரசியல் நடத்துவதற்கு ஒன்றுமில்லை. அதன் காரணமாகவே மத விவகாரங்களில் தலையிட்டு மிகவும் இழிவான முறையில் அரசியல் ஆதாயம் தேட முனைகின்றனர். அநுராதபுரத்தில் தர்க்கா உடைக்கப்பட்ட விவகாரம் தொடர்பில் உரிய அதிகாரிகளின் கவனத்துக்கு நாம் கொண்டுவந்துள்ளோம். சுமுகமாகத் தீர்க்க வேண்டிய பிரச்சினையைக்கூட அரசியல்மயப்படுத்த முனைகின்றனர். - என்று ஜனாதிபதியின் மூத்த ஆலோசகர்களுள் ஒருவரான அஸ்வர் எம்.பி.

# சர்வதேசம் தம்முடன் என்ற ஆணவம், கர்வத்தால் முஸ்லிம்களை புறக்கணிக்கிறது தமிழ்த் தலைமை

## நீதியமைச்சர் ஹக்கீம் குற்றச்சாட்டு

சர்வதேசம் தங்களோடு இருக்கின்றது என்ற இறுமாப்பாலும் ஆணவத்தாலும் தமிழ்த் தலைமைகள், முஸ்லிம் சமூகம் முன்வைக்கின்ற நியாயமான அடிப்படைக் கோரிக்கைகளை புறக்கணிக்கின்றனர் - என்று நீதியமைச்சரும், முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ஹக்கீம் குற்றம் சாட்டினார்.

தமிழ்த் தலைமைகள் முஸ்லிம் காங்கிரஸை அரசின் அடிவருடிகள் என்றே பார்க்கின்றன என்றும் ஹக்கீம் தெரிவித்தார்.

கல்முனை மாநகரசபை தேர்தலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்து கல்முனை நகரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திலேயே ஹக்கீம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சர்வதேசம் எங்களோடு இருக்கின்றது என்கின்ற ஆர்ப்பரிப்பும், இறுமாப்பும், ஆணவமும், கர்வமும் தமிழ்த் தலைமைகளின் கண்களை மறைக்கின்றன. அதனால், முஸ்லிம் சமூகம் முன்வைக்கின்ற நியாயமான அடிப்படைக் கோரிக்கைகளை உணர்ந்து கொள்வதற்கு அவர்கள் மறுக்கின்றனர் என்றும் ஹக்கீம் குற்றம் சாட்டினார்.

இந்த நாட்டிலே அரசியல் தீர்வின் போதும் அதிகாரப்பகிர்வின்போதும் முஸ்லிம் சமூகம் ஒடுக்கப்படுவதையோ, புறக்கணிக்கப்படுவதையோ ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்று ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் 1977ஆம் ஆண்டு இணைந்து போட்டியிட்ட முஸ்லிம் வேட்பாளர்கள் எல்லோரும் தோல்வியடைந்தனர். ஆனால், தமிழர் விடுதலைக் கூட்டணி 17 ஆசனங்களைப் பெற்று அமோக வெற்றியடைந்தது. தமிழ்த் தரப்புக்கு நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவி கிடைத்தது. முஸ்லிம்கள் தோற்று தமிழர் விடுதலை முன்னணியை வெற்றி பெறச் செய்தனர். இதற்கு வித்திட்டவர் எம்.எச். எம்.அஷ்ரப் ஆவார்.

ஆனால், இப்போது தமிழ் சமூகம் தங்களுக்கு ஏதாவது கிடைக்கலாம் எனும் நிலையொன்று வரும்போது முஸ்லிம் சமூகத்தைப் புறந்தள்ளி விட நினைத்தால் அதற்கு நிச்சயம் நாம் பதிலடி கொடுப்போம். தமிழர்களுக்காக முஸ்லிம் சமூகம் சாமானியமான தியாகங்களைச் செய்யவில்லை என்பதை தமிழ்த் தேசிய தலைமைகளிடம் நாம் ஞாபகப்படுத்தியிருக்கின்றோம். இப்போது எல்லாவற்றையும் மறந்து விட்டார்கள். தமிழர் விடுதலைக் கூட்டணியின் வெற்றிக்காக 1977ஆம் ஆண்டு தேர்தலின் போது அஷ்ரப் ஆற்றியிருந்த பங்களிப்பு மகத்தானது. தமிழ் பிரதேசங்களான பாண்டிருப்பு, நீலாவணை போன்ற பகுதிகளில் அஷ்ரப் பிரசாரக் கூட்டங்களை நடத்தினார்.

அப்போது, தமிழ் ஈழத்தை தந்தை செல்வா பெற்றுத் தராவிட்டால், அதை நான் பெற்றுத் தருவேன் என்று தைரியமாக முதுகெலும்பை நிமிர்த்திப் பேசினார். ஆனால், இன்றைய தமிழ்த் தலைமைகள் இதை மறந்து விட்டன.

# இது காட்டுமிராண்டிச் செயல்

### சிறிதரன் எம்.பி.



தமிழ் மக்களுக்கு அன்று நேர்ந்த அவலங்கள் இன்று முஸ்லிம் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. இதன் ஓர் அங்கமே அநுராதபுரத்தில் சியாரம் உடைத்தெறியப்பட்ட சம்பவமாகும்.

தமிழர் பிரதேசங்களில் திட்ட மிட்ட நில அபகரிப்பு, இந்து ஆலயங்கள் இடித்து நொருக்கப்படுதல், முஸ்லிம் பள்ளிவாசல்கள் இடிக்கப்படுதல் போன்ற விடயங்கள் இந்த ஆட்சியில் தலைவிரித்தாடுகின்றன. இதனை இப்படியே விடக்கூடாது. தமிழ் பேசும் மக்களாகிய நாம் ஒன்றிணைந்து எமது உரிமைகளைப் பாதுகாக்க குரல் கொடுக்கவேண்டிய சந்தர்ப்பம் வந்துவிட்டது. பேரினவாதிகளே இந்த விவகாரங்களுக்கு வழிசமைத்துக் கொடுத்துள்ளனர். முஸ்லிம் மக்கள் சமயத்துக்கு முன்னிலை கொடுப்பவர்கள். உயிரிலும் மேலாக நினைத்து அவர்கள் தமது சமயத்தைப் போதிக்கின்றனர். இவ்வாறானதொரு நிலையில் முஸ்லிம் சியாரம் திட்டமிட்டு உடைக்கப்பட்ட சம்பவமானது காட்டுமிராண்டித்தனமான செயலாகும். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். - என்று எஸ்.சிறிதரன் எம்.பி. கூறியுள்ளார்.

# இடிக்கப்பட்ட தர்காவை மீண்டும் கட்டித் தருவதாகக் கூறவில்லை

## விளக்கமளிக்கின்றார் பாதுகாப்புச் செயலர்

அநுராதபுரத்தில் இடிக்கப்பட்ட சியாரத்தை மீண்டும் கட்டித்தருவதாக தான் உறுதியளிக்கவில்லை என பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பி.பி.சி க்குத் தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் பள்ளிவாசலின் சியாரம் புத்த பிக்குகள் சிலரால் இடிக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக முஸ்லிம் பிரதிநிதிகள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

உடைக்கப்பட்ட தர்கா மீண்டும் கட்டித்தரப்படும் என்று பாதுகாப்புச் செயலாளர் உத்திரவாதம் வழங்கினார் என இந்த சந்திப்பில் . கலந்துகொண்ட பிரதிநிதிகள் கூறியிருந்தனர்.

பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ கூறினார் என வெளியாகியிருந்த செய்திகளுக்கு அவர்விளக்கமளித்துள்ளார்.

செய்திகளில் தெரிவிக்கப்பட்டிருந்ததுபோல இந்த தர்கா மீண்டும் கட்டித்தரப்படுவதற்கு தன்னால் உத்தரவிடவில்லை என்றும் ,

கோயில்களுக்கும் தர்காக்களுக்கும் பாதுகாப்பு வழங்க தன்னால் ஏற்பாடு செய்ய முடியுமே ஒழிய, இடிக்கப் பட்ட தர்கா மீண்டும் கட்டித்தரப்படுவதற்கு தன்னால் ஏற்பாடு செய்ய முடியாது என்றும் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மீள் கட்டுமானம் பற்றி பேச வேண்டுமானால் முஸ்லிம் மற்றும் பௌத்த பிரதிநிதிகள் மத விவகார அமைச்சிடம் அவ்விவகாரத்தை கொண்டு செல்ல வேண்டும் என்று அவர் பி.பி.சிக்குத் கருத்துத் தெரிவித்தார்.

### பிக்குகள் செயலை விமர்சித்தார்

தர்கா இடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கருத்து தெரிவித்த பாதுகாப்புச் செயலர், இப்படியான செயலுக்கு யாரும் ஒப்புதல் அளித்திருக்கவில்லை என்றும், சட்டத்தை யாரும் அவரவர் கைகளில் எடுத்து கொள்ளக்கூடாது என்றும் சமூகங்கள் இடையிலான நல்லு [illegible] என்றும் தெரிவித்தார்.

# ஆக்கபூர்வ விசாரணைகள் இல்லை



### பிரதியமைச்சர் ஹசன் அலி

அநுராதபுரத்தில் முஸ்லிம் சியாரம் இடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக இன்னும் ஆக்கபூர்வமான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இந்த விவகாரம் தொடர்பாக மௌனப் போக்குத் தொடருமானால், பிரச்சினையை நாடாளுமன்றத்துக்கு எடுத்துச் சென்று அங்கு குரல் கொடுக்கவேண்டிய நிலை ஏற்படும். சியாரம் இடிக்கப்பட்ட காட்டுமிராண்டித்தனமான செயலை முஸ்லிம் காங்கிரஸ் வன்மையாகக் கண்டிக்கின்றது. - என்று பிரதியமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸின் செயலாளருமான ஹசன் அலி தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கன் தலைநகரில் தற்கொலைத் தாக்கு; முன்னாள் அதிபர் ரப்பானி படுகொலை




காபூல்,செப்.22

தலிபான்களுடன் பேச்சு நடத்த ஆப்கான் அதிபர் ஹமித் கர்சாய் நியமித்த அமைதிக் குழுவின் தலைவரும், அந்த நாட்டு முன்னாள் அதிபருமான புர்ஹானுத்தீன் ரப்பானி ஆப்கான் தலைநகர் காபூலில் நேற்று முன்தினம் தலிபான் தீவிர வாதி ஒருவன் நடத்திய தற் கொலைத் தாக்குதலில் கொல் லப்பட்டார். ரப்பானியுடன் அவருடைய மெய்க்காப்பாளர்கள் 4 பேரும் கொல்லப்பட்டனர்.

தலிபான் தீவிரவாதிகளிட மிருந்து சிறப்புச் செய்தி கொண்டு வந்துள்ள தூதர் என்று கூறி ரப்பானியை அவரது இல்லத் தில் சந்தித்த ஒருவர் அந்தத் தற்கொலைத் தாக்குதலில் ஈடுபட்டார். தன் தலைப் பாகையில் அவர் குண்டை மறைத்து வைத்திருந்ததாக வும், ரப்பானியைச் சந்தித்த வுடன் அன்போடு தழுவுவது போல் தனது தலையை ரப்பானி யின் தோளில் சாய்த்துக் கொண்டு அந்த குண்டை வெடிக்கச் செய் துள்ளார் என்றும் கூறப்படுகிறது.

அவருடன் இன்னொரு வரும் வந்ததாகவும், இந்தத் தாக்கு தலில் காயமடைந்த அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆப்கானிஸ்தானின் வடக் குக் கூட்டணி என்றழைக்கப் படும் தேஜிக், உஸ்பெக் இன மக்களின் முக்கியத் தலைவரான ரப்பானி, தலிபான்களின் ஆட்சி ஆப்கானில் முடிவுக்கு வந்த பின்னர் அதிபராக இருந்தவர். ஓர் ஆண்டுக்கு முன்னர்தான், தலிபான்களுடன் பேச்சு நடத்தி ஒரு தீர்வை எட்ட அதிபர் கர்சாய் நியமித்த அமைதிப் பேரவை யின் தலைவராக்கப்பட்டார்.

ரப்பானியின் கொலைச் செய்தி அறிந்த கர்சாய் தனது அமெரிக் கப் பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்புகிறார் என்று ஆப்கான் அரசு தெரிவித் துள்ளது.

# லிபியாவில் எங்கள் ஆட்சியை எவராலுமே அகற்ற முடியாது

**கடாபியின் ஆவேசப் பேட்டி**

டமாஸ்கஸ்,செப்.22

''லிபியாவில் இருப்பது மக்கள் ஆட்சி. அதை எவராலுமே அகற்ற முடியாது. 'நேட்டோ' வின் ஆதரவு நீண்ட நாள் நீடிக்காது'' எனத் தலைமறை வாக உள்ள லிபிய முன்னாள் தலைவர் கடாபி ஆவேசமாகப் பேட்டியளித்துள்ளார்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில், ஐ.நா., தலைமை யகத்தில் லிபிய இடைக்காலக் கவுன்சில் தலைவர் முஸ்தபா ஜலீல் மற்றும் அமெரிக்க அதி பர் ஒபாமா இருவரும் நேற்று சந்தித்துப் பேசினர். தொடர்ந்து, ஐ.நா., பொதுச் சபையில் லிபியா விவகாரம் இடம் பெற்றது.

இந்நிலையில், சிரியாவில் ஒளிபரப்பாகும், அல் ராய், தொலைக்காட்சியில், தலை மறைவாக உள்ள லிபியா முன்னாள் தலைவர் கடாபியின் பேட்டி நேற்றுமுன்தினம் ஒலிபரப் பானது.

அதில், ''லிபியாவில் இருப் பது மக்கள் ஆட்சி. வான் மற்றும் கடல் வழித் தாக்குதல் மூலம் ஒரு நாட்டின் ஆட்சி யைத் தூக்கி எறிந்துவிட்டு இன்னொரு ஆட்சி திணிக்கப்படுவதை யாரும் ஏற்காதீர்கள் லிபியாவின் மக்கள் ஆட்சியை எவராலுமே அகற்ற முடியாது. 'நேட்டோ'வின் ஆதரவு நீண்ட நாள் நீடிக்காது'' என அவர் கூறியுள்ளார்.




கிரீஸ் அரசு, சம்பளக் குறைப்பு, ஊழியர்களை வீட்டுக்கு அனுப்புதல் உள்ளிட்ட பல்வேறு சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதை எதிர்த்து, தலைநகர் எதென்சில் ஊழியர்கள் வரிப் பத்திரங்களை எரிக்கும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# பாகிஸ்தானில் கடும் மோதல் 18 தீவிரவாதிகள் உயிரிழப்பு

இஸ்லாமாபாத், செப்.22

பாகிஸ்தானில் ராணுவ வீரர் களுக்கும், தலிபான் தீவிரவாதி களுக்கும் இடையே நேற்று முன்தினம் கடும் துப்பாக்கிச் சண்டை நடந்தது. இதில் 18 தீவிரவாதிகள் கொல்லப்பட்ட னர். ராணுவ வீரர் ஒருவர் உயிரி ழந்தார்.

ஒரக்ஜாய் பழங்குடியினப் பிராந்தியத்தில் உள்ள தபோரி என்ற இடத்தில் இந்தத் துப் பாக்கிச் சண்டை நடந்தது. இராணு வச் சோதனைச் சாவடி மீது திடீரெனத் தலிபான்கள் ரொக் கெட்டுகள் மூலம் தாக்குதல் தொடுத்தனர். ராணுவ வீரர் களை நோக்கித் துப்பாக்கி யாலும் சுட்டனர்.

இதையடுத்து சுதாரித்துக் கொண்ட ராணுவ வீரர்கள் பதி லடி கொடுத்தனர். தீவிரவாதி கள் பதுங்கியிருந்த இடத்தைச் சுற்றி வளைத்துத் துப்பாக்கிச் சூடு நடத்தியதுடன் விமானப் படைக்குத் தகவல் அளித்தும் வரவழைத்தனர்.

அவர்களும் ஹெலி கொப் டர் களில் வந்து தீவிரவாதிகள் பதுங்கியிருந்த இடத்தைக் குறிவைத்து குண்டுகளைப் பொழிந்தனர்.

பல மணி நேரம் நீடித்த இந்தச் சண்டையில் தீவிரவாதி கள் 18 பேர் கொல்லப்பட்டனர். 16 தீவிரவாதிகள் காயத்துடன் தப்பியோடிவிட்டனர். தீவிர வாதிகள் சுட்டதில் ராணுவ வீரர் ஒருவர் உயிரிழந்தார். 5 வீரர்கள் காயமடைந்தனர்.

ஹெலிகொப்டர்கள் மூலம் குண்டு வீசியதில் இந்தப் பகுதியில் இருந்த 6 தீவிரவாத முகாம்கள் தகர்க்கப்பட்டன.

# கவுதமாலாவில் நிலநடுக்கம்: பீதியில் மக்கள்

கவுதமாலா,செப்.22

மத்திய அமெரிக்க நாடான கவுதமாலாவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. நேற்று முன்தினம் தொடங்கிய இந்த நிலநடுக்கம் 30 நிமிடங்களுக்கு ஒருமுறை என நான்கு தடவை கள் ஏற்பட்டன. இதில் வீடுகள் மற்றும் கட்டடங்கள் குலுங்கின. இதனால் ஏற்பட்ட இடிபாடுகளில் சிக்கி ஒரு பெண் உள்பட 3 பேர் உயிரிழந்தனர். மேலும் இடி பாடுகளில் சிக்கி காயம் அடைந் தவர்கள் மீட்கப்பட்டனர். அவர் கள் அனைவரும் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த நிலநடுக்கத்தால் குலாபா, சாந்தா மரியா இன்கு வாடன், தொராடோரியா ஆகிய பகுதி கள் மிகவும் பாதிக்கப்பட்டன. அப்பகுதிகளில் உள்ள வீடுகள் இடிந்தன. இதன் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்கள் அங்கி ருந்து வெளியேற்றப்பட்டனர். வீடுகளை இழந்த மக்கள் கூடா ரங்களில் தங்க வைக்கப்பட் டுள்ளனர்.

இங்கு 5.8 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் பதிவானதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் அறிவித்துள்ளது. பாதிக் கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணி நடைபெற்று வருவதாக அந்த நாட்டு அதிபர் அல் வாரோ கலோம் தெரிவித்துள் ளார்.

# பேஸ்புக், டுவிட்டருக்கு பாகிஸ்தானில் தடை

மத வெறுப்புணர்ச்சியைத் தூண்டுவதாக உள்ள பேஸ்புக், டுவிட்டர் உள்ளிட்ட சமூக இணையத்தளங்களை பாகிஸ்தானில் யாரும் பயன்படுத்தக்கூடாது என லாகூர் உயர்நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

லாகூர் நீதிமன்ற நீதிபதி ஷேக் அஜ்மத் சயீத் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்துக்கு இந்த உத்தரவை நேற்றுமுன்தினம் பிறப்பித்தார்.

எனினும் கூகுள் மற்றும் இதர தேடு தளங்களைப் பயன்படுத்துவதைத் தடைசெய்ய வேண்டாம் என நீதிபதி தனது உத்தரவில் குறிப்பிட்டுள்ளார். இதனால் பேஸ்புக் பயனா ளர்கள் பெரும் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளனர்.

பேஸ்புக்கில் முகமது நபிக்கு எதிராக மோசமான பிரசாரம் மேற்கொள்ளப்படுவதால் அதை முற்றாகத் தடை செய்ய வேண்டும் என முகமது அசாத் சித்திக் என்ற பாகிஸ்தான் வழக்கறிஞர் தொடர்ந்த வழக்கிலேயே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

தீர்ப்பு வெளியான சிலமணி நேரங்களில் பேஸ்புக், டுவிட்டர் உள்ளிட்ட சமூகத் தளங்களை அந்தநாட்டு தொழில்நுட்ப அமைச்சகம் முற் றாகத் தடை செய்துவிட்டது. இந்தத் தடையை அமுல்படுத்தியுள்ளது குறித்து ஒக்டோபர் 6ஆம் திகதி முழுமையான அறிக்கையைத் தாக்கல் செய்யவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# தீவிரவாதத்தை ஒழிக்க மலேசியா ஆதரவு

''ஆசிய நாடுகளில் பரவும் தீவிரவாதத்தை தடுக்க, உளவுத் துறை பரிமாற்றங்கள் போன்ற உதவிகளை செய்யத் தயாராக உள்ளோம்'' என மலேசியப் பிரத மர் முகமது நஜீப் ரசாத் கூறினார்.

கோலாலம்பூரில் இந்திய பத்திரி கையாளர்களைச் சந்தித்து அவர் கூறியதாவது: ஆசிய நாடுகளில் தீவிரவாதத்துக்கு எதிராக ஒத்து ழைக்கத் தயாராக உள்ளோம். உளவு ரீதியிலான உதவிகள், தகவல் பரிமாற்றங்களை மலேசியா அளிக் கும் என முகமது நஜீப் கூறினார்.

# பொறுப்புகளை ஒப்படைக்கும் விவகாரம் கர்சாயுடன் ஆலோசிப்பார் ஒபாமா

வாஷிங்டன், செப்.22

ஆப்கனிலிருந்து அமெரிக் கப் படையினரைத் திரும்பப் பெறுவது, பொறுப்புகளை ஆப்கன் அரசிடம் ஒப்படைப் பது குறித்து ஆப்கன் அதிபர் ஹமீத் கர்சாயுடன் ஒபாமா ஆலோசிக்க உள்ளார் என அமெரிக் காவின் தேசியப் பாதுகாப்புக் கான துணை ஆலோசகர் பென் ரோட்ஸ் செய்தியாளர்களிடம் திங்கட்கிழமை தெரிவித்தார்.

இது குறித்து பென் ரோட்ஸ் மேலும் தெரிவித்ததாவது:

ஆப்கனிலிருந்து வீரர்களைத் திரும்பப் பெறுவது என்று ஒபாமா அறிவித்த பின் இரு நாட்டு அதிபர்களும் சந்தித்துப் பேசுவது முதல் முறையாகும்.

எனவே பொறுப்புகளை ஆப்கன் பாதுகாப்புப் படை யினரிடம் ஒப்படைப்பது தொடர் பாக இருவரும் பேசுவர். இரு நாடுகளுக்கு இடையேயான ராணுவ உறவு குறித்து நடை பெற்று வரும் பேச்சுக்கள் பற்றி யும் சந்திப்பின்போது விவாதிக் கப்படும்.

இந்த ஆண்டின் இறுதியில் ஆப்கன் தொடர்பான மாநாடு இஸ்தான்புல்லில் நடைபெற உள்ளது. எனவே ஆப்கனில் நடைபெற்றுவரும் அரசியல் மாற்றங்கள் குறித்தும் இரு வரும் விவாதிப்பர் என்று பென் [illegible] தெரிவித்தார்.

# சீனாவில் தொடரும் கனமழை வெள்ளத்தில் சிக்கி 57 பேர் சாவு



பீஜிங்,செப்.22

சீனாவில் கனமழை மற்றும் வெள்ளப்பெருக்குக் காரணமாக இதுவரை 57 பேர் உயிரிழந்துள் ளனர். நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர். மேலும் ஆயிரக்கணக்கானோர் வீடுகளில் இருந்து வெளியேற் றப்பட்டு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தொடர்மழை காரணமாகச் சிச்சுவான், ஷான்ஸி மற்றும் ஹீனான் பகுதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதில் இதுவரை 57 பேர் உயிரிழந் தனர். 29 பேரைக் காணவில்லை.

120,000 இற்கும்மேற்பட்ட வீடு கள் வெள்ளத்தால் சேதமடைந் துள்ளன எனச் சீன பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உதயன்
22 செப்ரெம்பர் 2011 வியாழக்கிழமை


# எட்டு பதக்கங்களை வென்றெடுத்து சாதனை படைத்த வடக்கு வீரர்கள்

## பதக்கங்களை வென்றெடுத்த வீரர்கள்



வை.புஷ்பாதேவி (இரண்டு பதக்கங்கள்)


ஆர். நிமலேந்திரா


வி. ஹரிகரன்


ஆர். தர்சிகா


பி. நிஷாந்தன்


சி.ஜெனோஜன்


எம்.ரஜீதன்

யாழ்ப்பாணம், செப்.22
அகில இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் 7 ஆவது தேசிய செஞ்சிலுவைச் சங்க விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளும் கடந்த வாரம் கண்டி போகம்பரை மைதானத்தில் நடைபெற்று நிறைவடைந்துள்ளன.

இறுதி மெய்வன்மைப் போட்டி நிகழ்வுகளில் வட மாகாணத்துக்கு இரண்டு தங்கம், இரண்டு வெள்ளி மற்றும் நான்கு வெண்கலமும் என எட்டுப்பதக்கங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இலங்கையின் இருபத்தைந்து மாவட்டங்களுக்கிடையில் நடைபெற்ற இந்தப் போட்டியில் இரண்டு தங்கம், ஒரு வெள்ளி மற்றும் மூன்று வெண்கலப் பதக்கங்கள் அடங்கலாக மொத்தம் ஆறு பதக்கங்களை வென்ற வவுனியா மாவட்டம் மாவட்டங்கள் ரீதியில் எட்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டதுடன், வட மாகாணத்துக்கும் பெருமை சேர்த்துள்ளது.

இந்தப் போட்டிகளில் பதக்கங்களை வென்றெடுத்த வீரர்களின் விவரம்;

**வை.புஸ்பாதேவி**
**(வவுனியா)**
23 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு, 100 மீற் றர் தடைதாண்டல்- தங்கம்- 2.3 செக்கன், தட்டெறிதல்- வெண்கலம்- 23.02 மீற்றர்.

**ஆர். நிமலேந்திரா**
**(வவுனியா)**
20 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு, குண்டெறிதல்- தங்கம் -12.76 மீற்றர்.

**வி.ஹரிகரன்**
**(யாழ்ப்பாணம்)**
23 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு, தட்டெறிதல்- வெள்ளி - 36.93மீற்றர்.

**ஆர்.தர்சிகா**
**(வவுனியா)**
18 வயதுக் குட்பட்ட பெண்கள் பிரிவு, குண்டெறிதல், வெள்ளி - 9.30 மீற்றர்.

**பி.நிஷாந்தன்**
**(வவுனியா)**
23 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு, 800 மீற்றர் ஓட்டம்- வெண்கலம்- 2நிமிடம் 3 செக்கன்.

**சி.ஜெனோஜன்**
**(வவுனியா)**
16 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு, குண்டெறிதல்- 11.73மீற்றர்.

**எம்.ரஜீதன்**
**(கிளிநொச்சி)**
23 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு, நீளம்பாய்தல் - 6.31 மீற்றர்.

இந்த வெற்றியாளர்களில் வி.ஹரிகரன் மற்றும் எம்.ரஜீதன் ஆகிய வீரர்களுக்கான பயிற்றுவிப்பாளராக கிளிநொச்சி மாவட்ட மெய்வன்மைப் பயிற்றுனர் என்.முகுந்தன் கடமையாற்றி வருகின்றார்.

ஏனைய வெற்றிபெற்ற வீர, வீராங்கனைகளுக்கு வவுனியா மாவட்ட மெய்வன்மை பயிற்றுநர் கே.விஜிதரன் கடமையாற்றி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

(ம-23)

# சனி, ஞாயிறு இடம் பெறும் காலிறுதி ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், செப்.22
கொக்குவில் மத்திய சன சமூக நிலையத்தின் விளையாட்டுக் கழகத்தின் வெள்ளி விழாவை முன்னிட்டு யாழ். மாவட்ட கிரிக்கெட் கழகங்களுக்கு இடையே நடத்தும் 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் கால் இறுதியாட்டங்கள் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன. ஆட்டங்களில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு.

**சனிக்கிழமை:-** காலை 8.30 மணி- கொக்குவில் மத்திய சன சமூக நிலைய விளையாட்டுக் கழக அணி எதிர் யாழ். சென்றல் விளையாட்டுக் கழக அணி.

பிற்பகல் ஒரு மணி- யாழ்.பல்கலைக்கழக அணி எதிர் மானிப்பாய் பரீஸ் விளையாட்டுக் கழகம்.

**ஞாயிற்றுக்கிழமை:-** காலை 8.30 மணிக்கு- ஸ்காந்தஸ்ரார் விளையாட்டுக் கழகம் எதிர் வல்வெட்டித்துறை ஈ.கிள் விளையாட்டுக் கழகம்.

பிற்பகல் ஒரு மணி- ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் எதிர் சிறிகாமாட்சி விளையாட்டுக் கழகம். (ம-23)

# சென்றல் விளையாட்டுக் கழகம் இரண்டு விக்கெட்டுக்களால் வெற்றி

யாழ்ப்பாணம், செப்.22
யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவை நடத்தும் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற ஆட்டம் ஒன்றில் யாழ். சென்றல் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் யாழ். சென்றல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வல்வெட்டித்துறை ஈ.கிள் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய வல்வெட்டித்துறை ஈகிள்ஸ் விளையாட்டுக் கழக அணி 33.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ராஜ்குமார் 29 ஓட்டங்களையும் ரவிராஜ் 24 ஓட்டங்களையும் தமது அணிசார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் சென்றல் விளையாட்டுக் கழக அணிசார்பாக விமலகாந் 3 விக்கெட்டுகளையும் ராஜீவ்குமார் 3 விக்கெட்டுகளையும் பாலேந்திரா 2 விக்கெட்டுகளையும் சுபாதிஸ் ஒரு விக்கெட்டையும் பெற்றனர்.

127 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். சென்றல் விளையாட்டுக் கழக அணி 27.3 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகளை இழந்து 129 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

றொகான் 35 ஓட்டங்களையும் ராஜீவ்குமார் 24 ஓட்டங்களையும் தமது அணிசார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் வல்வெட்டித்துறை ஈகிள்ஸ் விளையாட்டுக் கழக அணிசார்பாக நிருசாந், கோகுலன், ரவிராஜ், சேயோன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

யாழ்.சென்றல் விளையாட்டுக் கழக அணி 2 விக்கெட்டுகளால் இதில் வெற்றி கொண்டது. (ம-23)

# இலுப்பக்கடவையை வென்றது நாச்சிக்குடா

யாழ்ப்பாணம், செப்.22.
பூநகரிப் பிரதேச கிராஞ்சி சிறிமுருகன் கடற்தொழில் கூட்டுறவுச் சங்கம் நடத்திய 11 பேர் பங்கு கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் கடந்த சனிக்கிழமை கிரஞ்சி செந்தாரகை விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

இதில் நாச்சிக்குடா சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இலுப்பைக் கடவை அந்தோனியார்புர விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. ஆட்டம் தொடங்கியது முதல் இரண்டு அணியினரும் மிகுந்த உற்சாகத்தோடு விளையாடினர்.

இரண்டு அணியினரும் கோல் பெறும் நோக்கோடு எதிர் அணியினரின் கோல் பரப்பை முற்றுகையிட்டனர்.

கள வீரர்களால் அது தடுக்கப்பட்டது. ஆட்ட முடிவில் இரு அணியினரும் தலா ஒரு கோலை பெற்றதால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் நாச்சிக் குடா சென். மேரிஸ் விளையாட்டுக்கழகம் 5:4 என்ற கோல் கணக்கில் இலுப்பைக் கடவை அந்தோனியார்புர விளையாட்டுக் கழகத்தை வெற்றி கொண்டது.

இதன் இறுதி நிகழ்வுகளில் பிரதமவிருந்தினராக நாச்சிக்குடா பொலிஸ் அதிகாரி [illegible] சஞ்ஜீவ் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக கிரஞ்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் ஐ.கேசவன், கிரஞ்சி கிராமசேவையாளர் என்.நாகலிங்கம், இராணுவப் பொறுப்பதிகாரி மேஜர். ஜெயசிங்க, பூநகரிப் பிரதேச செயலக விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் கே.பிரபாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இப்போட்டியில் 16 கழகங்கள் பங்குபற்றின. போட்டிகளை பூநகரிப்பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் கே.பிரபாகரன் நெறிப்படுத்தினார். (ம-23)

# இன்றைய தாச்சிப் போட்டி

யாழ்ப்பாணம்செப்.22
கைதடி மத்தி வளர்மதி விளையாட்டுக்கழகம் மின் ஒளியில் தென்மராட்சி ரீதியாக நடத்தி வரும் தாச்சிச்சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கைதடி குமர நகர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவற்குழி சரஸ்வதி விளையாட்டு கழக அணிமோதும். (ம-288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி விலகினார் ஆஸியின் பயிற்றுநர்

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் பயிற்றுநர் ரிம் நீல்சன் அந்தப் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

இலங்கை, ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையி லான 3 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பில் முடிவுற்ற பின்னர் ரிம் நீல்சன் இந்த அறிவிப்பை விடுத்தார்.

43 வயதான நீல்சன், 2007 ஆம் ஆண்டு ஜோன் புச்சானனுக்குப் பின்னர் ஆஸ்திரேலிய அணியின் பயிற்றுநராக பதவியேற்றவர். அவருக்கு ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபையினால் மற்றொரு சிரேஷ்ட பதவி வழங்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை நீல்சனின் விலகலையடுத்து தென்னாபிரிக்க சுற்றுலாவுக்கான ஆஸ்திரேலிய அணிக்கு இடைக்கால பயிற்றுநர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளார். தற்போதைய உதவிப் பயிற்றுநர்களான ஜஸ் டின் லாங்கர், ஸ்டீவ் றிக்ஸன் ஆகியோரில் ஒருவர் இந்தப் பதவியைப் பெறுவதற்கு அதிக வாய்ப்புள்ளது. (15)

ஐ.பி.எல்

## கொச்சி அணி நீக்கம்

விதிகளை மீறிய கொச்சி டஸ்கர்ஸ் கேரளா அணி, ஐ.பி.எல் அமைப்பில் இருந்து அதிரடியாக நீக்கப்பட்டது. இதையடுத்து ஐ.பி.எல். அணிகளின் எண்ணிக்கை ஒன்பதாகக் குறைந்தது.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப்பில் கடந்த ஆண்டு சேர்ந்தது கொச்சி டஸ்கர்ஸ் கேரளா. இந்திய மதிப்பில் ரூ 1,550 கோடிக்கு வாங்கப்பட்டது கொச்சி அணி, இந்தத் தொகையை 10 ஆண்டுகளில் செலுத்த வேண்டும் என்பது விதி.

இந்த நிலையில் இந்த ஆண்டு தர வேண்டிய தொகையை, கொச்சி அணியினர் இன்னும் கொடுக்காமல் இழுத்தடித்து வந்தனர். இதையடுத்து கொச்சி அணி, ஐ.பி.எல் அமைப்பில் இருந்து அதிரடியாக நீக்கப்பட்டது. இதையடுத்து ஐ.பி.எல் அணிகளின் எண்ணிக்கை ஒன்பதாகக் குறைந்தது.

இதுகுறித்து பி.சி.சி.ஐ தலைவர் சீனிவாசன் கூறியதாவது:

வழக்கமாக செலுத்த வேண்டியதொகையை கொடுக்காமல், கொச்சி நிர்வாகிகள் விதிகளை மீறி செயல்பட்டனர். சரி செய்ய முடியாத அளவுக்கு விதிகளை மீறியுள்ளனர். இதனால், கொச்சி அணியின் உரிமம் ரத்து செய்யப்படுகிறது. மீண்டும் இவர்களுக்கு வாய்ப்பு கொடுப்பது என்ற பேச்சிற்கே இடமில்லை. இதையடுத்து அவர்கள் ஏற்கனவே செலுத்தி இருந்த வங்கி உத்தரவாத தொகையை, இழப்பீடாக பி.சி.சி.ஐ எடுத்துக்கொள்கிறது.

கொச்சி அணிக்குப் பதிலாக புதிய அணியை சேர்ப்பது, இதற்காக புதியதாக ஏலம் நடத்துவது உட்பட எவ்வித முடிவும், ராஜிவ் சுக்லா தலைமையிலான ஐ.பி.எல் கட்டுப்பாட்டுக்குழு முடிவு செய்யும் - என்றார்.

பி.சி.சி.ஐயின் இந்த முடிவுக்கு கொச்சி அணி எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இது குறித்து அந்த அணியின் இயக்குநர் முகேஷ் பட்டேல் கூறுகையில், பி.சி.சி. ஐக்கு நாங்கள் எந்த மீதியும் கொடுக்க வேண்டியது இல்லை. ஆண்டு வருவாயில் ரூ. 12 முதல் 15 கோடிவரை அவர்கள் தான் அடுத்த மாதம் எங்களுக்கு தரவேண்டி உள்ளது. இதை எதிர்த்து நாங்கள் நீதிமன்றில் முறையிடுவோம் - என்றார். (15)

# ஆட்டத்தில் தேவை மாற்றம்

நவீன காலத்துக்கு ஏற்ப ஒரு நாள் போட்டியை மாற்றியமைக்க வேண்டும் என்று சச்சின் டெண்டுல்கர் ஐ.சி.சியின் தலைமைச் செயல் அதிகாரி ஹாரூன் லோர்கட்டுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது:

இப்போது நடைமுறையில் உள்ள ஓர் இன்னிங்ஸிக்கு 50 ஓவர்கள் என்பதை மாற்றி ஓர் இன்னிங்ஸிக்கு 25 ஓவர்கள் என்று மொத்தம் 4 இன்னிங்ஸ்களைக் கொண்டதாக ஒரு நாள் போட்டி இருக்க வேண்டும். டெஸ்ட் போட்டியைப் போல ஒவ்வொரு அணியும் மாறி, மாறி இரண்டு முறை துடுப்பெடுத்தாட வேண்டும். அவ்வாறு மாற்றம் கொண்டு வரும்போது காலநிலைகளும், நாணய சுழற்சியும் ஆட்டத்தின் வெற்றியைத் தீர்மானிக்க முடியாத சுழல் ஏற்படும். ஆட்டத்தின் முடிவு இரு அணிகளுக்கும் சமமான அளவிலேயே இருக்கும்.

இதேபோல் விருப்ப 'பவர் பிளேயிலும்' மாற்றம் கொண்டு வரவேண்டும். 25 ஓவர் இன்னிங்ஸில் துடுப்பாட்ட அணிக்கு 2 பவர் பிளேக்கள் மட்டுமே வழங்க வேண்டும். இப்போது ஒரு பந்துவீச்சாளர் 10 ஓவர் வரை மட்டுமே பந்துவீச முடியும் என்ற நிலை உள்ளது. இதை மாற்றி 4 பந்துவீச்சாளர்களை 12 ஓவர்கள் வரை வீச அனுமதிக்க வேண்டும்.

இந்த வருடம் இடம் பெற்ற உலகக் கிண்ணத்தில் இந்தியா-இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் இந்தியா 338 ஓட்டங்கள் குவித்தபோதும், பின்னர் ஆடிய இங்கிலாந்து 338 ஓட்டங்கள் எடுத்து அந்த ஆட்டத்தை சமநிலையில் முடித்தது. மற்றொரு ஆட்டத்தில் கத்துக்குட்டி அணியான அயர்லாந்து இங்கிலாந்தை வீழ்த்தியது. இதற்குக் காரணம் 2 போட்டிகளும் நடைபெற்ற பெங்களூர் மைதானத்தில் நிலவிய கடும் பனிப்பொழிவுதான்.

இங்கிலாந்தில் நடைபெறக்கூடிய கவுன்டி போட்டிகளின் இறுதி ஆட்டங்களில் இரண்டு இன்னிங்ஸ்கள் விளையாடப்படுகின்றன. முதலில் களத்தடுப்பு செய்பவர்களுக்கு சாதகமாக போட்டி அமையக்கூடிய சுழல் ஏற்படும்போது இவ்வாறு 4 இன்னிங்ஸ்கள் விளையாடப்படுகின்றன. லோர்ட்ஸ் மைதானத்தில் மழைநீர் வெளியேறும் வகையில் கால்வாய்களும், மைதானத்தை உலரச் செய்யும் கருவிகளும் உள்ளன. ஆனால் இதுபோன்ற வசதிகள் மற்ற இடங்களில் கிடையாது.

ஆஸ்திரேலியாவில் கடந்த குளிர்காலத்தில் நடைபெற்ற மாநிலங்களுக்கு இடையிலான 45 ஓவர் கிரிக்கெட் போட்டியில் முதலில் இரு அணிகளும் தலா 20 ஓவர் துடுப்பெடுத்தாடின, அதன் பிறகு 25 ஓவர்கள் விளையாடின. ஆஸ்திரேலியா கிரிக்கெட் சபையால் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த முறைக்கு நல்ல வெற்றி கிடைத்தது.

இந்த ஆட்டங்களில் நிறைய ஓட்டங்கள் குவிக்கப்பட்டதோடு, நிறைய விக்கெட்டுகளும் வீழ்த்தப்பட்டன. போட்டியை பார்த்து ரசித்தவர்களின் எண்ணிக்கையும் கணிசமாக அதிகரித்தது. இந்த முறைகள் கொண்டு வரப்பட்டால் ஒரு நாள் போட்டியில் உள்ள மந்தமான நிலை, ஆட்டத்தின் பாதியிலேயே இந்த அணி வெற்றி பெறும் என்று கணிப்பது போன்ற சூழல் ஏற்படாமல் போட்டியின் விறுவிறுப்பு அதிகரிக்கும் என்று சச்சின் தெரிவித்துள்ளதாக இங்கிலாந்தின் 'த ரைம்ஸ்' பத்திரிகையில் வெளியான செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (15)



நவீன காலத்துக்கு ஏற்ப ஒரு நாள் போட்டியை மாற்றியமைக்க வேண்டும் என்று சச்சின் டெண்டுல்கர் ஐ.சி.சியின் தலைமைச் செயல் அதிகாரி ஹாரூன் லோர்கட்டுக்கு கடிதம் எழுதியுள்ளார்

## பாகிஸ்தான் தொடருக்கான இலங்கை அணி

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் பாகிஸ்தான் அணியுடன் இடம் பெறவுள்ள டெஸ்ட் கிர்க்கெட் தொடரில் பங்கேற்கவுள்ள இலங்கை அணி விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை டெஸ்ட் அணியில் திலான் சமரவீர மற்றும் அஜந்த மெண்டிஸ் ஆகியோர் இடம்பிடிக்கவில்லை. அணி வீரர்கள் விவரம் வருமாறு:-

திலகரட்ண டில்ஷான் - தலைவர், அஞ்சலோ மத்தியூஸ் - உப தலைவர், தரங்க பரணவித்தாரன, லஹிரு திரிமன்னே, குமார் சங்ககார, மஹேல ஜயவர்த்தன, பிரசன்ன ஜெயவர்த்தன - விக்கெட் காப்பாளர், தினேஷ் சந்திமால், ரங்கன ஹேரத், சுராஜ் ரந்திவ், சானக வெலகெதர, சுரங்க லக்மால், சமிந்த எரங்க, தம்மிக்க பிரஷாத், நுவான் பிரதீப், கௌஷல் சில்வா

இலங்கை பாகிஸ்தான் அணிகள் மோதும் மூன்று டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடர் ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ளது. (15)

# டோனிக்கு நிகரானவர் கம்பீர்



இப்படிக் கூறுகிறார் பாலாஜி



அணியை வழிநடத்திச் செல்வதில் அணித் தலைவர் டோனிக்கு நிகரானவர் கம்பிர், என்று கொல்கத்தா அணி வீரர் பாலாஜி தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் வேகப்பந்துவீச்சாளர் பாலாஜி. இவர், ஐ.பி.எல். தொடரில் முதலில் டோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக விளையாடினார். பின்னர் கம்பிர் வழிநடத்திய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்காக விளையாடினார். இந்த முறை காயம் காரணமாக கம்பிர் விலக, கொல்கத்தா அணிக்கு தலைவராக கலிஸ் உள்ளார்.

நேற்று முன்தினம் நடந்த சம்பியன்ஸ் லீக் தகுதிச் சுற்றுப் போட்டியில் கொல்கத்தா அணி, ஆக்லாந்து அணியை வீழ்த்தியது. இந்த மகிழ்ச்சியில் பாலாஜி கூறியதாவது:

சம்பியன்ஸ் லீக் தகுதிச் சுற்றுப் போட்டிக்கு கொல்கத்தா அணி முன்னேறியதற்கு கம்பீரின் சிறப்பான தலைமைப் பண்புதான் காரணம். அணியை சிறப்பான முறையில் வழி நடத்திச் சென்றார். தலைமைப்பண்பில் இந்திய அணித்தலைவர் டோனிக்கு நிகரானவர். பதட்டமான சூழ்நிலையை நேர்த்தியான முறையில் கையாண்டு வெற்றி காண்பதில் வல்லவர்.

வீரர்களை சரியான முறையில் களத்தடுப்பில் நிறுத்தி எதிரணியினருக்கு நெருக்கடி கொடுப்பார். கொல்கத்தா அணியின் பந்து வீச்சு பயிற்சியாளராக வசிம் அக்ரம் இருப்பது சாதிப்பதற்கு உதவியாக உள்ளது. இந்தத் தொடரில் சிறப்பான பந்துவீச்சை வெளிப்படுத்த முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. கலிஸ் மற்றும் பிரட் லீ ஆகியோர் இருப்பதால் இவர்களின் அனுபவமும் கை கொடுக்கும் என்று எதிர்பார்க்கிறேன். தகுதிச் சுற்றுப் போட்டி என்பது கடவுள் எங்களுக்கு அளித்த அரிய வாய்ப்பாக பார்க்கிறோம்.

சென்னை அணியில் இருந்து மாறி, கொல்கத்தாவுக்காக விளையாடுவதில் எவ்வித பிரச்சினையும் இல்லை. இது போன்ற சூழ்நிலையை தொழில்ரீதியான கிரிக்கெட் வீரர்கள் சந்திப்பது சகஜம் தான். எந்த அணிக்காக விளையாடினாலும் நூறு சதவீத திறமையை வெளிப்படுத்த வேண்டும்.

இவ்வாறு பாலாஜி கூறினார். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரயில் வேகத்தை ஒரு....

சபைக்கு வெளியே ஆங்காங்கே இருந்த ஆளும்கட்சி உறுப்பினர்கள் முண்டியடித்துக் கொண்டு சபைக்குள் பிரவேசித்தனர்.

வந்ததும் வராததுமாக ரவி கருணாநாயக்க மீது துள்ளிப் பாய்ந்தனர் ஆளும்கட்சி உறுப்பினர்கள். குறிப்பாக அமைச்சர் கீதாஞ்சன குணவர்தனவும் பிரதி சுகாதார அமைச்சர் சாலிய திஸாநாயக்கவும் ரவியை பேச விடாமல் குறுக்கீடு செய்து கொண்டே இருந்தனர். பார்வையாளர் கலரியில் இருந்த பாடசாலை மாணவர்களுக்கு இது ஒரு சுவாரஸ்யமான காட்சியாக இருந்தது.

**கே.பி. என்ற பெயர் கேட்டவுடன் அதிர்ச்சியடையும் ஆளும் கட்சி உறுப்பினர்கள்**

இந்தச் சந்தர்ப்பத்தில் குழுக்களின் பிரதித் தலைவர் முருகேசு சந்திரகுமார் சபைக்கு தலைமை தாங்கியிருந்தார்.

''ஐயா! இந்த ஆளும்கட்சி உறுப்பினர்கள் கே.பி. என்ற பெயரைக் கேட்டவுடன் ஏன் இப்படி துள்ளிக் குதிக்கின்றனரோ தெரியவில்லை. கே.பி. யிடம் இருந்து 19 கப்பல்களைச் கைப்பற்றி உள்ளோம் என்றனர். பல ஆயிரம் கோடி சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளது என்று இந்த சபையில் கூறினார்கள். இவை எல்

(02 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லாம் எங்கே? அம்பாந்தோட்டைத் துறை முகம் ஒரு வெள்ளை யானை. அங்கே ஏற்படும் நட்டத்தை கொழும்புதுறைமுகத்தில் கிடைக்கும் இலாபத்தினால் ஈடுசெய்யப்படுகின்றது. ஏன் ஐயா இந்த கே.பி.யிடம் பிடித்த 19 கப்பல்களையாவது அம்பாந்தோட்டையில் கொண்டு வந்து காட்சிக்கு வைக்கக் கூடாது?'' என்று கிண்டல் அடித்தார் ரவி கருணாநாயக்க.

**இரண்டு கொள்கலன்களில் 5,800 கோடி பெறுமதியான தங்கம்**

''முன்னாள் படைத் தளபதிகளுள் ஒருவரும் ஐ.நா.வின் இலங்கையின் வதிவிடப் பிரதிநிதியுமான சவேந்திரசில்வா புலிகளிடமிருந்து இரண்டு கொள்கலன்களில் 5,800 கோடி பெறுமதியான தங்கம் கைப்பற் றப்பட்டதாகக் கூறினார். இந்த தங்கமும் சொத்துகளும் எங்கே? என்று ரவி கேட்டபோது ஆளும் கட்சி உறுப்பினர்கள் சபையில் பெரும் ஆரவாரம் செய்தனர். எவர் எதைப் பேசுகின்றார் என்று கேட்க முடியாத அளவிற்குசத்தம்இட்டனர்.

''இந்தப் பணத்தை எல்லாம் வைத்துக் கொண்டுதான் இப்பொழுது தேர்தல்களை நடத்துகின்றீர்களா? என்று அவர் கேள்வி எழுப்பியபோது சபையே இரண்டுபட்டுவிடும் அளவுக்கு ஆளும் தரப்பினர் சத்தமிட்டனர் என்பதும் குறிப்பிட்டுக் காட்டப்படவேண்டிய ஒன்று.

**கே.பி. அலரி மாளிகையிலா?**

ஜே.வி.பி. உறுப்பினரான சுனில் ஹந்துன்நெத்தி இன்னுமொரு விடயத்தைக் கிண்டினார். ''நிதி அமைச்சின் புலனாய்வுப் பிரிவினருக்கு கூடு தலான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதனை உரிய முறையில் செயல்படுத்த வேண்டும். சர்வதேச பயங்கரவாதி யான கே.பி. என்று அழைக்கப்படும் குமரன் பத்மநாதன் அரசின் விசேட விருந்தினராக இருக்கின்றார்.

விசும்பாய? செஸ்திரிபாய? இசுருபாய மற்றும் செவ்திரிபாய என இருக்கின்றன. இவற் றில் கே.பி. எங்கே இருக் கின்றார். அல்லது அலரி மாளிகையில் இருக்கின்றாரா?

அவரைத் தேடிக் கண்டு பிடித்து கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும். அப்போதுதான் இந்த சட்டத்திருத்தத்தின் உண்மைத் தன்மையை உலகுக்கு உணர்த்த முடியும்" என்றார் சுனில் ஹந்துன்நெத்தி.

நாடாளுமன்றத்தில் நேற்று நிதிதொடர்பான சட்டவரைவுகள் தொடர்பான விவாதம் இடம் பெற்ற போதும் பெரும்பாலும் கே.பி. தொடர்பாகவே விமர்சிக்கப்பட்டன.

## மாதாந்த உதவிப்பணம் பெறுவோர் உடன் பதிவை மேற்கொள்க

தென்மராட்சி, செப்.22

தென்மராட்சி பிரதேசத்தில் கடந்த மாதம் மேற்கொள்ளப்பட்ட பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோருக்கான மீளாய்வுப் பணியின் போது பெயர்களைப் பதிவு செய்யாத பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோரின் பதிவுகள் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அண்மையில் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட எழுது மட்டுவாழ் தெற்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த உதவிப் பணம் பெறுவோரும் மீளாய்வின்போது பதிவை மேற்கொள்ளாதவர்களும் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-207)

## அதிபர்கள், ஆசிரியரின் சம்பள நிலுவைகள் வழங்கப்பட்டன

தென்மராட்சி, செப்.22

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்கள், ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சம்பள நிலுவைத் தொகைகள் அனைத்தும் வழங்கங்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நிதியின்மையால் கடந்த 2009 நவம்பர் தொடக்கம் 2011 ஆகஸ்ட் மாதம் வரையில் பதவியுயர்வு மற்றும் சம்பள மீளாய்வு போன்றவற்றுக்கு வழங்கப்படாதிருந்த நிலுவைகளே வழங்கப்பட்டுள்ளது.

அதிபர்கள், ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகையை வழங்கவென மாகாணத் திறைசேரியினர் 120 மில்லியன் ரூபாவை சகல கல்வி வலயங்களுக்கும் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-207)

## மரண அறிவித்தல்கள்

### இளையதம்பி வீரவாகு

(முன்னாள் விற்பனையாளர், சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்)



குப்பிளானைப் பிறப்பிடமாகவும், கல்வியங்காட்டை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி வீரவாகு (21.09.2011) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி – தெய்வானை தம்பதியரின் இளைய மகனும் காலஞ்சென்ற கந்தையா – தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற ஞானமணியின் அன்புக் கணவரும் ஞானராஜா (கனடா), கிருஷ்ணராஜா (ஆசிரியர், யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி), கிருஷ்ணராஜா (கனடா), செந்தில்கௌரி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வரஜி (கனடா), றஞ்சித்குமார் (கனடா), முரளிதரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் வினுசிகா (கனடா), ஐனோபா (கனடா), மதுரன் (கனடா), மாறன் (கனடா), அதிஷ் (கனடா), அதுசன் (கனடா), அஸ்வின் (கனடா), கயல்விழி (கனடா), கனிமொழி (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் நல்லபிள்ளை, காலஞ்சென்ற சண்முகம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.09.2011) வியாழக் கிழமை பி.ப.2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**வீ.கிருஷ்ணராஜா** (குகன்), மகன்.

விளையாட்டரங்கு வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

### அருளம்பலம் இந்துதாசன்

(அகில இலங்கை, யாழ் மாவட்டம், தாவடி 18ம் படி குருசாமி)



குரும்பசிட்டி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் தாவடி தெற்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட அருளம்பலம் இந்துதாசன் நேற்று (21.09.2011) புதன்கிழமை இறைபதம் எய்தினார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மானிப்பாய் வீதி,*
*தாவடி தெற்கு.*

*தகவல்:*
**மனைவி, பிள்ளைகள்.**

**தேவை**

யாழ்.நகரை அண்மித்த பகுதிகளில் அலுவலகம் நடத்துவதற்கு சிறிய இடம் தேவை.

**தொடர்புகளுக்கு: 0773663986**

**காணவில்லை**

பண்டாரக்குளம் ஸ்ரீ கௌரி அம்பாள் ஆலயத்துக்குச் சொந்தமான நேர்ந்து விடப்பட்ட காமாட்சி என்னும் பசுவைக் காணவில்லை. கண்டுபிடித்துக் கொடுப்பவர்களுக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

– நிர்வாகம்.

**தொடர்பு: 0758055958**

**வேலையாள்கள் தேவை**

எரிபொருள் நிலையத்துக்கு ஆளணி தேவை. கைதடியில் இயங்கும் தனியார் எரிபொருள் நிலையத்துக்கு நிர்வகிக்கக் கூடிய ஆள் தேவை. கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும்.

**மே/பா. உதயன் - 4175**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**இயந்திர இயக்குநர் தேவை**

திருமலையில் இயங்கும் ஒரு பிரபல அச்சகத்துக்கு Rayobi - 500K (A3 Paper size) இயந்திரத்தில் பணிபுரிவதற்கு அனுபவமுள்ள இயந்திர இயக்குநர் தேவை. தங்குமிட வசதியும் கவர்ச்சிகரமான சம்பளமும் வழங்கப்படும். **உடன் தொடர்புகளுக்கு:**

**071-4150302, 071-4273035**

**வெளிவந்துவிட்டது**

**தீபாவளி வாழ்த்து மடல்கள்**

**இலங்கையின் பிரபல வெளியீடுகளான**

SEEVAM - Greeting
ROYAL - Greeting
UNI LANKA - Greeting

**நான்கு வெளியீட்டுப் பிரிவுகளில் இருந்து போஸ்ட் காட், மடிப்புக் காட், கட்டிங் காட் ஏராளமான வகைகள் - சுவாமி, சினிமா.**

வியாபாரிகளுக்கு விசேட கழிவு என்றும்போல் வழங்கப்படும்.

**அன்னை புத்தகசாலை**
யாழ்ப்பாணம். தொ.பே.: 021 222 9881

## வலி.வடக்கு பிரதேச சபை

காங்கேசன்துறை, மல்லாகம்.

### வேலைக்கான கேள்வி அறிவித்தல் - 2011

PSDG - 2011 (சுற்றுலாத்துறை) நிதி மூலம் மேற்கொள்ளப்படும் கீழ்வரும் வேலைக்கான கேள்வி வலி.வடக்கு பிரதேச சபையினால் கோரப்படுகிறது. கீழ்க் குறித்த வேலைக்கான கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்திப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

- கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி: **22.09.2011 தொடக்கம் 03.10.2011 பி.ப. 4 மணிவரை**
- கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி: **04.10.2011 நண்பகல் 12 மணிவரை.**
- கேள்வி திறக்கப்படும் திகதி: **04.10.2011 பி.ப. 1.30 மணிக்கு**

கேள்விகள் குறிப்பிட்ட காலப்பகுதியில் கிடைக்கக் கூடியவாறு இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை ***"தவிசாளர், வலி.வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை, (மல்லாகம்)"*** என்ற விலாசத்துக்குப் பதிவுத் தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப் பெட்டியிலோ இடவேண்டும். மறுபிரதியை ***"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்."*** என்ற விலாசத்துக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் எழுதப்பட வேண்டும்.

1. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு உரிமை உண்டு.
2. இக்ராட் (ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பெறுப்பேற்பவர் போதிய கணியவியலாற்றலையும், (SLS : 573 : 1982 ) நியம அளவீட்டு முறையையும் அறிந்திருத்தல் வேண்டும்.
3. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தக்காரர் வலுவிலுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
4. மேலதிக விவரங்களை வலி.வடக்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் (VAT, NBT உள்ளடங்கலாக) | இருக்க வேண்டிய ஆகக் குறைந்த ICTAD தரம் |
|---|---|---|---|---|
| 1. | கீரிமலையில் நீர்த்தாங்கி அமைத்தல் | 18,000.00 | 570.00 | C 9 |
| 2. | கீரிமலையில் மலசலகூடத் தொகுதி அமைத்தல் | 27,000.00 | 570.00 | C 9 |
| 3. | கீரிமலையில் கிணறு அமைத்தல் | 6,000.00 | 570.00 | C 9 |
| 4. | கீரிமலையில் பெண்கள் கேணி தொடக்கம் மலசலகூடம் வரை பிரிப்புச்சுவர் அமைத்தல் | 1,000.00 | 570.00 | C 9 |
| 5. | கீரிமலை புனித பூமியில் உள்வீதி அமைத்தல் | 10,000.00 | 570.00 | C 9 |

வலி.வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை,
22.09.2011

**திரு. சோமசுந்தரம் சுகிர்தன்**
தவிசாளர்,
வலி.வடக்கு பிரதேச சபை.

## மரண அறிவித்தல்

### கிருஸ்ணசாமி இராசம்மா

மீசாலை கிழக்கு, மீசாலையைச் சேர்ந்த கிருஸ்ண சாமி இராசம்மா நேற்று (21.09.2011) புதன் கிழமை காலமானார்.

அன்னார் பொன்னையா கிருஸ்ணசாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பாலசுந்தரம் மற்றும் இராசேந்திரம், யோகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் செல்வராணி, செல்வராசா (சுவிஸ்), பேரின்பநாதன் ஆனந்தராணி (பிரான்ஸ்), கணேசமூர்த்தி (பிரான்ஸ்), காலஞ்சென்ற இராமச்சந்திரன் மற்றும் தேவநாயகி (ஹொலன்ட்), மதிவதனி, உதயச்சந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற ஏரம்பமூர்த்தி (அதிபர்), சிவகுமாரி (ஆசிரியை, வரணி மகா வித்தியாலயம்), பாஸ்கரன் (பிரான்ஸ்), சுதாயினி (பிரான்ஸ்), நகுலநாதன் (ஹொலன்ட்), குகதாசன் (ஆசிரியர், முரசுமோட்டை), சிவமலர் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (22.09.2011) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று, அல்லாரை கொற்புரவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**பொன்னையா கிருஸ்ணசாமி** (கணவர்), **நாதன்** (மகன்).

மீசாலை கிழக்கு,
மீசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எல்லைத் தகராற்றில் நால்வர் காயம்

யாழ்ப்பாணம், செப். 22

தொல்புரம் மத்தியில் எல்லைத் தகராறு காரணமாக தமக்கிடையே கத்தியால் வெட்டிக் கொண்ட நால்வர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த இ.ஜெகதீஸ்வரன் (வயது 32), ம.புவனேஸ்வரி (வயது 55), ம.தவநாதன் (வயது 32), ம.முத்துக்குமார் (வயது 35) ஆகிய நால்வரும் வெட்டுக் காயங்களுக்கு இலக்காகியுள்ளனர். இவர்கள் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (எ-10)

## ஈழத் தமிழரை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று ஒரு மனிதன் அச்சப்படும்போது அவரை நாடுகடத்த முடியாது என்று நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

போலிக் கடவுச் சீட்டில் நாட்டைவிட்டு வெளியேறி மேற்கு நாடு ஒன்றுக்குச் செல்ல முயன்றார் என்று சந்திரகுமார் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. கிளிநொச்சியைச் சேர்ந்த அவர் 2010ஆம் ஆண்டு இத்தாலிக்குச் செல்ல முயல்கையில் கைது செய்யப்பட்டிருந்தார்.

வழக்கு விசாரணையில் அவர் குற்றவாளியாக இருந்தபோதும் எந்த ஓர் அகதியையும் வலுக்கட்டாயமாகத் திருப்பி அனுப்ப முடியாது என்று நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளது.

''அகதிகளை வரவேற்பதில் நாம் (இந்தியா) மிகச் சிறந்த வரலாற்றைக் கொண்டிருந்தபோதும் அவர்களின் நலன்களைக் கவனிப்பதில் போதிய அக்கறை எடுத்துக்கொள்ளாத நிலையே இருக்கின்றது'' என்று நீதிவான் அருள் வர்மா தனது தீர்ப்பில் தெரிவித்தார்.

சந்திரகுமார் ஏற்கனவே சிறையில் அடைக்கப்பட்டிருந்ததனால் அவருக்கு மேலதிக சிறைத் தண்டனை எதனையும் விதிக்காமல் விடுதலை செய்தார் நீதிவான். அத்துடன் அகதிகளை வலுக்கட்டாயமாகத் திருப்பி அனுப்பக்கூடாது என்று கோரும் 2006 ஆம் ஆண்டு பிரேரணையை விரைவில் சட்டமாக்குமாறும் நீதிவான் அரசுக்குப் பரிந்துரைத்துள்ளார்.

தன்னைவெளிநாட்டுக்குஅனுப்பிவைத்த பயண முகவர், தனக்கான அனைத்து ஆவணங்களும் இந்தியச் சட்டதிட்டங்களுக்கு அமைவாகவே மேற்கொள்ளப்பட்டன என்று உறுதியளித்திருந்தார் என்று சந்திரகுமார் நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தார். (உ)

## தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெயர் குறிப்பிட விரும்பாத ஜே.வி.பியின் மூத்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் நேற்று இதனைத் தெரிவித்தார். கட்சி இரண்டாகப் பிளவுபடுவது பற்றிக் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

கட்சியின் கட்டமைப்பு குறித்தான பிரச்சினைதான் ஏற்பட்டிருக்கின்றது. தமிழர் பிரச்சினையைப் பேசுவதோ அல்லது அது தொடர்பான விடயத்திலோ எமக்குள் எந்தச் சிக்கலும் இல்லை. எமது தலைவர் சோமவன்ஸவுடன் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் இருக்கின்றனர். தமிழர்களின் முக்கியமான பிரச்சினைகள் குறித்து நாம் ஏற்கனவே குரல்கொடுத்து வருகிறோம். எதிர்காலத்திலும் அவ்வாறு குரல் கொடுப்போம். எவ்வாறாயினும், கட்சியின் இப்போதைய நிலைமை குறித்து விரைவில் அறிவிப்போம் - என்றார் அந்த உறுப்பினர்.

## ஐ.நாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்புக்கூறும் வகையிலான சர்வதேச விசாரணை ஒன்றைக் கோரும் தீர்மானமே இன்று வியாழக்கிழமை சமர்ப்பிக்கப்பட இருப்பதாக ஐ.நா. மனித உரிமைகள் சபை நேற்று மாலை தெரிவித்தது.

18ஆவது கூட்டத்தொடருக்கான பிரேரணைகள் உள்ளூர் நேரப்படி இன்று நண்பகல் ஒரு மணிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்ற காலக்கெடு அறிவிக்கப்பட்டிருக்கிறது. இலங்கைக்கு எதிரான பிரேரணையை இன்று காலை கனடா சபையில் சமர்ப்பிக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. பிரேரணைக்கு தீர்மானத்துக்கு அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா உட்பட ஐரோப்பிய நாடுகள் ஆதரவளிக்கும் என்று எதிர்பார்ப்பதாக மனித உரிமைகள் அமைப்புக்கள் தெரிவித்தன.

தனக்கு எதிரான பிரேரணை இன்று சபையில் சமர்ப்பிக்கப்பட இருக்கிறது என்பதை அறிந்து கொண்ட இலங்கை அரச பிரதிநிதிகள் அதனைத் தடுப்பதற்கான முழு முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கின்றன என்று ஜெனீவாவில் இருக்கும் தமிழ்ச் செய்தியாளர் ஒருவர் தெரிவிக்கின்றார்.

கனடாவால் இன்று பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டால் அது அடுத்த வாரம் விவாதத்துக்கு வரலாம் எனத் தெரிய வருகிறது. 18ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் 30ஆம் திகதியுடன் நிறைவடைகிறது.

இந்த பிரேரணை விவாதத்துக்கு வரும் பட்சத்தில் இந்தியா விவாதத்திலோ அல்லது வாக்கெடுப்பிலோ கலந்துகொள்ளாது ஒதுங்கியிருக்கலாம் என ஜெனீவாவில் உள்ள, மனித உரிமை அமைப்புக்களின் பிரதிநிதிகள் கூறுகின்றனர். சீனா இலங்கையைக் காப்பாற்ற உறுதியான நடவடிக்கைகளை எடுக்கக்கூடும் என்றும் அவர்கள் எதிர்பார்க்கின்றனர். எனினும் ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகளின் எண்ணிக்கையே சபையில் அதிகம் இருப்பதால் அவற்றின் ஆதரவு எந்தப் பக்கம் இருக்கிறதோ அதன் அடிப்படையிலேயே பிரேரணை வெற்றிபெறுவது தங்கியுள்ளது என்றும் அவை தெரிவித்துள்ளன. (உ)

## ஜே.வி.பிக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாற்றங்களைச் செய்ய வேண்டுமெனவும் ஜே.வி.பி. அதிருப்தியாளர்கள் கட்சித் தலைமையிடம் சுட் டிக்காட்டியுள்ளனர். எனினும் அதற்குக் கட்சித் தலைமை மறுத்துள்ளது. இதனை அடுத்து அதிருப்தியாளர்கள் சிலர் கட்சியிலிருந்து வெளியேறி புதிய அரசியல் கட்சியொன்றைப் பதிவுசெய்யத் தீர்மானித்துள்ளனர்.

ஜே.வி.பி. அரசியல் குழுவின் முக்கிய உறுப்பினராகக் கருதப்படும் பிரேம்குமார் குணரட்னம் தலைமையின் கீழ் இந்த அதிருப்தியாளர் குழு இயங்குவதாகக் கூறப்படுகிறது. இவர் ஒரு தமிழர் என்றும் அரச ஆதரவுப் படைகளின் அச்சுறுத்தல் காரணமாக ஆஸ்திரேலியாவில் இருந்துவிட்டு அண்மையில் நாடு திரும்பியிருந்தார் என்றும் கூறப்படுகிறது.

அதிருப்தியாளர் குழுவில் ஜே.வி.பி. அரசியல் குழு உறுப்பினரும், மகளிர் அணித் தலைவியுமான செல்வி திமுத்து ஆட்டிகல, கல்விக்குழு மற்றும் அரசியல் குழு உறுப்பினர் புபுது ஜாகொட, மத்திய குழு உறுப்பினர் வருண ராஜபக்ஷ ஆகியோர் உள்ளடங்குகிறார்கள் எனத் தெரிகிறது.

தேசிய இனப்பிரச்சினை மற்றும் தமிழர் பிரச்சினையில் ஜே.வி.பி. நிலையான கொள்கையொன்றைக் கடைப்பிடிக்காமை குறித்தே கட்சிக்குள் உட்பூசல் ஏற்பட்டதாக அதிருப்தியாளர் குழுவின் முக்கியமான உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, கட்சியிலிருந்து வெளியேறி புதிய அரசியற் கட்சியொன்றை ஆரம்பிப்பதற்குத் தீர்மானித்திருக்கும் சிரேஷ்ட உறுப்பினர்களைக் கட்சியிலிருந்து இடைநிறுத்துவதற்கு கட்சித் தலைமை மந்திராலோசனைகளை நடத்தி வருவதாகத் தெரிகிறது.

ஜே.வி.பியின் மூத்த உறுப்பினர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தலைவர் சோமவன்ஸவுக்கு முழுமையான ஆதரவைத் தெரிவித்துள்ளார்கள். எனினும் கட்சியின் பெரும்பான்மையான கிளைகள் மற்றும் இதர அணிகள் அதிருப்தியாளர்களுக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளன. (உ-சி)

## தலைவர்களுடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர்களையும் சந்தித்துப் பேச்சு நடத்தி வருகிறார். அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான துணைச் செயலாளர் ரொபேர்ட் ஓ பிளேக்கை நேற்றுமுன்தினம் மரியாதை நிமித்தம் ஜனாதிபதி சந்தித்துப் பேசினார்.

போர்க் குற்றச்சாட்டுக்கள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுக்களின் முன்னேற்றம் குறித்து இந்தச் சந்திப்பின் போது ஆராயப்பட்டன. கடந்த வாரம் இலங்கை வந்திருந்த பிளேக், அரசும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பும் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்க இருப்பதாக தான் அறிந்திருந்தார் என்று தெரிவித்திருந்தார்.

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதியில் கிளிங்ரன் உருவாக்கி நிர்வகிக்கும் 'கிளிங்ரன் குளோபல் இனிஷியேட்டிவ்' என்ற தொண்டு நிறுவனத்தின் வருடாந்த மாநாட்டிலும் ஜனாதிபதி அதே தினத்தில் கலந்து கொண்டார். அங்கு கிளிங்ரனால் ஜனாதிபதிக்குப் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

எனினும் இந்தச் சந்திப்பில் அரசியல் எதுவும் பேசப்படவில்லை என்று 'கிளிங்ரன் குளோபல் இனிஷியேட்டிவ்' அதிகாரிகள் திட்டவட்டமாகத் தெரிவித்தனர்.

நைஜீரிய ஜனாதிபதியையும் மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசினார். இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக, கலாசார உறவுகளைப் பலப்படுத்துவது குறித்து அப்போது ஆராயப்பட்டது.

சந்திப்பில் உடன் இருந்த வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்து நைஜீரிய ஜனாதிபதிக்கு விளக்கினார். (உ)

## இலங்கை அர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழர்களின் பிரச்சினை முடிந்துவிட்டது; இனிமேல் இனப்பிரச்சினை என்று ஒன்று இந்த நாட்டில் இல்லை என்று உலகுக்குச் சொல்லவே அரசு விரும்புகின்றது. கடந்த இரண்டு ஆண்டுகளாக அரசு அதற்கு முயன்றபோதும், அரசால் அது முடியவில்லை. முன்னர் இருந்த நிலையைவிட அரசு இன்று மிகவும் இக்கட்டான நிலைக்குள் சிக்கிக்கொண்டுள்ளது.

ஜெனீவாவில் நடைபெற்றுவரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத் தொடரில் பல அமைச்சர்களை அனுப்பி, இந்த நாட்டில் தமிழர்களுக்குப் பிரச்சினை ஏதுமில்லை என்று சொல்வதற்கு அரசு முயன்றது.

ஐ.நா. கூட்டத் தொடர் ஆரம்பித்த முதல் நாளிலேயே, தமிழர்கள் இந்த நாட்டில் சம மதிப்புப் பெற்ற குடிமக்களாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்று தெரிவித்திருந்தார் இலங்கைக் குழுவுக்குத் தலைமை தாங்கிய அமைச்சர் மஹிந்த சமரசிங்க. இதை அறிந்ததும் ஒரே இரவில் உண்மையை விளக்கி சர்வதேச சமூகத்துக்கு அறிக்கை ஒன்றை விடுத்தோம்.

அமைச்சர் சொன்னவை அனைத்தும் பொய்யானவை, சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் கருத்துக்கள் என்பதைப் பகிரங்கப்படுத்தினோம். இதனால் அரசுக்கு மேலும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. 11ஆம் சுற்றுப் பேச்சின் போது அவர்கள் அது பற்றி முறைப்பட்டார்கள். அந்த அறிக்கையால் தமக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகக் கூறிய அவர்கள் ஏன் அப்படிச் செய்தீர்கள் என்றும் கேட்டார்கள்.

இதற்குப் பதிலளித்த எமது தலைவர் சம்பந்தன், ''அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்ததில் ஒரு விடயமாவது தவறானது என்று சுட்டிக்காட்ட முடியுமா?'' என்று அவர்களிடம் முகத்துக்கு நேரே கேட்டார். அதற்கு அவர்கள் மௌனம் சாதித்தனர்.

''நீங்கள் பொய்ப் பிரசாரம் செய்யும்போது, அது எமது மக்களையும் அவர்களின் உரிமைகளையும் பாதிக்கும்போது நாம் மௌனமாக இருப்போம் என்று நினைக்கவேண்டாம். இந்த முறை அறிக்கை மட்டுமே விடுத்தோம். அடுத்த தடவை நேரடியாக ஜெனீவா வந்து சர்வதேச சமூகத்துக்கு உண்மையைப் புரிய வைப்போம்'' என்றார் சம்பந்தன்.

உடனே அவர்கள் ''சரி! சரி! அதை ஒரு பக்கம் வைத்துவிட்டு பேச்சைத் தொடர்வோம்'' என்று கூறி நழுவி விட்டார்கள்.

அரசுடன் கூட்டமைப்பு மீண்டும் ஆரம்பித்துள்ள பேச்சுத் தொடர்பில் பலருக்கு சந்தேகங்கள், கேள்விகள் இருக்கின்றன. முன்பு நடந்த பேச்சுக்களில் ஒன்றுமே நடக்காத நிலையில், அரசு உரிய பதிலைத் தராத நிலையில் தான் நாம் அரசுடனான பேச்சை இடைநிறுத்தினோம்.

அதைத் தொடர்ந்து அரசு மீது சர்வதேச சமூகம் கடும் அழுத்தங்களைக் கொடுத்ததாலும் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தாம் ஆக்கபூர்வமாகச் செயற்படுகிறோம் என்று சர்வதேச சமூகத்துக்கு காட்டவேண்டிய நிர்பந்தத்தாலும் மீண்டும் பேச்சைத் தொடங்க அரசு சம்மதித்தது.

எப்படியான சூழலில் நாங்கள் திரும்பவும் பேச முடியும் என்று சொல்லியிருந்தோமோ அந்தச் சூழ்நிலை உருவாக்கப்பட்டதன் காரணமாகத்தான் நாம் திரும்பவும் பேச்சுக்குப் போனோம்.

அதற்காக எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுவிட்டன என்று அர்த்தப்படுத்த முடியாது. நாம் எழுத்தில் கேட்டதை அவர்கள் கொடுத்துவிட்டார்களா என்று கேட்கிறார்கள்? அப்படியல்ல; முன்னர் பேச்சுக்களால் எந்தப் பயனும் இருக்கவில்லை. இன்று மாற்றம் ஏற்பட்டுள்ளது. நாங்கள் முன்வைக்கும் கேள்விகளுக்கு அரசின் நிலைப்பாடு இதுதான் என்று பொறுப்புடன் பதில் சொல்கிறார்கள்.

காலத்தைக் கடத்துவதற்காக எங்களுடனான பேச்சை உலகுக்குக் காட்டலாம் என்று இனியும் அரசு நினைக்க முடியாது. அப்படி நடந்தால் நாம் பேச்சிலிருந்து விலகிவிடுவோம் என்பது அரசுக்கு நன்கு தெரியும்.

எனவே மீண்டும் ஆரம்பித்துள்ள பேச்சு ஆக்கபூர்வமானதாக இருக்க வேண்டும் என்பது அரசுக்கு நன்கு தெரியும்.

ஆயுத பலம் இருந்தபோது மட்டுமே தமிழர்களுடன் தாங்கள் பேச வேண்டும், கேட்டதைக் கொடுக்க வேண்டும் என்று நினைத்தவர்கள் இப்போது நிலைமை அப்படியானதல்ல என்பதைப் புரிந்து வைத்துள்ளனர்.

கூட்டமைப்பின் பின்னால் தமிழ் மக்கள் திரண்டிருப்பதன் காரணத்தால், ஒட்டுமொத்த தமிழர்களின் ஜனநாயக பலம் கூடியிருப்பதால் இனியும் பேசிப் பேசிக் காலத்தைக் கடத்த முடியாது என்பதை அவர்கள் புரிந்து வைத்துள்ளனர்.

அதற்காக இனிமேல் காலத்தை அரசு இழுத்தடிக்க மாட்டாது என்று நான் கூறமாட்டேன். இப்போதும் ஒரு தீர்வைத் தமிழர்களுக்குக் கொடுக்க அரசுக்கு மனமில்லாமல்தான் இருக்கிறது.

தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஏகோபித்த ஆதரவை அளித்ததன் காரணமாகத்தான் தமிழ்த் தேசியக் கூடமைப்புடன் அரசு பேச வேண்டும் என்று உலக நாடுகள் இன்று அரசை நிர்ப்பந்திக்கின்றன. அதனை கல்முனை மக்கள் இன்னும் பலப்படுத்த வேண்டும்.

சர்வதேச அரங்கில் அரசுக்கு எதிராக எழும்பியுள்ள போர்க் குற்றச்சாட்டுக்கள், மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் என்பவற்றால் ஏற்படும் நிர்ப்பந்தங்களில் இருந்து தப்புவதற்கு, இவற்றுக்கெல்லாம் காரணமான அடிப்படைப் பிரச்சினையைத் தீர்த்து வையுங்கள் என்று சர்வதேச சமூகம் இலங்கை அரசை வலியுறுத்துகின்றது. அதுவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசித்தான் பிரச்சினையைத் தீர்க்கும்படியும் சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்கிறது.

63 வருடகாலமாக நாம் செய்துகொண்டிருக்கும் போராட்டத்தின் உச்சகட்டமாக எமது மக்களின் பலத்தால் எமது மக்களின் பிரதிநிதிகளாக இன்றைய பேச்சில் நாம் பங்கேற்று வருகின்றோம் - என்றார். (உ-30)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## நடராஜா மாணிக்கம்



வேலணை, பன்னம்புலத்தைப் பிறப்பிடமாகவும், வேலணை மேற்கு, 6ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா மாணிக்கம் நேற்று (21.09.2011) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜாவின் அன்பு மனைவியும், இராசலிங்கம், புனிதவதி, தனேஸ்வரி, காலஞ்சென்ற ராஜேஸ்வரி மற்றும் யோகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயும், சந்திரவதனி, கனகலிங்கம், சிவபதம், விநாயகமூர்த்தி, பொன்னையா ஆகியோரின் பாசமிகு மாமியும், பத்மஸ்ரீ, விமலஸ்ரீ, ஜெயஸ்ரீ, விஜயஸ்ரீ, கமலஸ்ரீ, இராஜஸ்ரீ, நாகதீபன், லோகதீபன், நாகசீலன், அகிலன், சித்திரா, வேளாங்கயன், துஷ்யந்தன், சுகிர்தா, அச்சுதன், அன்பழகி, தயாளன், சர்மிளா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.09.2011) வியாழக்கிழமை பி.ப. ஒருமணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேலணை மேற்கு,
6 ஆம் வட்டாரம், வேலணை.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# கண்ணீர் அஞ்சலி



பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சித்திட்ட யாழ். மாவட்ட திட்ட முகாமைத்துவப் பிரிவில் நிதி மற்றும் கண்காணிப்பு உத்தியோகத்தராகக் கடமைபுரியும் திரு. அ.ஜஸ்ரின் உதயகுமார் அவர்களின் பாசமிகு தாய்

**திருமதி
அந்தோனிப்பிள்ளை றோசமுத்து**

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கும் அதேவேள்ள அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
மீள் எழுச்சித்திட்டம்
மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.

பிரதித்திட்டப் பணிப்பாளர்,
உத்தியோகத்தர்

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
A/L எழுதிய மாணவர்கள், மற்றும் இம்முறை
பல்கலைக்கழக நுழைவு மாணவர்களுக்கான
இலவச ஆங்கில இரண்டுநாள் வகுப்பு
அனுமதி, புத்தகம், மற்றும் சான்றிதழ் இலவசம்
பிரிவு 1 : 22.09.2011 காலை 11-1 மற்றும் 23.09.2011 காலை 11-1
பிரிவு 2 : 24.09.2011--12.30-2 மற்றும் 25.09.2011--12.30-2
MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

# பிரதேச கலை இலக்கிய விழாவில் ஐவர் விருது வழங்கி கௌரவிப்பு

## வடமராட்சி கலாசாரப் பேரவை ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப்.22

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச கலாசாரப் பேரவையின் பிரதேச கலை, இலக்கிய விழாவும், திருவுடையாள் பிரதேச மலர்-03 வெளியீட்டு விழாவும் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளும் இந்த விழாவில் இலக்கிய சமூக மேம்பாட்டுக்காக சேவையாற்றிய ஐவருக்கு கலைவாரிதி மற்றும் சமூகச் சுடர் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது.

கலைவாரிதி விருதை கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியர் செல்லையா யோகராசா, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஓய்வுபெற்ற விரிவுரையாளர் செல்லையா குமாரசாமி, நாதஸ்வரமேதை சண்முகவடிவேல் ஜெயநாதன், பாரம்பரிய கலைத்துறைக்காக வைரமுத்து வேலாயுதம் ஆகியோர் பெறுவர். கல்வி அபிவிருத்தி சமூகப் பணிகளுக்காக நடேசு பாஸ்கரன் சமூகச் சுடர் விருது பெறுகிறார்.

மேலும் பிரதேச கலை, இலக்கியப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதோடு கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (ஒ-எ-7)

பதிவுகள் நடைபெறுகிறது NIBM
அரச சான்றிதழுடனான கற்கை நெறிகள்
சிங்கள மொழிக்கற்கைநெறி
கணினிக்கற்கைநெறி
ஆங்கிலக்கற்கைநெறி
மற்றும்
வியாபாரக்கற்கை நெறி
077 071 6974 , 021 222 0360
No-40 College Road , Jaffna

கூலர் வான்
வாடகைக்கு
விடப்படும்.


தொடர்பு: 0779238564

விசேட கருத்தரங்கு
சனிக்கிழமை (24.09.2011) நடைபெறவிருக்கும் 1000 பாடசாலை ஆசிரியர் தெரிவுக்குரிய பொது உளச்சார்பு, கணிதம் விஞ்ஞானம், IT விடயங்களுக்கானது.
வெள்ளி (23.09.2011)
காலை 9 மணி தொடக்கம் பி.ப. 3 மணி வரை
309 2/1, காலி வீதி, வெள்ளவத்தை.
(பூபாலசிங்கம் புத்தகசாலை அருகே)

புதிய பிரிவு ஆரம்பம்
A/L - 2013
வரலாறு
பத்மன் MA (SL.), MA (In.)
24.09.2011
மு.ப
10 மணி
DMI JAFFNA

# மரண அறிவித்தல்

## இசிதோர் திருச்செல்வம்



சென்ஜேம்ஸ் வீதி, பலாலி தெற்கு வசாவிளானைப் பிறப்பிடமாகவும் இலக்கம் 11, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இசிதோர் திருச்செல்வம் (21.09.2011) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இசிதோர் -இன்னேசத்தின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - இன்னேசத்தின் அன்பு மருமகனும் ராணிமலரின் அன்புக் கணவரும் ரவி, பபி, டயஸ் (உரிமையாளர் நியூ நெல்சன் லேணர்ஸ்), மேரி ஜக்குலின் (லலி) ( ஆசிரியை தர்மக்கேணி அ.த. க.பா.), யசோ, லெனின், (B.A பிரான்ஸ்), பிரியா, திலீப் ஆகியோரின் ஆருயிர்த் தந்தையும் சீலன், அன்ரன், ராஜேஸ், பவானி, தூரிகா ஆகியோரின் பாசமிகு மாமனும் டிஜான்சியா, டிவின்சியா, தனுஸ்ரன், விதுஷனா, நிதுஷன், கரன்சியா, திஷாந், அனோஜ், அபிஷேக், அகிசயன், பிரவீன் ஆகியோரின் பாசமிகு பேரனும் மேரியசிந்தாவின் அத்தானும் ரகுராஜின் சகலனும் அனிஸ்ரனின் பெரியப்பாவும் காலஞ்சென்றவர்களான சலோமை, அரியமுத்து மற்றும் ஸ்ரெனிஸ்லாஸ், சூசைப்பிள்ளை, அருளம்மா, மங்களம் ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.09.2011) வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல: 11, பழைய பூங்காவீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

எமது நிறுவனத்தில் கொள்வனவு செய்த 5 வருட உத்தரவாதமுடைய
உழவு இயந்திர இழுவைப் பெட்டி (Trailor)
Model: Surendra க்கு எதிர்வரும்
30.09.2011 ,01.10.2011 திகதிகளில்
Free Service செய்து கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு
JOHN DEERE
MASSEY FERGUSON
SAJE MOTORS
DEALES IN Brand-new & Recondition Tractors, Motorcycle, Spareparts, and Agriculture products

புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய அனைத்து மாணவர்களுக்கும் நல்வாழ்த்துக்கள்
NALIN Information Technologies Pvt Ltd.
புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கு
NALIN CITY SHOW ROOM
Laptop, Branded PC, Assemple PC,
எந்த கணனி
நிறுவனமும் வழங்காத
விலைக்கழிவுகளில்
நளின் நிறுவனம் வழங்குகின்றது.( 3 நாட்கள் மட்டுமே)

Free
Computer Table
Head Phone
Delivery
Service
356,Luxan Plaza, Kasthuriyar Road, Jaffna.
www.nit.lk nalin@nit.lk Tel: 021 222 0838/ 0777667975 Fax: 021 222 4994
Nalin Information Technology Pvt Ltd
Palaly Road Parameswara Junction, Thirunerveli
Tel: 021 222 1166/ 0777667974

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.09.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org